www.padippakam.com

1 - 15 ஆகஸ்டு 1997 ரூ. 3.50

ஐக்கிய முன்னணி: பூசல் முற்றுகிறது

# புதிய ஜனநாயகம்




படிப்பகம்

www.padippakam.com

# கள்ளச் சாராயத்திற்கு எதிராக...

விருதாசலம் வட்டத்தில் திருமுதுகுன்றம் அருகிலுள்ள கிராமம் ஆலிச்சிகுடி. இவ்வூரில் பல ஆண்டுகளாக கள்ளச்சாராய விற்பனை நடந்து வந்தது. இதற்கு எதிராக புரட்சிகர மாணவர் - இளைஞர் முன்னணி மக்கள் ஆதரவுடன் போராடி வந்தது. எனினும் காவல் துறையின் பாதுகாப்போடு கள்ளச்சாராய விற்பனை தொடர்ந்தது. இதை அம்பலப்படுத்தி சுவரொட்டி, சுவரெழுத்து இயக்கம் எடுக்கப்பட்டது. சுற்றுப்புற கிராமங்கள் முதல் மாவட்ட தலைநகர் கடலூர் வரை சுவரொட்டிகள் ஒட்டப்பட்டன.

வேறு வழியற்ற போலீசு கள்ளச்சாராய கிரிமினலை காவல் நிலையம் அழைத்துச் சென்றது. "சாராயம் விற்கவில்லை. பு.மா.இ.மு. அமைப்பாளருக்கும் தனக்கும் தனிப்பட்ட விரோதம் உள்ளது. எனவே வேண்டுமென்றே சுவரொட்டி ஒட்டிவிட்டான்" என சாராய கிரிமினலிடம் எழுதி வாங்கிக் கொண்டு சில மணி நேரங்களிலேயே விட்டுவிட்டனர்.

சில நாட்கள் கள்ளச் சாராய விற்பனையை நிறுத்தி வைத்திருந்த பேர்வழி மீண்டும் தொடங்கினான். இதை கண்காணித்து வந்த பு.மா.இ.மு. வினர் 23.6.'97 அன்று சாராயம் கொண்டு வரும் போதே கையும் களவுமாகப் பிடித்து, ஊர்வலமாக அழைத்துச் சென்று காவல் நிலையத்தில் ஒப்படைத்து வழக்குப் பதியக் கோரினர்.

தேள் கொட்டிய திருடனாக விழித்த காவல் துறை ஆய்வாளர் ராமன், 'நீங்கள் புகார் தர வேண்டாம், நாங்களாகவே பெரிய வழக்காகப் போடுகிறோம்' என நைச்சியமாகப் பேசினார். தோழர்களோ, ஊராட்சி மன்ற தலைவர் தந்த புகாரையும் இணைத்து அமைப்பு சார்பில் புகார் எழுதிக் கொடுத்தனர்.

இதனால் ஆத்திரம் தலைக்கேற, 'நீங்கள் சாராய வியாபாரியைப் பிடிக்க உரிமையில்லை' என மிரட்டியதோடு 'அடிக்கவும் செய்துள்ளீர்கள்' என மிரட்டி விரட்டப் பார்த்தது போலீசு. தோழர்கள் வழக்கு பதிவு செய்யும்படி உறுதியாக நிற்கவே வேறு வழியின்றி புகாரை ஏற்று வழக்குப் பதிந்தது.

தொடர்ந்து மக்கள் ஆதரவுடன் கள்ளச் சாராயத்திற்கு எதிரான பிரச்சார இயக்கம் நடைபெறுகிறது.

பு.மா.இ.மு.,
திருமுதுகுன்றம்

# பா.ம.க. தாழ்த்தப்பட்டோரின் நண்பனா?

"ஆதி திராவிட மக்களுக்கு குடியிருப்பு வசதி செய்து தருவதற்காக நிலம் கையகப்படுத்த தர்மபுரி மாவட்டம், பென்னாகரம் வட்டம், சிகர்ஹல்லி கிராமத்தில் சில தனியாரிடமிருந்து அதனைப் பெற முன்பிருந்த அரசு முயற்சிகளை மேற்கொண்டது. ஆனால் அந்த நிலத்தின் சொந்தக்காரர்கள் உயர்நீதி மன்றம் வரை சென்று தடையாணை பெற்றார்கள். நிலச் சொந்தக்காரர்கள் தொடுத்த வழக்கும் தள்ளுபடி செய்யப்பட்டு, தடையாணையும் உயர் நீதி மன்றத்தால் விலக்கிக் கொள்ளப்பட்டது. உயர் நீதிமன்றம் வழக்கைத் தள்ளுபடி செய்து கிட்டத்தட்ட மூன்றாண்டுகள் ஆகியும், கையகப்படுத்தப்பட்ட நிலத்தை ஆதி திராவிட மக்களுக்கு வீடு கட்டுவதற்காக எடுத்துக் கொள்ள இயலவில்லை. காரணம், அந்த நிலத்தை அரசு எடுத்துக் கொள்ள இயலாத அளவிற்கு ஒரு கட்சியைச் சேர்ந்தவர்கள் தொடர்ந்து போராட்டம் நடத்துகிறார்கள். ஆதி திராவிட மக்களுக்காக வீடு கட்டித் தரும் இந்த அரசின் திட்டத்திற்கு உதவி செய்யக் கூடிய வகையில் சில தனிப்பட்ட நில உடைமையாளர்களுக்கு துணை போகாமல், அந்தக் கட்சியைச் சேர்ந்தவர்கள் அரசின் முயற்சிகளுக்கு துணை நிற்கவேண்டுமென்றும், தொடர்ந்து அவர்கள் இந்த முயற்சிகளுக்கு குந்தகம் விளைவிக்காமல் அக்கட்சியின் தலைமை அவர்களுக்கு தாக்கீது பிறப்பிக்க வேண்டும் என்றும் அரசு சார்பில் தெரிவித்துக் கொள்வதுடன் இதற்கும் பயன் ஏற்படாவிடில் அரசு அந்த நிலங்களை ஆதி திராவிட மக்களுக்கு குடியிருப்பு வசதி செய்ய உரிய நடவடிக்கை எடுப்பது தவிர்க்க முடியாதது ஆகிவிடும் என்றும் அறிவிக்கப்படுகிறது."

— இப்படி மொட்டையாக ஒரு அரசு அறிவிப்பு பத்திரிக்கைகளில் வந்துள்ளது. நீதிமன்றம் அனுமதித்த பின்னும், அரசு எடுத்துக் கொள்ள முடிவு செய்த பின்னர் மேல்சாதி வெறியர்கள் கலவரம் செய்து வருகின்றனர். கை கட்டி சேவகம் செய்கிறது. மொன்னையாக குறிப்பிட்டுள்ள அந்தக் கட்சி பாட்டாளி மக்கள் கட்சி.

தென் மாவட்டங்களில் தேவர்சாதி வெறியர்களின் கொலை வெறியைக் கண்டித்து பள்ளர்சாதி தாழ்த்தப்பட்ட மக்களுக்கு ஆதரவு தரும் அதே பா.ம.க. தான் தனது சாதி ஆதிக்கப் பகுதிகளில் ஆதி திராவிட மக்கள் மீது கொலை வெறித் தாக்குதலை தொடர்ந்து நடத்துகிறது.

கோடியள்ளி பஞ்சாயத்து தலைவர் டி. மணி, பெண்ணாகரம் சேர்மன் சி.வி. மாது, (இவர் பா.ம.க.), இவர்களின் தலைமையில் வன்னிய சாதி வெறிகும்பல் 50 பேர், கம்பு, கத்திகளுடன் சிகர்ஹல்லி கிராமத்திற்கு 15.6.'97 மாலை 4 மணிக்கு சென்றனர். அக்கிராம ஆதி திராவிட மக்களிடம் அவர்களுக்கு வீடு கட்ட அரசு கையகப்படுத்த உள்ள '502/2 பட்டா எண் கொண்ட நிலத்தை வேண்டாம் என எழுதிக் கொடுங்கள். இல்லை என்றால் ஊருக்கு நெருப்பு வைப்போம், பெண்களை சேலை உருவி ஓடஓட கற்பழிப்போம்' என கீழ்த்தரமாக திட்டிக் கொண்டே தாக்குதலில் இறங்கினர். கண்ணில் பட்டவர்களை எல்லாம் துன்புறுத்தினர்.

ஒரு சிலர் தப்பி காடு வழியாக பெண்ணாகரம் வந்து காவல் நிலையத்தில் புகார் தந்தனர். காவல் துறை எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை.

செய்தி கேள்விப்பட்ட விவசாயிகள் விடுதலை முன்னணி தோழர்கள் மறுநாள் காலை சாலை மறியலில் இறங்கினர். 300 பேர் கலந்து கொண்டனர். பெண்ணாகரம் மொத்த போக்குவரத்தையே பாதிக்கும்படி தோழர்கள் குவில், வெங்கடேசன் தலைமையில் நாள் முழுதும் மறியல் நடந்தது. தோழர்கள் சாமிகண்ணு, சிவாஜி ஆனஸ்ட் உரையாற்றினார்கள். அம்பேத்கர் அமைப்பின் ராஜேந்திரன், சி.பி.ஐ.யின் சிசுபாலன் ஆகியோர் வாழ்த்திப் பேசினர். மாலை 4 மணி வாக்கில் ஆர்.டி.ஓ., தாசில்தார், டி.எஸ்.பி. உட்பட அதிகாரிகள் வந்து தாக்கியவர்கள் மீது நடவடிக்கை எடுப்பதாக எழுதிக் கொடுத்த பின்பே மறியல் முடித்துக் கொள்ளப்பட்டது.

ஆனாலும் பாட்டாளி மக்கள் கட்சியினரால் தாழ்த்தப்பட்ட மக்களின் உயிருக்கும் உடைமைக்கும் ஆபத்து தொடர்கிறது. டி. மணி மற்றும் அவனைச் சார்ந்த ஊர் வன்னிய சாதி வெறியர்கள், முன்னணியாளர்களை குறிவைத்து தாக்கி அழிப்பதற்கு திட்டமிட்டு வருவதாகத் தெரிகிறது.

தோழர் சிவாஜி அவர்கள் தாழ்த்தப்பட்டவர்களுக்கு பட்டா, வீடு வாங்கித்தர முன்னணியாக இருந்தார் என்பதால் அவரை கொலை செய்யப் போவதாகவும், தென் மாவட்டங்கள் போல் சாதிக் கலவரம் வந்தாலும் விடமாட்டோம் எனவும் கூறி வெறி கொண்டு திரிகின்றனர். இவை எல்லாம் பா.ம.க. வின் நேரடி வழிகாட்டுதலில் நடக்கிறது.

மறியல் நடந்த போது, வி.வி.மு. விற்கு தொடர்பில்லாத அருகாமை கிராம மக்கள் வீடு வீடாக அரிசி, மாவு வாங்கி, 2 அண்டா கூழ் காய்ச்சி மறியல் செய்தவர்களுக்குக் கொடுத்து மதிய பசியாற்றினார்கள் என்பது சிறப்பு. நக்சல்பாரி அமைப்பினர் இப்படி மக்கள் ஆதரவுடன் வெற்றி பெறுவதை தடுத்து விடுவதற்காகவே, "இனி இப்படி திடீர் மறியல் செய்யக் கூடாது" என எச்சரிக்கை விடுத்துள்ளனர், காவல்துறை எஸ்.பி. மூலமாக.

அதன் பின்னர் போராட்டத்தின் விளைவாக 11 பேரை தீண்டாமை தடுப்புச் சட்டத்தின் கீழ் கைது செய்துள்ளனர்.

**தகவல்: வி.வி.மு., பெண்ணாகரம்**



படிப்பகம்

www.padippakam.com


# புதிய ஜனநாயகம்

*மார்க்சிய — லெனினிய அரசியல் ஏடு*

தொகுதி: 12

இதழ்: 17 - 18

16 ஜூலை'97 - 15 ஆக.'97

உள்நாடு:
தனி இதழ்: ரூ. 3.50
ஆண்டு சந்தா: ரூ. 84.00

வெளிநாடுகள்
(வான் அஞ்சலில்)
ஆண்டு சந்தா: US$ 18

அட்டை ஓவியம்: கரோ

படைப்புகள் அனுப்பவும்
மற்றும்
அனைத்துத் தொடர்புக்கும்
புதிய ஜனநாயகம்,
அஞ்சல் பெட்டி எண்: 6015,
அசோக் நகர்,
சென்னை - 600 083.


## இந்த முரண்நிலையின் பொருள் என்ன?

நேர் எதிரெதிரான முரண்நிலையை இந்திய அரசியலில் காண்கிறோம். இந்திய 'சுதந்திரத்'தின் வெள்ளி விழா ஆண்டில் தாழ்த்தப்பட்டவன் அரசுத் தலைவராக்கப்படுவது பொருத்தமாக இருக்கும் என்று கூறி, அதற்குத் தகுந்தவர் என்று கே.ஆர். நாராயணன் ஏறக்குறைய ஏகமனதாகத் தேர்ந்தெடுக்கப்படுகிறார். வலது தீவிரவாத இந்து - மராட்டிய பாசிச சிவசேனா தவிர, பாரதீய ஜனதா - ஆர்.எஸ்.எஸ். பரிவாரங்கள் முதல் "இடது தீவிரவாத" வினோத் மிஸ்ரா குழு, சி.பி.எம் வரை அனைத்துக் கட்சிகளின் ஆதரவையும் பெற்றுத் தாழ்த்தப்பட்ட சாதிக்காரர் என்று அடையாளங்கண்டு, அவர் அரசுத் தலைவராக்கப்படுகிறார். அதேசமயம் ஒரு தாழ்த்தப்பட்டவன் உள்ளூராட்சித் தலைவனாவதா, கூடாது என்று வெறிகொண்ட ஆதிக்க சாதியினரால் தலை துண்டிக்கப்பட்டு கோரமாகக் கொல்லப்படுகிறான். இன்னொருபுறம், மும்பை பெருநகரில் பாசிச சிவசேனா குண்டர்கள் அம்பேத்கர் சிலைக்கு செருப்பு மாலை போட்டு அவமதிக்கின்றனர். அதைக் கண்டித்து ஆவேசங் கொண்ட தாழ்த்தப்பட்ட மக்கள் ஆர்ப்பாட்டம் நடத்தியபோது, எவ்வித எச்சரிக்கையும் இல்லாமல் காக்கை குருவியைச் சுடுவதைப் போல பதினோரு பேரைச் சுட்டு போலீசார் படுகொலை செய்கின்றனர். அதைக் கண்டித்து பொது வேலை நிறுத்தம் நடத்தியபோதும் துப்பாக்கிச் சூடு. சிவசேனை பாசிச குண்டர்களின் தாக்குதலுக்குத் தாழ்த்தப்பட்டவர்கள் பலியிடப்படுகிறார்கள். மதுரை - மேலவளவு படுகொலையைக் கண்டித்துப் பொது வேலை நிறுத்தம் செய்தவர்களும், பெரியாரின் சீடன், அம்பேத்கரின் ஆதரவாளன் எனப் பீற்றிக் கொள்ளும் கருணாநிதி அரசால் குண்டர்கள் சட்டம், தேசிய பாதுகாப்புச் சட்டத்தில் சிறையிலடைக்கப்படுகின்றனர்.

இந்திய அரசியலிலும், சமுதாயத்திலும் நிலவும் இந்த முரண்நிலையின் பொருள் என்ன? இந்திய ஆளும் வர்க்கத்தினரும், ஆதிக்க சாதியினரும் அவர்களின் பிரதிநிதிகளான ஓட்டுக் கட்சிகளும் ஒரே நோக்கத்துடன் இரட்டை வேடம் போடுகிறார்கள். தாழ்த்தப்பட்டவன் சுயமரியாதையுடைய மனிதனாகத் தலைநிமிர்ந்து விடாமல் சாதி, தீண்டாமையால் ஒடுக்கி வைக்கப்பட்டிருப்பது நீடிக்க வேண்டும்; அதேசமயம் அவர்களுக்குச் சலுகைகளும் சமத்துவமும் அளித்து இந்த நாடாளுமன்ற ஜனநாயக அமைப்புக்குள்ளாகவே தங்களது நலன்கள், உரிமைகளை அடைந்துவிட முடியும் என்று நம்ப வைத்துக் கழுத்தறுக்க வேண்டும். இதற்காகவே ஒரு விசுவாசியான தாழ்த்தப்பட்டவனான நாராயணன் அரசுத் தலைவனாக்கப்படுகிறான். சாதி ஆதிக்கத்துக்கு அடிபணியாத உள்ளூராட்சித் தலைவனான முருகேசன் தலைவெட்டப்படுகிறான்.

கே.ஆர். நாராயணனைப் பற்றி தாழ்த்தப்பட்டவரின் பிரதிநிதி என்றோ தலைவர் என்றோ மாயை கொள்ள வேண்டியதில்லை. அன்று ஜெகஜீவன் ராமும், இன்று ராம் விலாஸ் பஸ்வானும் மந்திரியாயிருக்கிறார்கள் என்றால், அவர்களும் ஆளும் வர்க்கத்தினருக்கு சேவை செய்பவர்தாமெனினும், அவர்கள் கீழிருந்து அரசியல் களத்திற்கு வந்தவர்கள். ஆனால் கே.ஆர். நாராயணனை அப்படிக்கூட பார்க்கமுடியாது.

தாழ்த்தப்பட்டவர் என்பதற்காக சி.பி. இராமசாமி அய்யரால் கல்லூரி விரிவுரையாளர் பதவி மறுக்கப்பட்டது தவிர, அம்பேத்கரைப் போன்று இளமையிலிருந்தே தீண்டாமைக் கொடுமையை அனுபவித்தவரல்ல. மற்றபடி பார்ப்பன - பனியா நிழலிலேயே வளர்ந்தவர். கே.ஆர். நாராயணனின் உறவினர் அனிருதன் நாராயணனைப் பற்றி கூறுவதை இங்கு குறிப்பிட்டே ஆக வேண்டும். "அவர் (கே.ஆர். நாராயணன்) தம்மை அரிசனங்களின் தலைவர் எனக் கூறிக்கொள்ள முடியாது. அவர்களுக்காக அவர் எதையும் செய்யவில்லை. தேர்தலில் தனித் தொகுதியில்கூட மேல் சாதிக்காரர்களின் ஆதரவில்தான் வெற்றி பெற்றார். அவரது வாழ்நிலையும் அணுகுமுறையும் அரிசனங்களுக்கு அந்நியமானவை. அவர் ஒரு அரிசன் பிராமின்." "நாராயணன் எளியவர். ஆனால் காந்தியவாதியல்ல. அவர் சிறந்த ஸ்காட்ச் விஸ்கிதான் குடிப்பார். அவருக்கு வழங்கப்பட்ட கணக்கற்ற வசதிகளை அவர் மறுத்ததில்லை. வாழ்வின் சுக போகங்களை விரும்புகிறவர்."

வெளியுறவுத் துறை அதிகாரியாயிருந்த போதும், அரசியலில் நுழைந்து மந்திரியான பின்பும், கடந்த ஐந்தாண்டுகளாய் அரசு துணைத் தலைவர் பதவியிலிருந்த போதும் தாழ்த்தப்பட்ட மக்களின் நலனுக்காகச் சிறு துரும்பையாவது அசைத்துள்ளாரா? இக்காலகட்டத்தில் தெற்கே தமிழகத்திலிருந்து வடக்கே பீகார், உ.பி. வரை தாழ்த்தப்பட்டவர்கள் மீதான கொடுமைகளும் தீண்டாமைக் கொடூரங்களும் நாளும் பெருகிய வண்ணமிருந்தன. நாராயணனோ மாநிலங்களவையின் சபாநாயகராயிருந்து எல்லா கட்சியினரையும் அரவணைத்துச் சென்றார். சாதியக் கொடுமைகளுக்கு எதிராகத் தப்பித் தவறிக்கூட வாய் திறக்கவில்லை.

கே.ஆர். நாராயணனை எல்லா கட்சியினரும் தாழ்த்தப்பட்டவர் என ஆதரித்த வேளையில், சோ போன்ற பல பார்ப்பனர்களும், ஏன் கே.ஆர். நாராயணனின் சகோதரியுமே வருத்தப்பட்டனர். ஜனாதிபதியாவதற்கான எல்லாவிதத் தகுதிகளும் திறமையும் உள்ளவரை, வெறும் சாதியைக் கூறி ஆதரிப்பதா என ஆதங்கப்பட்டனர்.

தொடர்ச்சி 6-ஆம் பக்கம்

படிப்பகம்

www.padippakam.com

# ஜனதா தள பிளவு:
# ஆட்டங்காணும் ஐ.மு. ஆட்சி

வகுப்புவாத பாரதீய ஜனதாவுக்கும் ஊழல் காங்கிரசுக்கும் எதிரான உண்மையான தேசிய மாற்று என்று கூறிக் கொண்டு கூட்டணி ஆட்சியை நிறுவிய ஜனதா தளம் மீண்டும் பிளவுபட்டுப் போயுள்ளது. அதைவிட, ஜனதா தளம் மற்றும் 13 கட்சிகளின் ஐக்கிய முன்னணி ஆட்சி எப்போதும் கவிழலாம் என்ற தீராத நெருக்கடியில் சிக்கிக் கொண்டுள்ளது. மதச்சார்பின்மை, சமூக நீதி, ஊழல் எதிர்ப்பே தமது லட்சியம் என்று பீற்றிக் கொள்ளும் ஜனதா தளத் தலைவர்களுக்கு பதவிவெறி ஒன்றே இலட்சியம் என்று நிருபணமாகிவிட்டது. அதற்காக நடக்கும் திரைமறைவுச் சதிகளும் குழிபறிப்புகளும், திடீர் திருப்பங்கள் நிறைந்த திரைப்படம் போலத் தொடர்கின்றன.

ஜனதா தளத்தில் நடக்கும் கழுத்தறுப்புகள், பிளவுகளின் பின்னணிதான் என்ன? காங்கிரசுத் தலைவர் கேசரியும், ஜனதா தளத் தலைவராக இருந்த பீகார் முதல்வர் லல்லு பிரசாத் யாதவும் செய்த கூட்டுச் சதியின் காரணமாகவே பிரதமர் பதவியை தான் இழக்க நேர்ந்தது என்று தேவே கௌடா, லல்லுவைப் பழிவாங்கத் துடித்தார். தனது விசுவாசியும் சி.பி.ஐ. இயக்குநருமான ஜோகிந்தர் சிங் மூலம் லல்லு மீதான கால்நடைத் தீவன ஊழல் வழக்கை முடுக்கி விட்டார். பீகார் முதல்வர் லல்லு மீது சி.பி.ஐ. குற்றப் பத்திரிகையைத் தாக்கல் செய்யவும், வழக்கு தொடரவும் மாநில ஆளுநர் அனுமதியளித்தார். முதல்வர் பதவியிலிருந்து அவர் விலக வேண்டும் என்று பாரதீய ஜனதாவும் 'இடதுசாரி'களும் போராட்டங்களை நடத்தினர்.

இந்த நேரத்தில் தேர்தல் ஆணையம், உச்சநீதி மன்ற உத்தரவுப்படி நீண்டகாலமாகப் புறக்கணிக்கப்பட்ட ஜனதா தள உட்கட்சித் தேர்தலை நடத்த வேண்டிய நிர்பந்தம் எழுந்தது. ஜனதா தளத் தலைவராக இருந்து வந்த லல்லு, கட்சிக்குள்ளும் வெளியிலும் பெருகிவரும் எதிர்ப்பால் தலைவர் பதவியைத் தக்க வைத்துக் கொள்வது சிரமம் என்று உணர்ந்து உட்கட்சித் தேர்தலையே புறக்கணித்தார். தேவே கௌடா, ராம் விலாஸ் பஸ்வான் ஆகியோர் லல்லுவுக்கு எதிராக சரத் யாதவை கட்சித் தலைவர் தேர்தலில் இறக்கினர். ஐ.மு. அரசில் அமைச்சர் பதவி தனக்குக் கிடைக்காமல் செய்த லல்லுவைப் பழிவாங்கும் நோக்கத்தோடு சரத் யாதவ் தேர்தலில் போட்டியிட்டு வெற்றி பெற்றார். அதே சமயத்தில், ராஷ்டிரீய ஜனதா தளம் என்ற மாநிலக் கட்சியைத் தொடங்கிய லல்லு, தானே அதன் தலைவராக முடிசூட்டிக் கொண்டார்.

பீகார் சட்டப் பேரவையில் அறுதிப் பெரும்பான்மையாக இல்லாத லல்லுவின் கட்சி, காங்கிரசு, ஜார்கந்து முக்தி மோர்ச்சா மற்றும் சுயேச்சைகள் ஆதரவுடன் சட்டமன்ற ரௌடித்தனங்களுக்குப் பிறகு நம்பிக்கை வாக்கெடுப்பில் வெற்றி பெற்றுள்ளது. 16 எம்.பி.க்களைக் கொண்டுள்ள லல்லு கட்சியின் மூவர் மத்திய மந்திரிகளாக உள்ளதால், ஐக்கிய முன்னணியில் அங்கம் வகிக்க விரும்புவதாகவும், குஜ்ரால் அரசை ஆதரிப்பதாகவும் லல்லு கூறுகிறார்.

லல்லுவின் ஆதரவில் பீகார் மாநிலத்திலிருந்து மாநிலங்களவைக்குத் தேர்வு செய்யப்பட்டுள்ள பிரதமர் குஜ்ரால் லல்லு கட்சியை ஐ.மு.வில் சேர்த்துக் கொள்ளலாம் என்கிறார். மறுபுறம் கௌடா கோஷ்டியோ, ஐ.மு.வில் லல்லு கட்சியைச் சேர்க்கக் கூடாது என்கிறது. லல்லுவுக்கு ஆதரவாக, அவரது நிர்பந்தத்தால், சி.பி.ஐ. இயக்குநர் ஜோகிந்தர் சிங்கை பதவி மாற்றம் செய்த குஜ்ராலுக்கு எதிர்ப்பு தெரிவித்து வந்த 'மார்க்சிஸ்டு'கள், ஊழல் லல்லுவை ஐக்கிய முன்னணியில் சேர்க்கவே கூடாது என்று எச்சரிக்கின்றனர். அவரது கட்சியைச் சேர்ந்த 3 மத்திய மந்திரிகளையும் குஜ்ரால் அமைச்சரவையிலிருந்து நீக்கக் கோருகின்றனர்.

இதற்கிடையே ஐக்கிய முன்னணியில் அங்கம் வகிக்கும் தி.மு.க.வின் தலைவர் கருணாநிதி, "லல்லு மீதான ஊழல் குற்றச்சாட்டுகளுக்கு நான் வக்காலத்து வாங்கவில்லை; அவரது புதிய கட்சி, தானே முன்வந்து ஐ.மு. அரசுக்கு ஆதரவு தருவதைப் புறக்கணிப்பது சரியல்ல" என்று லல்லுவுக்கு ஆதரவாகக் கிளம்பினார். அடுத்த இரு நாட்களுக்குள் ஐ.மு. அமைச்சரவையிலிருந்து தி.மு.க. விலகிக் கொண்டு வெளியிலிருந்து ஆதரவளிக்கலாம் என முடிவு செய்துள்ளதாக திடீர் "ஸ்டண்ட்" அடித்தார்.

"லல்லு விவகாரத்தைத் தொடர்ந்து 'மார்க்சிஸ்டு'கள் குஜ்ரால் அரசுக்குக் கொடுக்கும் நிர்பந்தம்; நெருக்கடியைச் சாதகமாக்கிக் கொள்ள காய்களை நகர்த்தும் காங்கிரசுத் தலைவர் கேசரியுடன் மூப்பனார் நடத்தும் இரகசிய பேச்சுவார்த்தை; நரசிம்ம ராவ் கோஷ்டியுடன் சேர்ந்து தேவே கௌடா நடத்தும் திரைமறைவுச் சதிகள்; பெட்ரோலியத் துறை இணையமைச்சரான தி.மு.க.வின் டி.ஆர். பாலுவுக்கு அதிகாரக் குறைப்பு; அன்னிய முதலீடுகளுக்கு சிவப்புக் கம்பளம் விரிக்கும் தொழிலமைச்சர் மாறன், தனது கொள்கையை 'சுதந்திரமாக' செயல்படுத்த முடியாமல் திணிக்கப்படும் கட்டுப்பாடுகள்" — முதலானவற்றைக் கண்டு தடுமாறும் கருணாநிதி, திடீர் அறிக்கை வெளியிட்டு முறுக்கிக் கொண்டார். எந்தக் கட்சி என்று குறிப்பிட்டுச் சொல்லாமல், சில கட்சிகள் 'உள்கூட்டு'ச் சேருவதாகவும், தற்கொலை அரிப்பெடுத்து அலைவதாகவும், தமக்கென ஒரு குறைந்தபட்ச திட்டம் வகுத்துக் கொண்டு தன்னிச்சையாக செயல்படுவதாகவும் சாடினார்.

ஆனால், இது முன்பு மூப்பனார் பிரதமர் பதவி கிடைக்காத ஆத்திரத்தில் ஐ.மு. அமைச்சரவையிலிருந்து விலகுவதாக "ஸ்டண்ட்" அடித்ததைப் போலவே புஸ்வாணமாகிவிட்டது.

தி.மு.க. தலைவரின் திடீர் மிரட்டலைத் தொடர்ந்து நடந்த ஐக்கிய முன்னணித் தலைவர்களின் கூட்டத்தில், லல்லுவை ஐ.மு.வில் சேர்ப்பதா, வேண்





படிப்பகம்

www.padippakam.com

டாமா என்றுதான் விவாதிக்கப்பட்டதே தவிர, தி.மு.க.வின் விலகலைப் பற்றி பேச்சே எழவில்லை. மேலும், லல்லு கட்சியை ஐ.மு.வில் சேர்ப்பதா, வேண்டாமா என்பதிலும் ஐ.மு. தலைவர்களிடம் கருத்தொற்றுமை இல்லை. 'மார்க்சிஸ்டு', கவுடா, சரத்யாதவ், முலயம்சிங் கோஷ்டிகள் லல்லு கட்சியைச் சேர்க்கக் கூடாது என்று ஐ.மு. கூட்டத்தில் முடிவெடுத்து விட்டதாக அறிவிக்கின்றன.

ஆனால் தி.மு.க, த.மா.கா. தலைவர்களோ, இன்னும் முடிவு எடுக்கப்படவில்லை; கூட்டத்தை ஒத்திப் போட்டுள்ளோம் என்கின்றனர். காங்கிரசு ஆதரவு உள்ளவரை ஐ.மு. அரசுக்கு ஆபத்து ஏற்படப் போவதில்லை என்றாலும், ஐ.மு.வுக்குள் பிளவு ஏற்படுவது நிச்சயமாகிவிட்டது. கருத்து ஒற்றுமை இல்லாமல் ஐ.மு. கூட்டங்களைப் பலமுறை ஒத்திப் போடுவது வாடிக்கையாகி விட்டது. இனியொரு கூட்டம் நடக்குமா என்பதும் கேள்விக்குறியாகிவிட்டது.

ஏற்கனவே காங்கிரசு, ஐக்கிய முன்னணி அரசின் குடுமியை வலுவாகப் பிடித்துக் கொண்டு ஆட்டுவிக்கிறது. போதாக்குறைக்கு ஐ.மு.விலுள்ள ஒவ்வொரு கட்சியும் தம் பங்குக்கு மிரட்டுகின்றன. 10, 15 எம்.பி.க்களைக் கொண்டுள்ள எந்தவொரு கட்சியும், கும்பலும் இந்த ஆட்சியை உருட்டி மிரட்டி காரியத்தைச் சாதித்துக்கொள்ள முடியும் என்பதாகிவிட்டது. இந்த இழிந்த நிலை இந்திய அரசியலமைப்பின் சீரழிவையும் ஓட்டாண்டித்தனத்தையுமே நிரூபித்துக் காட்டுகிறது.

இந்த நிலைமையைச் சாதகமாக்கிக் கொண்டு காங்கிரசு கேசரி கும்பல், பிரதமர் பதவியைக் குறிவைத்து காய்களை நகர்த்துகிறது. கேசரியுடன் இரகசியமாகக் கூட்டு சேர்ந்துள்ள லல்லு கட்சியும், மூப்பனார் கட்சியும் காங்கிரசு தலைமையிலான கூட்டணி ஆட்சியை நிறுவ திரைமறைவு முயற்சிகளில் இறங்கியுள்ளன. மறுபுறம், குஜ்ராலை விட எல்லாரையும் அனுசரித்துப் போகும் பிரதமர் நான் தான் என்று காட்டிக் கொண்டு மீண்டும் பிரதமர் பதவியைப் பிடிக்க கவுடா கும்பல் முயற்சிக்கிறது. காங்கிரசின் கைப்பாவையாக ஐக்கிய முன்னணி மாறிவிட்ட பிறகு, காங்கிரசின் தலைமையில் கூட்டணி ஆட்சி ஏற்பட்டு விடக்கூடாது என்று கோமாளித்தனமாக கூறிக் கொண்டு இரகசிய பேரங்கள் - பேச்சு வார்த்தைகளில் 'மார்க்சிஸ்டு' தரகர் சுர்ஜித் இறங்கியுள்ளார்.

பீகார், கர்நாடகம் தவிர வேறெங்கும் வேரோ, விழுதோ இல்லாத ஜனதா தளம், இப்போது பீகாரையும் இழந்துவிட்ட நிலையில், யாருடனும் கூட்டுச் சேர்ந்து பதவியைப் பாதுகாத்துக் கொள்ள நாயாய் அலைகிறது. ஆனால், எந்தவொரு சந்தர்ப்பவாதக் கூட்டணியும் தீவிரமாகிவிட்ட கோஷ்டிப் பூசல்களால் எத்தனை நாட்கள் நீடிக்கும் என்பதற்கு உத்திரவாதமில்லை. பெருகிவரும் அராஜகங்களால் நாடாளுமன்ற ஜனநாயகம் மரணப்படுக்கையில் வீழ்ந்து விட்ட பிறகு, அதை ஆழக்குழி தோண்டி புதைத்துவிட்டு, புதிய புரட்சிகர அரசியலமைப்பை நிறுவிக் கொள்வதைத் தவிர, நாட்டுக்கும் மக்களுக்கும் இனி வேறு வழியில்லை.

# தலை வெட்டித் தத்துவமும் தனித் தமிழ்நாடு கோரிக்கையும்

பெரம்பலூர், கடலூர் மாவட்டங்களின் எல்லைப்புற கிராமங்கள் சிலவற்றிலும், முந்திரிக் காடுகளிலும் அலைந்து திரியும் ஒரு சில ஆயுதந்தாங்கிய நபர்களைக் கொண்டது தமிழ்நாடு விடுதலைப் படை என்கிற அமைப்பு. அதன் பிளவுபட்ட குழுக்களிடையே நடக்கும் பழிதீர்க்கும் படுகொலைகள் மூலமும், ஆண்டி மடம் போலீசு நிலையத்தைத் தாக்கி ஆயுதங்களைப் பறித்துச் சென்றதன் மூலமும் அந்த அமைப்பு பலரின் கவனத்தை ஈர்த்துள்ளது.

குழுச் சண்டைகள் - கொலைகள் நடந்து கொண்டிருக்கும்வரை இப்படியே அந்த அமைப்பு பலவீனப்பட்டு அழிந்து போகட்டும்; அல்லது தக்க தருணத்தில் தலையிட்டுத் தாக்கி அழிக்கலாம் என்று காத்திருந்தது, போலீசு. ஆண்டிமடம் போலீசு நிலையத் தாக்குதல் அதற்குத் தக்க வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுத்துள்ளது. தமிழ்நாடு விடுதலைப் படையின் குழுக் கொலைகள் பற்றி பரபரப்புச் செய்திகளை வியாபாரமாக்கி வந்த பத்திரிகைகள் இப்போது, ''ஆயுதக் கொள்ளை காவல்துறைக்கு ஒரு சவால்'' என்று எழுதி, போலீசை உசுப்பி விடுகின்றன. போலீசும் ''தேடுதல் நடவடிக்கை'' என்கிற பெயரில் அப்பகுதி இளைஞர்கள் மீது பொதுவான தாக்குதல் வேட்டையைத் துவங்கி விட்டது.

''தனித் தமிழ்நாடு கேட்கும் நக்சலைட்டுகள், தீவிரவாதிகள் நடத்தும் தலைவெட்டும் போட்டி!'' என்றும், ''ஆண்டிமடம் போலீசு நிலையத்தை நக்சல்பாரிகள் தாக்கி ஆயுதங்களைக் கொள்ளையிட்டனர்'' என்றும் பத்திரிகைகள் எழுதுகின்றன. உண்மையில் நக்சல்பாரி இயக்கத்துக்கும், இந்த ''தமிழ்நாடு விடுதலைப் படை'' என்கிற பெயரில் பல்வேறு அராஜக, தனிநபர் சாகசச் செயல்களில் ஈடுபட்டுவரும் குழுக்களுக்கும் அரசியல் - சித்தாந்தம், கொள்கை - இலட்சியம் ரீதியாகவோ, அமைப்பு - செயல்பாடுகள் ரீதியாகவோ எவ்விதத் தொடர்பும் கிடையாது.

இந்தியப் பொதுவுடைமைக் கட்சி (மார்க்சிஸ்ட் - லெனினிஸ்ட்) என்கிற நக்சல்பாரி இயக்கத்தின் தமிழ்நாட்டுப் பிரிவின் தலைமையில் ஒரு காலத்தில் பங்கேற்ற தமிழரசனால் நிறுவப்பட்டதுதான் இந்த தமிழ்நாடு விடுதலைப் படை. நக்சல்பாரி இயக்கத்தின் எல்லா அம்சங்களையும் எதிர்த்து, நிராகரித்து விட்டு வெளியேறிப் பல மாதங்களுக்குப் பிறகு அமைக்கப்பட்டதுதான் இந்தப் படை. இன்று தமிழ்நாடு விடுதலைப் படையின் குழுக்களில் உள்ள எவரும் நக்சல்பாரி இயக்கத்தில் இருந்தவர்களும் கிடையாது.

நாடாளுமன்ற அரசியலுக்கு வெளியே நாட்டு மக்களின் நல்ல ஆதரவும் செல்வாக்கும் பெற்று வளர்ந்து வரும் ஒரே இயக்கம் நக்சல்பாரி இயக்கம்தான். தமது அராஜக, தனிநபர் சாகசச் செயல்களுக்குக் கவசமாகப் பயன்படுத்திக் கொள்ளவே தமிழ்நாடு விடுதலைப் படையினர் நக்சல்பாரி பாரம்பரியத்துக்கு உரிமை கொண்டாடுகின்றனர். பத்திரிகைகளோ வளர்ந்து வரும் நக்சல்பாரி இயக்கத்தைக் கொச்சைப்படுத்தவும், அதன்மீது போலீசு அடக்குமுறையை ஏவிவிடவும் காரணம் கற்பிக்கும் நோக்கத்தோடு தமிழ்நாடு விடுதலைப் படையினரும் நக்சல்பாரிகள் தாம் என்று புளுகுகின்றன.

ஆனால் தமிழரசனின் வாரிசுகள் என்று உரிமை பாராட்டிக் கொள்ளத்தான் தகுதியானவர்கள் தமிழ்நாடு விடுதலைப் படையினர். ஏனெனில், நக்சல்பாரி இயக்கத்தில் இருந்த போதும் தமிழரசன், அரசியல் - சித்தாந்த, அமைப்பு ரீதியாக ஒருபோதும் சிந்தித்துச் செயல்பட்டவர் கிடையாது. அதற்கான தகுதியும் அவருக்கில்லை. வன்முறையே புரட்சி, புரட்சியே வன்முறை மட்டும்தான் என்று நம்பியவர். பொதுமக்கள் மீது போலீசு அடக்குமுறை வரும்படி ஏதாவது அராஜக, சாகசச் செயலைச் செய்துவிட வேண்டும்; போலீசின் அடக்குமுறையே மக்களுக்கு விழிப்புணர்வையும் வெறுப்பையும் ஊட்டி, புரட்சிக்குத் தள்ளும் என்பதுதான் அவரது சித்தாந்தம்.

நக்சல்பாரி இயக்கத்துக்கு அவரது மகத்தான பங்களிப்பு என்று அவரது வாரிசுகள் பீற்றிக் கொள்வது, ''கூட்டக் குழு'' போராட்ட முறை. சாரு மஜூம்தார் முன்வைத்த தனிநபர் அழித்தொழிப்புப் பாதை, இயக்கத்தில் பின்னடைவை ஏற்படுத்திய போது, ''ஒரு 20, 30 பேராகச் சேர்ந்து அறுவடையைக் கைப்பற்றுவது, முந்திரிக் கொட்டைகளைப் பொறுக்கிக் கொள்வது என்கிற கூட்ட நடவடிக்கைகளில் ஈடுபடுவதும், அவர்களுக்கே தெரியாமல் ஒரு சிறு குழு அமைத்து எதிரியை அழித்தொழிப்பதும்'' ஆகிய இரண்டையும் இணைக்க வேண்டும். கூட்ட நடவடிக்கையில் ஈடுபட்டவர்கள் குழு நடவடிக்கைக்கும் காரணமானவர்கள் என்று கருதி போலீசின் அடக்குமுறை வரும். அதை எதிர்க்க வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்படும். அவர்களைத் தலைமறைவாக வைத்து மேலும் கூட்டம் சேர்த்து புரட்சிக்குத் தயாரிக்கலாம்'' என்ற சித்தாந்தத்தை தமிழரசன் வகுத்தார். போலீசின் தாக்குதலைச் சமாளிக்க ஆயுதங்களும், அதற்காக ''வங்கிக் கொள்ளை'' போன்ற நிதி நடவடிக்கைகளிலும் ஈடுபட வழிகாட்டினர். சில நடவடிக்கைகளையும் தலைமையேற்றுச் செய்தார்.

இந்தச் சமயத்தில் போலீசிடம் சிக்கி,


படிப்பகம்

www.padippakam.com

சிறையிலடைக்கப்பட்டு, அங்கிருந்து தப்பிக்க முயன்று, மீண்டும் பிடிபட்டு, சில ஆண்டுகளுக்குப் பின் பிணையில் வெளிவந்து தலைமறைவானார். அவரது கண்டுபிடிப்பான ''கூட்டக் குழு'' போராட்டங்களில் ஒன்றான ''முந்திரிக் கொட்டை பொறுக்குவது'' போலீசு அடக்குமுறையால் நசுக்கப்பட, அவரது ஆதரவாளர்கள் வெளி மாவட்டங்களுக்கும், வெளி மாநிலங்களுக்கும் போயினர்.



**'நக்சல்பாரி' என்ற அடைமொழியைக் கவசமாகப் பயன்படுத்தும் சமூக விரோதி இளவரசன்.**

''மக்கள் யுத்தக் குழு'' என்ற அமைப்பில் இணைந்திருந்த அவர், தனித் தமிழ்நாடு கோரிக்கையை முன்வைத்து ஆயுதப் போராட்டம் நடத்துவது தான் புரட்சிக்கான சுலபமான வழி என்கிற கண்டுபிடிப்பை புலவர் கலியபெருமாளோடு சேர்ந்து முன்வைத்தார். இருவரும் மக்கள் யுத்தக் குழுவில் இருந்து விலகி, தமிழ்நாடு பொதுவுடைமைக் கட்சியை நிறுவினர். தமிழ்நாடு இளைஞர் பேரவை, மாணவர் பேரவை ஆகிய இரண்டு வெளிப்படையான அமைப்புகளையும் துவக்கினர். ஈழ விடுதலைப் புலிகளின் வளர்ச்சிதான் இவர்களை ஊக்குவித்ததோடு, அவர்களை இவர்கள் ''காப்பியடிக்க''வும் முன்னோடியாக அமைந்தது.

ஆனால் இந்த அமைப்புகளும் பிளவு, பின்னடைவைச் சந்தித்தபோது, தமிழ்நாடு விடுதலைப் படையை தமிழரசன் நிறுவினார். அது கூட்டக் குழு போராட்டத்தைத் தீவிரமாக்கி, அரசு, பத்திரிகைகளின் கவனத்தைக் கவரும் குழு நடவடிக்கைகளை மட்டுமே மேற்கொண்டது. பாலங்கள், சிலைகள், தொலைக்காட்சி நிலையங்களைக் குண்டு வைத்துத் தகர்ப்பது போன்ற பரபரப்பூட்டும் நடவடிக்கைகளில் ஈடுபட்டது. இதற்காகவே நடத்தப்பட்ட அரியலூர் மருதையாற்றுப் பாலம் குண்டு வெடிப்பு, மலைக்கோட்டை இரயிலைத் தகர்த்து 27 பேர் உயிரைக் குடித்த விபரீதமாக முடிந்தது. இயக்க நிதி என்ற பெயரில் நடந்த பொன்பரப்பி ''வங்கிக் கொள்ளை'', தமிழரசனோடு ஐந்து பேரைப் பலி கொண்டது.

சமூக விரோதிகளும், போலீசு உளவாளிகளும் தமிழரசனின் படையில் ஊடுருவியதே இதற்குக் காரணம். இந்த ஊடுருவல் வளர்ந்து, போட்டிக் குழுக்களாகப் பிளவுபட்டு, போட்டிப் படுகொலைகள் துவங்கின. தமிழரசனுக்குப் பிறகு தலைமையேற்ற ''உண்டகட்டி'' சுந்தரம் தனது படையிடமிருந்தே தலைமறைவானார்; பொன்பரப்பி ராஜேந்திரன் போலீசிடம் சிக்கினார்; லெனின் குண்டுவெடிப்பில் மாண்டார். டெல்லியைச் சேர்ந்த ஒரு தன்னார்வ மனித உரிமைக் குழுவின் தலையீட்டால், அரசு முந்திரிக் காடுகளில் முந்திரி பொறுக்கிக் கொள்ளும் உரிமை பெற்று, சிறு விவசாயிகளின் கூட்டுறவுச் சங்கம் ஏற்படுத்தி நடத்தி வந்த வல்லம் கிராமத்தைச் சேர்ந்த இளவரசனும், அதே கிராமத்தைச் சேர்ந்த குவாகம் இராமசாமியும் அடுத்துப் படையின் தலைவர்கள் ஆனார்கள்.

அதன்பிறகு சங்கம் நடத்துவதும், வங்கிக் கொள்ளையும், வெவ்வேறு ஊர்களில் கட்டப் பஞ்சாயத்து நடத்தி, மிரட்டிப் பணம் சேர்ப்பதும் மட்டுமே அவர்களின் நடவடிக்கைகளாயின. இதில் ஏற்பட்ட தகராறு காரணமாக இருவரும் பிளவுபட்டு, ஒருவரையொருவர் தீர்த்துக் கட்ட முயன்று, இதுவரை இராமசாமி உட்பட ஆறுபேர் கோரமான முறையில் வெட்டிக் கொல்லப்பட்டனர். இந்தக் குழுக் கொலைகளில் இளவரசன் குழு வலுப்பெற்றுவிட்டது. தாங்கள் இன்னமும் அரசு எதிர்ப்புப் போராட்டத்தில் இருப்பதாகக் காட்டிக் கொள்ளவே, ஆண்டிமடம் போலீசு நிலையத் தாக்குதலை ஒரு குழு நடத்தியுள்ளது.

நக்சல்பாரி இயக்கத்தின் பாரம்பரியத்துக்கும் இந்தப் படைக்கும் எப்படி எவ்விதத் தொடர்பும் இல்லையோ, அதுபோலவே தமிழ்நாடு விடுதலைக் கோரிக்கைக்கும் இதனோடு இப்போது தொடர்பு ஏதுமில்லை. தனது படையோடு ஓர் அரசியல் கோரிக்கையை ஒட்டிக் கொண்டால் அது மதிப்பாகவும், பாதுகாப்பாகவும் இருக்கும் என்பதாலேயே அவற்றைத் தன்னோடு ஒட்டிக் கொண்டு அலைகின்றனர்.

இந்த உண்மையைச் சொல்லத் துணியாத சில சவடால் புரட்சிக் குழுக்களும், ''கூட்டு நடவடிக்கை, கூட்டறிக்கை'' ஒன்றையே செயலாகக் கொண்ட இனவாதக் குழுக்களும் தமிழ்நாடு விடுதலைப் படையிடம் இருந்து அமைப்பு ரீதியாக ஒதுங்கி நிற்கும் அதே சமயம், தமிழரசன் புகழ்பாடி ஆதாயம் அடைய எத்தனிக்கின்றனர். இதன்மூலம் எண்பதுகளின் துவக்கத்தில் தர்மபுரி - வட ஆற்காடு மாவட்டங்களில் எம்.ஜி.ஆர். - தேவாரம் கும்பல் கட்டவிழ்த்து விட்ட அரசு பயங்கரவாத அடக்குமுறை போன்றதை மீண்டும் தமிழக அரசு ஏவி விடவும், தமிழின உரிமை கோரிக்கையைக் கொச்சைப்படுத்தவுமே வழிவகுக்கின்றனர். ஆர்.கே.

**பாகப் பிரிவினையின் போது எழுந்த கோஷ்டி மோதலில் இளவரசன் கும்பலால் படுகொலை செய்யப்பட்ட இராமசாமி.**



3-ஆம் பக்கத் தொடர்ச்சி

உண்மைதான். நாராயணனுக்கென சொந்த கருத்துக்களோ கொள்கைகளோ கிடையாது. இந்திய ஆளும் வர்க்கங்களுக்குச் சேவை செய்யும் அதிகார வர்க்கத்திலிருந்து 'திறம்'பட செயல்பட்டார். இந்திய அரசியலின் இருண்ட காலமான அவசர நிலை காலத்திலும் அன்னை இந்திராவிற்கு அயராது பாடுபட்டார்.

இங்கு வெண்மணியிலும், பீகார் பெல்சி - பிப்ராவிலும் தாழ்த்தப்பட்டவர்கள் உயிரோடு கொளுத்தப்பட்ட போது இவர் உலக அளவில் இந்தியாவின் உறவை வளர்க்க பாடுபட்டார். விழுப்புரத்தில் தாழ்த்தப்பட்டவர்கள் வெட்டிக் கொல்லப்பட்ட போது இவர் இந்தியாவின் அமெரிக்கத் தூதராக விமானமேறிக் கொண்டிருந்தார்.

நான்காண்டுகள் அமெரிக்கத் தூதராயிருந்த பின், பாசிச இந்திராவிடம் தனது அரசியல் பிரவேசத்திற்கு அச்சாரமிட்டார். இந்திரா கொலைக்குப் பின், காங்கிரசு குண்டர்கள் அப்பாவி சீக்கியர்களை நாடு முழுதும் நரவேட்டையாடினார்களே, அந்தக் கட்சியின் சார்பாகத்தான் எம்.பி. தேர்தலுக்கு நின்றார், வென்றார்.

தேசியப் பாதுகாப்புச் சட்டம், பயங்கரவாதத் தடைச் சட்டம், ''தடா'' என அடுத்தடுத்து மக்கள் உரிமை பறிக்கும் கறுப்புச் சட்டங்கள் இயற்றப்பட்ட ராஜீவின் மந்திரி சபையில், ஒரு விசுவாசமான மந்திரியாக, கொடுத்த வேலையை செவ்வனே செய்தார்.

இப்படி ஆட்சியாளர்களுக்கு காட்டிய விசுவாசத்தைக் கண்டுதான் கட்சி வேறுபாடின்றி அனைவரும் கே.ஆர். நாராயணனை ஆதரிக்கின்றனர்.

பின் எதற்காக தாழ்த்தப்பட்டவர் என்ற பிறப்பின் அடையாளத்தை முன்னிறுத்துகின்றனர்? அங்குதான் உள்ளது ஆளும் வர்க்க, ஆளும் சாதிகளின் சூட்சுமம்.

சுதந்திரம் என சொல்லிக் கொள்ளப்பட்ட இந்த 50 ஆண்டுகளுக்குப் பின்னும் தாழ்த்தப்பட்டவர்கள் நிலை என்ன? தமிழகத்திலே தாழ்த்தப்பட்ட சாதியில் பிறந்த சுதந்திரப் போராட்ட வீரன் சுந்தரலிங்கத்தின் பெயர் கொண்ட பேருந்தை ஊருக்குள் நுழைய விடமாட்டோம் என தீண்டாமையை பகிரங்கமாகப் பாராட்டுகின்றனர் தேவர் மேல்சாதி வெறியர்கள். இதனால் தென் மாவட்டங்களில் ரத்த ஆறு ஓடுகிறது.

இங்கு மட்டுமல்ல, இந்தியா முழுவதுமே தாழ்த்தப்பட்ட மக்களின் நிலை இது தான். இந்தப் பிரிவினர் இந்த அரசின் மீது நம்பிக்கை இழந்து வருகின்றனர்.

இந்நிலையில் தாழ்த்தப்பட்ட சாதிக்காரரை ஜனாதிபதி ஆக்கி, அவர்களிடம் நம்பிக்கையை உருவாக்குவதுதான் அந்த சூட்சுமம். 'ஒரே கல்லில் இரு மாங்காய்' என்பார்களே அதுபோல, ஆளும் வர்க்கத்தினருக்கு விசுவாசமாக சேவைச் செய்யக்கூடிய நபரை ஜனாதிபதியாக்குவது; அவர் தாழ்த்தப்பட்டவர் என்பதைக் காட்டி, அம்மக்கள் அரசின் மீது இழந்து வரும் நம்பிக்கையை மீட்டெடுப்பது.



படிப்பகம்

www.padippakam.com

## 'இடது சாரி' ஆட்சியின் இருபதாண்டு சாதனை:

# புதை குழியில் தள்ளப்பட்ட விசாரணைக் கமிசன்கள்

அது 1977 - ம் ஆண்டு. அவசரநிலை பாசிச ஆட்சியின் அட்டூழியங்களையும் அக்கிரமங்களையும் மக்களிடம் பிரச்சாரம் செய்து 'இடதுசாரி' கூட்டணி தேர்தலில் வெற்றி பெற்று மே. வங்கத்தில் ஆட்சியை நிறுவியது. அடுத்த சில மாதங்களிலேயே அவசரநிலை அட்டூழியங்களில் ஈடுபட்ட போலீசு மற்றும் அரசு அதிகாரிகள் மீது நடவடிக்கை எடுப்பதாகக் கூறி சர்மாசர்க்கார் எனும் ஓய்வு பெற்ற நீதிபதியின் தலைமையில் விசாரணைக் கமிஷன் ஒன்றை நிறுவியது. மூன்றாண்டுகளுக்குப் பிறகு 1981 - ல் 7 தொகுதிகள் கொண்ட விசாரணை அறிக்கையை அந்நீதிபதி 'இடதுசாரி' அரசிடம் சமர்ப்பித்தார். ஆனால் எந்தவொரு அதிகாரி மீதும் இன்றுவரை எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை.

இது ஏதோ கவனக் குறைவினாலோ, அதிகார வர்க்க சிவப்பு நாடாத்தனத்தாலோ நிகழ்ந்துவிட்ட தவறு என்று ஒதுக்கிவிட முடியாது. ஏனென்றால் 1977 லிருந்து இன்றுவரை 'இடதுசாரி' அரசு அமைத்த எல்லா விசாரணைக் கமிஷன்களும் சவக்குழிக்கே அனுப்பப்படுகின்றன; அல்லது விசாரணைக் கமிஷனின் அறிக்கையின்படி நடவடிக்கை எடுக்கப்படாமல் கிடப்பில் போடப்படுகின்றன.

1977-ல் போலிக் கம்யூனிஸ்டுகள் ஆட்சிக்கு வந்ததிலிருந்து இன்றுவரை 24 விசாரணைக் கமிஷன்கள் அமைக்கப்பட்டுள்ளன. இவற்றில் 2 கமிஷன்கள் இன்னமும் விசாரணையைத் தொடங்கவே இல்லை. 6 கமிஷன்கள் விசாரணை நடத்தி முடித்துள்ள போதிலும், இன்னமும் அறிக்கையை அரசிடம் சமர்ப்பிக்கவில்லை. 12 கமிஷன்கள் விசாரணையை முடித்து அரசிடம் அறிக்கையை சமர்ப்பித்துள்ள போதிலும், அறிக்கையின் பரிந்துரைப்படி மே. வங்க அரசு எந்த நடவடிக்கையையும் இதுவரை எடுக்கவில்லை. 4 கமிஷன்கள் கடந்த பத்தாண்டுகளாக இன்னமும் விசாரணையைத் தொடர்ந்து கொண்டிருக்கின்றன.

''முள்ளு முனையிலே மூணு குளம் வெட்டினேன்; ரெண்டு குளம் பாழ்; ஒண்ணுல தண்ணியே இல்ல!'' என்ற நாட்டுப்புற நையாண்டிப் பாடலுக்கேற்ப போலிக் கம்யூனிஸ்டுகள் நிறுவிய விசாரணைக் கமிஷன்கள் அனைத்துமே மோசடியானவைதாம் என்பதையே அவர்களின் 20 ஆண்டுகால பொற்கால ஆட்சி நிரூபித்துக் காட்டுகிறது.


1982 - ல் கல்கத்தாவின் கிழக்குப் பகுதியில் நடந்த வீட்டுமனை ஊழல் பற்றி எதிர்க்கட்சிகள் கூச்சல் போட்டதும் சலீல் ராய் சவுத்திரி என்ற ஓய்வு பெற்ற நீதிபதியின் தலைமையில் ஒரு விசாரணைக் கமிஷனை 'மார்க்சிஸ்டு' அரசு நிறுவியது. ஆனால் இந்த விசாரணைக் கமிஷன் செயல்படாமலேயே முடக்கப்பட்டது. ஏனெனில் அன்றைய 'மார்க்சிஸ்டு' அரசின் பொதுப்பணித்துறை அமைச்சராக இருந்த பிரசாந்த் சுர் என்பவரும், 'மார்க்சிஸ்ட்' கட்சியின் முக்கிய பிரமுகர்களுமே இம்மோசடியில் சம்பந்தப்பட்டிருந்தனர். மோசடியின் நாயகர்களான ஒப்பந்தக்காரர்கள் நீதிமன்றத்தில் தடையுத்திரவு பெற்று விசாரணையை முடக்கினர். உரிய காலத்திற்குள் இதை எதிர்த்து 'இடதுசாரி' அரசு நீதிமன்றத்தில் மேல் முறையீடு செய்யாததால் விசாரணைக் கமிஷன் செயல்பட முடியாமல் போனது. ''எனது தலைமையிலான விசாரணைக் கமிஷன் இடதுசாரி அரசால் திட்டமிட்டே சாகடிக்கப்பட்டது'' என்று குற்றஞ்சாட்டுகிறார், நீதிபதி சலீல்ராய் சவுத்திரி.

1984 - ம் ஆண்டில் இத்ரிஸ்மியான் என்ற விசாரணைக் கைதி கல்கத்தா போலீசு தலைமையகத்தில் அடித்தே கொல்லப்பட்டான். இச்செய்தி அறிந்ததும் கல்கத்தா நகர மக்கள் போலீசுக்கு எதிரான ஆர்ப்பாட்டங்களில் இறங்கி நகரைப் போர்க்களமாக்கினர். அதைத் தொடர்ந்து 3 நீதிபதிகள் கொண்ட விசாரணைக் கமிஷன் அமைக்கப்பட்டது. இத்ரிஸின் சாவுக்கு போலீசாரே காரணம் என்று 7 போலீசுக்காரன்கள் மீது கமிஷன் குற்றம் சாட்டியது. கொலைகார போலீசார் மீது நடவடிக்கை எடுப்பதற்குப் பதிலாக, போலீசுத்துறையே விசாரணை நடத்தி நடவடிக்கை எடுக்குமாறு 'மார்க்சிஸ்டு' அரசு கோரியது. போலீசுத்துறையே தனது போலீசுக்காரன்களை விசாரித்து தண்டித்ததாக வரலாறு உண்டா? எதிர்பார்த்தபடியே கண்துடைப்பு நடவடிக்கைகளுக்குப் பிறகு அந்த 7 போலீசுக்காரன்களும் பணியிலேயே நீடிக்கின்றனர். அவர்களில் 2 பேருக்குப் பதவி உயர்வும் அளிக்கப்பட்டுள்ளது. இப்படி போலீசுக்கு எதிராக எந்த நடவடிக்கையுமின்றி, அடக்குமுறை அரசு எந்திரத்துடன் ஒத்திசைந்து போவதால்தான் தொடர்ச்சியாக 20 ஆண்டுகள் போலிக் கம்யூனிஸ்டுகள் பதவியில் நீடிக்க முடிந்துள்ளது.

விசாரணைக் கமிஷன் தீர்ப்புகளின்படி நடவடிக்கை எடுக்காதது மட்டுமல்ல; பல கமிஷன்கள் இன்னமும் விசாரணையை முடிக்காமல் வரிப்பணத்தைத் தின்று கொண்டு காலத்தை நீட்டித்து வருகின்றன. 1988 - ல் மூர்ஷிதாபாத்தில் நடந்த மதக்கலவரம் பற்றிய விசாரணைக் கமிஷன் ஆண்டுக்கு 40 லட்சம் ரூபாயை விழுங்கிக் கொண்டு இன்னமும் தொடர்கிறது. இதே போல 4 விசாரணைக் கமிஷன்கள் நத்தை வேகத்தில் நகர்கின்றன.

''வங்கத்தைப் பார்! 20 ஆண்டுகளாக மக்களாட்சி நடத்தும் இடதுசாரிகளின் மாற்றுப் பாதையைப் பார்!'' என்று நாட்டு மக்களுக்கு போலிக் கம்யூனிஸ்டுகள் அறைகூவல் விடுக்கின்றனர். பார்த்த பிறகுதான் தெரிகிறது, ஒய்யாரக் கொண்டையின் உள்ளே இருக்கும் ஈறும் பேனும்!

• பாலன்




**பிற மாநிலங்களில் நடக்கும் அதிகார அத்துமீறல்களை விசாரிக்க விசாரணைக் கமிஷன் கோரி ஓலமிடும் 'மார்க்சிஸ்டு'களின் யோக்கியதையை ஈயத்தைப் பார்த்து இளித்ததாம் பித்தளை என்ற பழமொழிக்கு ஒப்பிடலாம். இப்போலிகள் ஆளும் மே. வங்கத்தில் கடந்த இருபது ஆண்டுகளில் 24 விசாரணைக் கமிஷன்கள் அமைக்கப்பட்டுள்ளன. ஆனால் பாதிப்படைந்த மக்களுக்கு நீதி கிடைத்ததா என்ற வினாவினை எழுப்பினால், அதற்குப் பதில் பூஜ்யம்தான்.**


படிப்பகம்

www.padippakam.com

# மம்சாபுரம் சாதிக் கொலைகள்

# தாழ்த்தப்பட்டோர் எழுச்சியின் விபரீதப் போக்கு

கடந்த இரண்டு ஆண்டுகளுக்கும் மேலாக தென் மாவட்டங்களில் நடந்துவரும் சாதிச் சண்டைகள் பிற மாவட்டங்களுக்கும் மெதுவாகப் பரவுகின்றன. ஆதிக்க சாதியினரின் தாக்குதலை எதிர்கொண்டு தாழ்த்தப்பட்ட மக்கள் தாக்குப் பிடித்து வருவதும் எதிர்த் தாக்குதல் தொடுப்பதும் நம்பிக்கையூட்டுவதாக உள்ளது. ஆனால் இந்தப் போக்கு நின்று பிடிக்கவும் சரியான திசைவழியில் முன்னேறவும் வேண்டுமானால் தெளிவும் உறுதியும் தொலைநோக்கும் கொண்ட தலைமை அவசியமாகும். இந்தப் பிரச்சினையில் தலையீடு செய்து தமது தலைமையை நிலைநாட்டிக் கொள்வதற்கு கிருஷ்ணசாமி போன்றவர் தலைமையிலான சில தாழ்த்தப்பட்டோர் அமைப்புகளும் தன்னார்வக் குழுக்களும் இராமதாசின் பா.ம.க.வும் முயலுகின்றன.

"இது சாதிக் கலவரம் அல்ல; தாழ்த்தப்பட்டவர்களது எழுச்சி. சாதி ஒடுக்குமுறையை இனிமேலும் சகித்துக் கொள்ள மாட்டோம் எனத் தாழ்த்தப்பட்டவர்கள் நடத்தும் விடுதலைப் போராட்டம்" என்று கூறும் கிருஷ்ணசாமியே அந்த எழுச்சியின் தலைவர் என்பதுபோல செய்தித் தொடர்புச் சாதனங்களின் உதவியோடும், எம்.எல்.ஏ. என்ற பதவிக்குரிய தகுதியோடும் அவர் உரிமை பாராட்டுவதாகத் தெரிகிறது. ஆனால் கிருஷ்ணசாமியோ, வேறு எவரோ திட்டமிட்டு உருவாக்கி இருக்கும் எழுச்சியல்ல, இது. தாழ்த்தப்பட்டவர்கள் நடத்தும் தன்னெழுச்சி. அதுவும் சில சீர்திருத்தங்கள், சலுகைகள், நகரமயமாதல், தொழில்மயமாதலால் பொருளாதார ரீதியில் ஓரளவு முன்னேறிய தாழ்த்தப்பட்ட மக்கள் அரசியல், சமூக, பண்பாட்டு உரிமை கோருவதைச் சகியாத ஆதிக்க சாதியினர் கட்டவிழ்த்து விட்டுள்ள தாக்குதலுக்கு எதிர்வினைதான். இப்படித் தன்னெழுச்சியான சில சம்பவங்களில் தலையிட்டு கிருஷ்ணசாமி தன்னை முன்னிறுத்திக் கொள்கிறார். மேலவளவு படுகொலையைக் கண்டித்து பொது வேலை நிறுத்தத்துக்கு அழைப்பு விடுத்ததைத் தவிர வேறெதையும் அவரது அமைப்பு முன் வைத்ததில்லை. அதுவும் திட்டமிட்டு, அவரது வழிகாட்டுதலிலும் கட்டுப்பாட்டிலும் நடக்கவில்லை.

ஒன்றுபட்ட தலைமையும், திட்டமிட்ட திசை வழியும், தெளிவான இலக்கும் இல்லாத, குறிப்பாக எதிரிகளையும் நண்பர்களையும் பிரித்துக் கையாளத் தவறும் இந்தத் தன்னெழுச்சியான இயக்கம் இனிமேலும் நின்று பிடிக்குமா? திசை தவறிச் சிதையுமா? என்கிற கேள்வியைப் பின்வரும் சம்பவம் எழுப்பியுள்ளது.

இராஜபாளையம் மம்சாபுரத்தில் தொழிலாளியும் புரட்சிகர மாணவர் இளைஞர் முன்னணி ஆதரவாளருமான தோழர் மாரிமுத்து, தேவர் சாதியில் பிறந்தார் என்பதற்காகவே தாழ்த்தப்பட்ட சாதியினரால் வெட்டி, வைக்கோல் படப்பில் போட்டு உயிரோடு கொளுத்தப்பட்டிருக்கிறார். இப்படிப்பட்ட நட்புச் சக்திகள் மட்டுமல்ல அடையாளம் தெரியாத "அப்பாவிகள்" பலரும் கொல்லப்படுவது நடக்கிறது. "உயிரிழப்பு" என்பதற்காக வருந்தும் மனிதாபிமான பேச்சல்ல. எதிரியையும் நண்பனையும் பிரித்தறிய முடியாத இயக்கம் எங்கே சென்று முடியும்?

★☆★

மம்சாபுரம் புரட்சிகர மாணவர் இளைஞர் முன்னணி ஆதரவாளரான தோழர். மாரிமுத்து தென்மாவட்ட 'சாதிக் கலவர'த்தில் படுகொலை செய்யப் பட்டார்.

எந்த நேரமும் துடிப்புடன், ஆர்வத்துடன் அமைப்பு வேலைகளில் ஈடுபடக்கூடிய தோழர் மாரிமுத்து. சமீபத்தில் அமைப்பிற்கு அறிமுகமானாலும் இரவு பகல் எந்த நேரமும் முகம் சுளிக்காமல் அமைப்புப் பணிகளில் ஈடுபடுவார். மாரிமுத்து 22 வயது நிறைவடையாத இளம் தோழர். மில் தொழிலாளி. "தோழர், இந்த மில் வேலை போனா வேற மில், இந்த வேலை இல்லன்ன வேற ஏதாவது பார்த்துக்கலாம்" என்று உழைக்கும் வர்க்கத்திற்கே உரிய வர்க்கக் குணம் கொண்டவர். இறுதியாக மே 1 நெய்வேலி சீரோ-யுனிட் அனல் மின் நிலையத்தை அமெரிக்காவிடம் அடகு வைப்பதற்கு எதிராக நமது அமைப்பு நடத்திய மறியல் போராட்டத்தில் ஆர்வத்துடன் கலந்து கொண்டு சிறைசென்று வீடு திரும்பினார்.

ஒரு வாரத்திற்குள் மில்லுக்கு வேலைக்குச் சென்று திரும்பிய தோழரை தாழ்த்தப்பட்ட சாதியினர் சைக்கிளுடன் மடக்கி, அடித்து துன்புறுத்தி உயிரோடு தீவைத்து கொளுத்தி விட்டனர்.

இந்த சாதிக் கலவரத்திற்கு சிறிதும் சம்மந்தமில்லாத சிறந்த ஜனநாயக சக்தி. தாழ்த்தப்பட்ட மக்களுக்கெதிரான அரசியல் சமூக கொடுமைகளைக் கண்டு பொங்கி எழுந்த தோழர் புரட்சிகர அமைப்பையும், தோழர்களையும் மிகவும் நேசித்தவர். எந்த சாதி மக்கள் அவரை படுகொலை செய்தார்களோ அந்த தாழ்த்தப்பட்ட மக்களின் அரசியல் சமூக கொடுமைகளைக் காணச் சகிக்காதவர். தேவர் சாதியினர் ஒருபுறம் சாதிவெறி தலைக்கேறி கொடுமைகளை நடத்தி வந்த போதும், அதே சமூகத்தைச் சேர்ந்த இத்தோழர் தாழ்த்தப்பட்ட மக்கள் மீதான சாதிவெறி தாக்குதலை உண்மையாகக் கண்டித்தார்.

"புரட்சிகர ஜனநாயக சக்திகள் வளர்ந்தால்தான் இத்தகைய கொடுமைகளுக்கு ஒரு முடிவு கிடைக்கும்" என்ற தோழரின் இறுதி வார்த்தைகளை நிறைவேற்றும்போதுதான், தொடரும் இது போன்ற கொடுமைகளுக்கு முற்றுப்புள்ளி வைக்க முடியும்.

★☆★

மே பத்து அன்று சினிமா கொட்டகையில் ஏற்பட்ட ஒரு சிறு சம்பவத்தால் (இடப் பிரச்சினை) தாழ்த்தப்பட்டோர் தேவர் சாதியினரை அடித்துவிட்டனர். அதைப் பெரிதாக்கி உடனே தேவர் சாதி இளைஞர்கள் அம்மச்சியார்பட்டி தெருவில் புகுந்து வீட்டையும், உடைமைகளையும் தாக்கி சேதப்படுத்தினர். மாட்டு வண்டிகளை ஓடையில் தள்ளி நொறுக்கித் தீயிட்டனர். வீட்டுக் கதவுகளை உடைத்து உடைமைகளையும் சேதப்படுத்தினர். கூரை வீடுகளுக்குத் தீயிட்டுக் கொளுத்தினர். வைக்கோல் படப்புகள் அத்தனையும் கொளுத்திச் சாம்பலாக்கி, அப்பகுதியையே சுடுகாடாக்கி விட்டனர். பார்க்க சகிக்காத கொடுமை.

அன்று மதியம் மில் வேலைக்குப் போன தோழர் மாரிமுத்துவிற்கு இச்சம்பவம் தெரியாது. அம்மச்சியார்பட்டி மக்கள் இடையன்குளத்திற்கு வந்து அடைக்கலமாகி விட்டனர். தோழர் மாரிமுத்து பணிபுரியும் மில்லுக்கு தொலைபேசி மூலம் தகவல் தந்து "ஊர் நிலமை சரி இல்லை; நடு இரவில் பணி முடிந்ததும் ஊர் திரும்ப வேண்டாம். அங்கேயே தங்கிவிட்டு மறுநாள் மே 11 அன்று பகலில் ஊர் வரவும்" என்று தகவல் தந்தாகி விட்டது.

மில்லிலேயே தங்கிய சிலர் விடிந்ததும் மே 11 அன்று காலை 6 மணிக்கு சைக்கிளில் இடையன்குளம் வரை வரும்போதுதான் மடக்கிப் பிடித்து சாதியைக் கேட்டு அடித்து கடத்திச் சென்றுள்ளனர்.

மே 11, 12 தேதிகளில் உறுதியாக தோழர் மாரிமுத்து இடையன்குளத்து தாழ்த்தப்பட்ட சாதியினரால் பிடிக்கப்பட்டு



படிப்பகம்

www.padippakam.com

விட்டார் என்று தகவல் தந்த போதும் காவல் துறை நடவடிக்கை எடுக்கவில்லை. பிடித்த மறுநாள் 12.5.97 அன்று "கைகால்களை வெட்டி வைக்கோல் படப்புகளில் வைத்து தீ வைத்தனர்" என்று கேள்விப்பட்டு அன்றே தெரிவித்த போதும் உயர் அதிகாரிகள் மிகவும் மெத்தனமாக இருந்தனர்.

மே 14 - ஆம் தேதி நடந்த அனைத்துக் கட்சிக் கூட்டத்தில் முதல்வர் கருணாநிதி "பிடித்து வைத்திருந்த இரு சிறுவர்கள் மீட்கப்பட்டு விட்டனர். அவர்கள் வீடு வந்து சேர்ந்துவிட்டனர்", என்று தவறான, பொய்யான தகவலைத் தந்தார். அச்செய்தி அனைத்துச் செய்தித் தாள்களிலும் வந்துள்ளது. மே 12 அன்று டி.எஸ்.பி. மருதையா, இன்ஸ்பெக்டர் மாறன் இருவருமே அவர்கள் வாயாலேயே "இருவரையும் வெட்டி தீ வைத்துக் கொளுத்தி விட்டனர்" என்று மகனைப் பறி கொடுத்த தாயிடமே கூறினார்கள். முதல்வர் மே 14 அன்று அனைத்துக் கட்சிக் கூட்டத்தில் அப்பட்டமாகப் புளுகியுள்ளார்.

17.5.97 அன்று தான் தேவர் சாதியினர் ஒன்று திரண்டு, மாவட்ட ஆட்சித் தலைவர், போலீஸ் உயர் அதிகாரிகள் வந்தபோது மடக்கி முற்றுகையிட்டு, "இதற்கு ஏதாவது ஒரு வழி சொல்லுங்க பிறகு தான் போக விடுவோம்" என்று கூறியுள்ளனர். அந்தச் சூழலை சமாளிக்க ஆட்சித் தலைவர் ராஜ கோபாலும், டி.எஸ்.பி. மருதையாவும் உடனே நடவடிக்கை எடுப்பதாகவும், இது தொடர்பாக ஏற்கெனவே நான்கு பேரை கைது செய்திருப்பதாகவும் தெரிவித்தனர்.



மம்சாபுரத்து மில் தொழிலாளர்கள் மாரிமுத்து, குருசாமி உயிருடன் எரிக்கப்பட்ட இடத்தில் எஞ்சிய சில எலும்புத் துண்டுகள் (வட்டத்தினுள்).

இறுதியில், "நடந்தது நடந்து விட்டது. நிவாரணத் தொகையை பெற்றுக் கொண்டு இனி அப்படிப்பட்ட செயலில் இறங்காதீங்க" என்று இருவருக்கும் அறிவுரை வழங்குகிறது. அரசு.

இந்தக் காவல் துறை சாதாரண ஏழை, எளிய மக்கள் பாதிப்புக்குள்ளானால் எப்படி அக்கறைப்படுகிறார்கள் பாருங்கள்.

★☆★

மே 11 அன்று மம்சாபுரம் கிராமத்தில் மாலை ஐந்து மணிக்கு இருபத்துஐந்து வயது இளைஞரும், வயதான உழைத்து உழைத்து ஓடாகிப் போன ஒரு தாயும் மம்சாபுரம் காவல் நிலையத்தில் டி.எஸ்.பி. மருதையா, இன்ஸ்பெக்டர் மாறன் மற்றும் கந்தசாமி, சத்தியநாதன் ஆகியோரிடம் கதறி முறையிடுகிறார்கள். "அய்யா! சாமி! எம் பையனை இடையன்குளத்துக்காரங்க புடிச்சி வச்சிருக்காங்களாம், எப்படியாவது மீட்டுக் கொண்டு வாங்க சாமி, உங்க கால்ல விழுந்து கேட்டுக்கிறேன். எம்மவன் ஒரு வம்புக்கும் தும்புக்கும் போகாதவன்; அவனை பிடிச்சி வைத்து இருக்கிறார்கள், அவன் அப்பிராணி" என்று அந்த தாய் வாயிலும் வயிற்றிலும் அடித்துக் கொண்டு கதறி அழுது புரளுகிறார்.

அத்தாயின் மூத்த மகன் "சார் இடையன் குளத்துக்காரங்க தான் பிடிச்சி வைச்சிருக்காங்க சார். மில்லுல வேலை பார்த்துவிட்டு வந்த மற்ற வேலைக்காரங்க எல்லாம் பார்த்திருக்காங்க சார்" என்று அழுது கெஞ்சியிருக்கிறார்.

"இந்த பாரும்மா! சும்மா சத்தம் போடக்கூடாது. இந்த ஃபார்ம்ல மகன் காணாம போன விபரம் பற்றி எழுதி ரிப்போர்ட் கொடு. உடனே அவசரப்பட்டு எதுவும் செய்ய முடியாது. இடையன் குளம் ஊரைச் சுற்றி நாலு பக்கம் போக முடியாத படி மரம், முள், மின் கம்பிகளால் பாதையை தடுத்து வைத்துள்ளனர். அதை மீறிப் போகனுமுன்னா மேலிடத்து உத்தரவு வந்தாதான் செய்ய முடியும். அந்த ஊர் தலைவர்களைக் கேட்டதற்கு நீ சொன்ன மாதிரி யாரையும் பிடித்து வைக்கல்ல என்கிறாங்க, சரி, வீட்டுக்குப் போய்விட்டு நாளைக்கு வாங்க" என்றார்.

ஜனாதிபதியோ, துணை ஜனாதிபதியோ, ஆளுநரோ, முதல்வரோ, முக்கிய அமைச்சர்கள் அல்லது அவர்கள் வீட்டுப் பிள்ளைகள், மூப்பனார், கருணாநிதியின் வாரிசுகள், மாவட்ட ஆட்சித் தலைவர், காவல்துறை தலைவர் அவர்களின் பிள்ளைகள் உயிருடன் கடத்தப்பட்டிருந்தால் அரசும், போலிசும் இப்படி மெத்தனமாக இருந்திடுமா?

இரவு முழுவதும் தூங்காது, விடிந்தும் விடியாத அதிகாலையில் தலைவிரி கோலமாக "அய்யா போனிங்களா, விசாரிச்சீங்களா அய்யா நல்ல பதில் சொல்லுங்களே! ஒங்களுக்கெல்லாம் புள்ளக்குட்டிங்க இல்லை? ஒங்களுக்கு குடும்பம் மனைவி மக்க இருக்காங்களா" என்று கதறியபடி "அந்த ஊர்க்காரங்க என் பையனை அடிச்சி முறிச்சி வைக்க படப்புல போட்டுட்டாங்களாம். அய்யா சாமிகளா போய் என் பையன் ஒடம்பையாவது கொண்டாங்கய்யா. கடேசியா ஒருதரம் அவன் முகத்த பாத்துக்கிறேன்" என்று சொல்ல முடியாத துன்பத்தில் அத்தாய் மே 12 அன்று அதிகாலையில கதறி அழுகிறாள். அத்தாயின் மூத்த மகன் "சார் வைக்க படப்புல வைச்சி தீ வெச்சிட்டாங்களாம் போயி ஏதாவது மிஞ்சினா ஒடம்ப அல்லது எலும்பையாவது கொண்டாங்கய்யா" என்று கேட்கிறார்.

உடனே அந்த திமிர் பிடித்த காக்கி சட்டைக் காரர்கள் "ஓ! என்ன இங்க வந்து ஒப்பாரி வக்கிற. ஒனக்கு இன்னிக்குத்தான் தெரியுமா? எல்லாம் முடிஞ்சு போச்சு! எங்களுக்கு எல்லாம் நேத்தே தெரியும்; என்ன செய்யறது. எங்களால் மேலிடத்து உத்தரவு இல்லாம என்ன செய்ய முடியும். ஒங்களால முடிந்தால் நீங்க போங்க. ஊர் மக்களைத் திரட்டிக் கொண்டு போங்க" என்று திமிராகக் கூறியுள்ளனர்.

உடனே அத்தாயின் மூத்த மகன், "சார் சாதிக் கலவரத்தில எதையும் நாங்களா பார்த்துக்கணும் என்றால் எங்க ஊர்ல எதற்கு இந்தக் காவல் நிலையம், எதற்கு உங்களுக்கெல்லாம் வேலை! நீங்க ஊரை விட்டு வெளியேறுங்க" என்று ஆத்திரம் பொங்கக் கதறினார்.

தகவல்:
பு.மா.இ.மு.,
தென் மாவட்டங்கள்

■ ■ ■


படிப்பகம்

www.padippakam.com

## பஞ்சாப் போலீசு அதிகாரி தற்கொலை:

# அரசு பயங்கரவாதியின் சாவுக்கு பச்சாதாபம் எதற்கு?

“தீவிரவாதிகளின் குண்டுகளோ, இயந்திரத் துப்பாக்கிகளோ எங்களைப் பீதியுறச் செய்யவில்லை; பாகிஸ்தானின் இரகசிய உளவுப் படையான ஐ.எஸ்.ஐ.யின் சதி வேலைகள் எங்களை அச்சுறுத்தவில்லை. ஆனால் மனித உரிமை அமைப்புகள் எங்களைச் சிதைத்து வருகின்றன. அவர்கள் மறைமுகமாக எங்களைக் கொன்று வருகிறார்கள். இன்று சந்து இறந்து விட்டார். ஆனால் நாளை யார் என்ற வேதனையில் நாங்கள் உழல்கிறோம்.”

— கடந்த மே மாத இறுதியில் பஞ்சாபின் தரன் தரன் மாவட்ட முதுநிலை போலீசு கண்காணிப்பாளராக இருந்த அஜித் சிங் சந்து என்ற போலீசு உயரதிகாரி தற்கொலை செய்து கொண்டதும், மற்றொரு போலீசு அதிகாரி இப்படிப் புலம்பினார். இவர் மட்டுமல்ல; பஞ்சாபின் ஒட்டு மொத்த போலீசுத் துறையே மனித உரிமை அமைப்புகள் மீதும் நீதித்துறையின் மீதும் வெறுப்பையும் ஆத்திரத்தையும் கக்குகின்றன.

பஞ்சாபில் சீக்கிய பயங்கரவாதம் தலைவிரித்தாடிய போது, அதை ஒடுக்குவது என்ற பெயரில் அரசு பயங்கரவாத அடக்குமுறையை இந்திய ஆட்சியாளர்கள் ஏவி விட்டனர். பஞ்சாபின் போலீசு தலைமை இயக்குநரும், இரத்தவெறி பிடித்த பயங்கரவாதியுமான கே.பி.எஸ். கில் தலைமையில் இரகசிய கொலை குழுக்கள் கட்டியமைக்கப்பட்டு, சீக்கியர்கள் நரவேட்டையாடப்பட்டனர். தீவிரவாதிகளுக்குப் புகலிடம் அளித்தார்கள் என்ற பெயரிலும், மோதல் என்ற பெயரிலும் அப்பாவிகள் ஆயிரக்கணக்கில் சுட்டுக் கொல்லப்பட்டனர்; சிறையில் அடைத்து கொடூரமாகச் சித்திரவதை செய்யப்பட்டனர். சாதாரண உடையில் வந்த போலீசாரால் இழுத்துச் செல்லப்பட்ட பலர் 'காணாமல்' போயினர். “உங்கள் குடும்பத்தினரைத் தீவிரவாதிகள் பட்டியலில் சேர்த்து விடுவோம்” என்று அச்சுறுத்தி, பயங்கரவாதப் போலீசார் பணப்பறிப்புகளையும் பாலியல் வன்முறைகளையும் கேள்விமுறையின்றித் தொடர்ந்தனர். சீக்கிய தீவிரவாதிகளின் செல்வாக்குள்ள கிராமப் புறங்களில் பயிர்களையும் உழுபடைக் கருவிகளையும் நாசமாக்கினர். மழைக் காலத்தில் முன்னறிவிப்பின்றி அணைகளைத் திறந்து விட்டு தீவிரவாதிகள் நடமாடும் கிராமங்களையே வெள்ளத்தில் மூழ்கடித்தனர். இத்தகைய அரசு பயங்கரவாத அட்டூழியங்களுக்கு எதிராகக் குரலெழுப்பிய மனித உரிமை அமைப்புகளின் செயல் வீரர்களைக் கடத்திச் சென்று சுட்டுக் கொன்றனர். பத்திரிகையாளர்களை உண்மைச் செய்திகளை வெளியிட முடியாமல் துப்பாக்கி முனையில் அச்சுறுத்தினர். எல்லாவற்றுக்கும் மேலாக, மோதலில் சுட்டுக் கொல்லப்பட்ட 2500-க்கும் மேற்பட்ட அப்பாவிகளின் சடலங்களை உறவினர்களிடம் ஒப்படைக்காமல், யாரும் உரிமை கோரவில்லை என்று போலீசாரே தீயிட்டுக் கொளுத்தினர்.

பஞ்சாபின் மற்ற பகுதிகளை விட, சீக்கிய பயங்கரவாதிகளின் கோட்டையாக கருதப்பட்ட தரன்தரன் மாவட்டத்தில்தான் இத்தகைய அரசு பயங்கரவாத அட்டூழியங்கள் எல்லைமீறி போலீசாரால் நடத்தப்பட்டன. 1991-லிருந்து தரன்தரன் மாவட்ட முதுநிலை போலீசு கண்காணிப்பாளராகச் செயல்பட்டு, இப் பயங்கரவாத அதிக்கிரமங்களைத் தலைமையேற்று நடத்தியவர்தான் அஜித்சிங் சந்து.

அரசு பயங்கரவாத வெறியாட்டங்களால் கணவனை இழந்த மனைவி, மகனை இழந்த பெற்றோர், உறவினர்களை இழந்த குடும்பத்தினர், அற்ப உடைமைகளையும் இழந்து தவித்த விவசாயிகள் என பஞ்சாப் மாநிலமே பரிதவித்தது. பயங்கரவாதப் போலீசாரின் அச்சுறுத்தலையும் மீறி இவர்களில் சிலர் உயர்நீதி மன்றத்திலும் உச்சநீதி மன்றத்திலும் மனுச் செய்தனர். நீண்ட காலமாகக் கிடப்பில் போடப்பட்ட இந்த வழக்குகள், மனித உரிமை அமைப்புகளின் தொடர்ச்சியான போராட்டத்துக்குப் பிறகு 1995-ல் மெதுவாக விசாரிக்கப்பட்டன. அதைத் தொடர்ந்து கடந்த ஈராண்டுகளில் போலீசாரின் அட்டூழியங்களால் பாதிக்கப்பட்டவர்கள் நிவாரணம் கோரி தொடரப்பட்ட வழக்குகள் பெருகி, இன்றைய நிலையில் 1200-க்கும் மேற்பட்ட வழக்குகள் போலீசாரின் மீது பதிவாகியுள்ளன. இவ்வழக்குகளில் 2,000-க்கும் மேலான போலீசார் சிக்கியுள்ளனர். இவர்களில் 585 பேர் மீது வழக்கு தொடரப்பட்டுள்ளது. இதுதவிர 95 போலீசு அதிகாரிகள் மீது சி.பி.ஐ. விசாரணை நடந்து வருகிறது. 30 போலீசு உயரதிகாரிகள் தற்காலிகப் பணி நீக்கம் செய்யப்பட்டு உச்ச நீதிமன்ற உத்திரவுப்படி சிறையிடப்பட்டுள்ளனர். எனினும், ஏற்கனவே சிறையிடப்பட்ட 100-க்கும் மேற்பட்ட போலீசு அதிகாரிகள் பிணையில் வெளிவந்துள்ளனர். தற்போது தொடரும் விசாரணைகளில் ஆறில் ஒரு பங்கு போலீசு உயரதிகாரிகள் சிக்கியுள்ளதாக பஞ்சாப் பத்திரிகைகள் எழுதுகின்றன.

இட்லர் வழியில் தற்கொலை செய்துகொண்ட அரசு பயங்கரவாதி அஜித்சிங் சந்து.



தற்கொலை செய்து கொண்ட போலீசு உயரதிகாரியான அஜித்சிங் சந்துவின் மீது 40-க்கும் மேற்பட்ட வழக்குகள் உள்ளன. இவற்றில் குறிப்பாக, தரண்தரண் மாவட்டத்தில் இவர் தலைமையிலான பயங்கரவாதப் போலீசார் நூற்றுக்கணக்கானோரைக் கொன்றொழித்துள்ளதைப் பற்றி விசாரணை நடந்து வருகிறது. மனித உரிமை அமைப்பின் செயல்வீரரான கல்ரா என்பவரைக் கடத்திச் சென்று சுட்டுக் கொன்ற வழக்கிலும் இவர் குற்றம் சாட்டப்பட்டுள்ளார். இவை தவிர, தமது பயங்கரவாத அதிகாரத்தைக் கொண்டு சில விவசாயிகளிடமிருந்து நிலங்களை அபகரித்ததாகவும், பணம் பறித்ததாகவும் புதிய வழக்குகள் தொடரப்பட்டுள்ளன.

சீக்கிய தீவிரவாதத்துக்கு எதிராக அரசு பயங்கரவாத வெறியாட்டங்களைத் தலைமையேற்று நடத்தியதற்காக இவர் இருமுறை 'குடியரசுத் தலைவர்' பதக்கம் பெற்றவர். தரண்தரண் மாவட்ட காவல் தெய்வம் என்று போலீசாரால் பாராட்டப்பட்டவர். எனவே அதிகார போதையில் தன்னை ஆட்டவோ அசைக்கவோ முடியாது என்று செருக்கோடு நடந்து வந்தார். ஆனால் மனித உரிமை அமைப்புகளின் விடாப்பிடியான போராட்டத்தால், சந்துவின் மீதான வழக்குகளும் விசாரணைகளும் தீவிரமடையத் தொடங்கியதும் பீதியடைந்த அவர் தற்கொலை முடிவைத் தேடிக் கொண்டார்.

சந்துவின் சாவைத் தொடர்ந்து, பயங்கரவாத எதிர்ப்புப் போராளி மறைந்து விட்டார் என்று தேசிய பத்திரிகைகள் ஒப்பாரி வைக்கின்றன. பஞ்சாபில் சீக்கிய தீவிரவாதத்தின் முதுகெலும்பை முறித்தவர்; உண்மையான போலீசு நாயகன்; அவரது சாவு தேசிய முக்கியத்துவம் வாய்ந்தது என்று தலையங்கமும், சிறப்புக் கட்டுரைகளும் வெளியிடுகின்றன. இந்துவெறி ஆர்.எஸ்.எஸ். கும்பலின் பஞ்சாப் மாநிலப் பத்திரிகையான “பாஞ்சஜன்யா”, அகாலிகளின் அரசு போலீசு அதிகாரிகளைத் தொல்லைப்படுத்துகிறது; அதனால் தான் சந்து தற்கொலை செய்து கொண்டார் என்று குற்றம் சாட்டுகிறது. “சுவர்ண ஜெயந்தி” இரத யாத்திரை நடத்திக் கொண்டிருந்த அத்வானி சந்துவின் சாவை அறிந்ததும், தீவிரவாதத்தை முறியடித்த உண்மையான தேசபக்தர் இவர்தான் என்று வேதனையில் குமுறினார்.

பஞ்சாபின் முன்னாள் காங்கிரசு முதல்வரான ராஜிந்தர் கவுர், அகாலிகளின் அரசு போலீசாரைப் பழிவாங்க முயற்சிப்பதைத்



படிப்பகம்

www.padippakam.com

தொடர்ந்தால், போலீசார் கிளர்ச்சியில் இறங்குவார்கள் என்று கொக்கரித்தார். பஞ்சாபின் முன்னாள் பயங்கரவாதப் போலீசு தலைமை இயக்குநரான கே.பி.எஸ். கில், நாங்கள் என்ன கொலைகாரர்களா? நாங்கள் போராடியிருக்காவிட்டால், இந்தியாவிலிருந்து பஞ்சாப் துண்டாடப்பட்டிருக்கும் என்று சீறுகிறார். இதன் எதிரொலியாக, அமிர்தசரசு சிறையில் அடைக்கப்பட்டுள்ள போலீசு அதிகாரிகள், தங்கள் மீதான கிரிமினல் வழக்குகளைத் தள்ளுபடி செய்யக் கோரி உண்ணாவிரதப் போராட்டத்தை நடத்தினர். பஞ்சாபின் தற்போதைய போலீசு தலைமை இயக்குநரான டோக்ராவும், மாநில போலீசு அதிகாரிகள் சங்கமும் விசாரணையிலுள்ள போலீசாருக்குப் பாதுகாப்பும் சட்ட உதவியும் செய்து தர வேண்டுமென்கின்றனர். சீக்கிய தீவிரவாதிகளுக்கு எதிரான யுத்தத்தின் போது ஏற்பட்ட பாதிப்புகளை அத்துமீறலாக குற்றம் சாட்டக்கூடாது; இது போலீசாரின் தார்மீக ஆற்றலைச் சிதைத்துவிடும்; எனவே போலீசார் மீதான அனைத்து வழக்குகள் - விசாரணைகளையும் ரத்து செய்ய வேண்டும் என்று ஓய்வு பெற்ற பயங்கரவாதப் போலீசு அதிகாரிகள் எச்சரிக்கின்றனர்.

சுருக்கமாகச் சொன்னால், இரத்தவெறி பிடித்த போலீசார் பயங்கரவாத அட்டூழியங்களில் ஈடுபடுவதை அங்கீகரிக்க வேண்டும். அதை எதிர்த்து யாரும் கேள்வி கேட்கக் கூடாது. நரவேட்டையாடும் போலீசு மிருகங்கள் தான் நாட்டின் உண்மையான தேச பக்தர்கள். அவர்களது கொடூர சித்திரவதைகளையும் கொலை வெறியாட்டங்களையும் நாட்டு மக்கள் சகித்துக் கொள்ள வேண்டுமே தவிர, விசாரிக்கவோ தண்டிக்கவோ கூடாது என்பதுதான் பஞ்சாப் பயங்கரவாதப் போலீசாரின் நியாயவாதம். அதுதான் உண்மையான தேச பக்தி என்று இப்பாசிச வெறிபிடித்த போலீசாருக்கு 'தேசியக்' கட்சிகளான பாரதீய ஜனதாவும், காங்கிரசும் ஆதரவாக நிற்கின்றன. பாசிச ஜெயா ஆட்சியில், வாச்சாத்தியில் நடந்த போலீசு அதிக்கிரமங்களுக்கு எதிராகப் போராட்டம் நடத்திய 'மார்க்சிஸ்டு'களோ, பஞ்சாப் போலீசாரின் பயங்கரவாத அட்டூழியங்களை தேசியக் கட்சிகளோடு சேர்ந்து நியாயப்படுத்துகின்றனர். வழக்கில் சிக்கியுள்ள போலீசாருக்கு சட்ட ரீதியாகவும் பொருளாதார ரீதியாகவும் மாநில அரசு உதவிட வேண்டும் என்று வெட்கமின்றி அறிக்கை விடுக்கிறார், 'மார்க்சிஸ்டு' பொதுச் செயலாளரான சுர்ஜித். ஜனநாயக உரிமையையும் மனித உரிமையையும் காலில் போட்டு மிதிக்கும் வகையில் நாளை பாசிச பயங்கரவாதம் அதிகாரத்துக்கு வருமானால், இக்கட்சிகள் அனைத்துமே அதற்கு ஆதரவாக ஓரணியில் நிற்கும் என்பதையே இவை நிரூபித்துக் காட்டுகின்றன.

உலகையே தனது காலடியில் கொண்டு வந்து வெறியோடு ஆட்டம் போட்ட பாசிச இட்லர், கடைசியில் தற்கொலைதான் செய்து கொண்டான். அவனது சாவைக் கண்டு ஜனநாயக உலகம் மகிழ்ச்சியில் திளைத்ததே தவிர, வருந்தவில்லை. அந்த வகையில், இட்லரின் வாரிசான சந்து தற்கொலை செய்து கொண்டதை அறிந்து, அரசு பயங்கரவாதத்தால் பாதிக்கப்பட்ட பஞ்சாப் மக்கள் இனிப்புகள் வழங்கி கொண்டாடியதில் வியப்பேதுமில்லை. மனித உரிமை, ஜனநாயக உரிமைகளுக்கான போராட்டத்தை படர்ந்துவரும் பாசிச அபாயத்துக்கு எதிரான போராட்டமாக நாடும் மக்களும் முன்னெடுத்துச் செல்லாமல், பயங்கரவாதப் போலீசாரை முறியடிக்கவும் சாத்தியமில்லை.

• செல்வம்

## சேலம் - தி.மு.க. மாநாடு

# ஜெயா வழியில் மு.க.

கடந்த ஜூன் 27, 28, 29 தேதிகளில் சேலத்தில் தி.மு.க. வின் மாநில சிறப்பு மாநாடு நடந்து முடிந்தது. ஒரு ஆளும் கட்சியின் மாநாடு எவ்வளவு 'சீரும், சிறப்போடும்' நடைபெற வேண்டுமோ அந்த இலக்கணப்படி நடந்து முடிந்தது.

முன்னெல்லாம் தி.மு.க.வின் மாநாட்டு இறுதி நிகழ்ச்சியாக வரவு, செலவு கணக்கு ஒப்படைக்கப்படும். இம்மாநாட்டில் அதெல்லாம் இல்லை. மொத்த வசூல் பற்றி வாய் திறக்கவில்லை. மாநாட்டுச் செலவு போக ரூ. 74 லட்சம் ஒப்படைக்கப்படுகிறது என்பதுடன் நிறுத்தி கொண்டனர்.

ஆனால் 20 கோடி ரூபாய்க்கு ரசீது அச்சடிக்கப்பட்டது. இது தவிர ரசீதை நகலெடுத்தும் வசூல் செய்துள்ளனர். வசூல் தமிழகமெங்கும் நடந்தது. சிறிய கடைகளுக்கு ஆயிரக்கணக்கிலும், ஆலைகளில் லட்சக் கணக்கிலும் கட்டாய வசூல் செய்தனர். தெருவோர பூக்காரிகளிடம் கூட நூற்றுக் கணக்கில் வசூலித்துள்ளனர்.

ஊரெங்கும் தோரணங்கள், அலங்கார வளைவுகள், மலர்க் கிரீடங்கள் என ஆடம்பர, ஊதாரித்தனத்தை 70-களில் தொடங்கி வைத்த கருணாநிதி, கடந்த தேர்தலின் போது தனது கூட்டங்களில் ஆடம்பரமிருக்காது என அறிவித்தார். இம்மாநாட்டில் கோடிக்கணக்கில் கொட்டி தோரணங்கள், அலங்கார வளைவுகள், கட் அவுட்டுகள், தோரணவாயில்கள், 15 ஏக்கரில் மா...பெரும் பந்தல், கண்ணைப் பறிக்கும் அலங்காரங்கள், மின்னிடும் விளக்குகள் என ஆடம்பரத்தை 'ஜெ' க்குச் சற்றும் குறைவில்லாமல் நடத்திக் காட்டினர்.

அதே போல அரசு எந்திரத்தை முடுக்கி விட்டு மாநாட்டு வேலைகள் நடந்தன. அதிகாரிகளையும் இறக்கிவிட்டு நிதி வசூலை வாரிக் குவித்தனர்.

மாநாட்டு ஊர்வலமோ சொல்லி மாளாது. மாலை 5 மணிக்குத் தொடங்கிய ஊர்வலம் மறுநாள் மதியம் வரை நடந்துள்ளது. ஊர்வலத்தின் நோக்கம் பிரம்மாண்டம்தான். பணத்தை வாரியிறைக்கையில் கூட்டத்திற்கு என்ன குறைச்சல்?

ஊர்வலத்தில் வந்த யாருக்கும் எதற்காக மாநாடு எனத் தெரியவில்லை. தனது வாரிசு மு.க. ஸ்டாலினுக்கு முடிசூட்டு விழா எனப் பகிரங்கமாக அறிவிக்கவில்லை. மற்றபடி மு.க. விற்கு அடுத்தது மு.க. ஸ்டாலின் தான் என்று முடிசூட்டு விழாவாக மட்டுமே கட்சி மாநாடு நடந்தது. ஸ்டாலின் துதி பாடாத நபர்கள் யாருமே இல்லை. அன்பழகன் உட்பட, எம்.எல்.ஏ. உட்பட பலரும் ஸ்டாலின் காலில் விழுந்து எழுந்தனர்.

மாநாட்டுக்கு முன்னர் எல்லா பார்ப்பனப் பத்திரிகைகளும் தி.மு.க., த.மா.கா உறவு முறிந்தது; மாநாட்டில் த.மா.கா.வை திட்டி விளாசி விட்டு முறிவை அறிவிப்பார்கள்' எனத் தமது பேராசையை வெளிச்சம் போட்டுக் காட்டின, மாநாடு அதற்கு மாறாக முடிந்தது. பார்ப்பனப் பத்திரிகைகளின் எண்ணத்தில் மண்ணைப் போட்டது. பத்திரிகைகளின் மீதான எரிச்சலை கருணாநிதியின் நேர் காணலில் பார்க்க முடிந்தது.

'ஜாதியைச் சொல்லிக் கொண்டு திரிபவன் தி.மு.க. காரனுமல்ல; எனது தம்பியுமல்ல' என கருணாநிதி பேசினார். தி.மு.க வெறும் அரசியல் கட்சி மட்டுமல்ல, சமூக மாற்றத்துக்கான இயக்கமுமாகும் என நினைவுபடுத்தினார்.

தென்மாவட்ட சாதிக் கலவரங்களைக் கண்டித்தும் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

அ.தி.மு.க.வின் ஆடம்பர, ஊதாரித்தனமான வழியில் ஒரு பகட்டான மாநாடாக, தனது மகன் ஸ்டாலினை தலைவராக்கும் மாநாடாக மட்டுமே நடந்தது 'சிறப்பு மாநாடு'. சாதிகளற்ற சங்கத் தமிழ் கால சமூகம் அமைப்போம் என வாய்வீச்சுப் பேச்சு முழங்கியது. அன்றும் சாதியக் கொடுமைகள் நிலவினவே!

சரிதான். மேல்சாதி ஆதிக்க வெறியர்களின் ஆட்சியாகத் தானே இன்றும் நடக்கிறது. அதைத்தான் பகிரங்கமாக அறிவித்துள்ளார்கள்.

☆ ☆ ☆


படிப்பகம்

www.padippakam.com

# தில்லி ஆலை மூடல்கள் சூறையாடப்படும் தொழிலாளர் வாழ்வு

அன்று மே நாள். உலகத் தொழிலாளர்களின் அரசியல் ஆர்ப்பாட்ட நாள்! மாலையில் தொழிலாளர் பேரணி தொடங்கியது. டெல்லியிலுள்ள சுதந்திர பாரத் மில் தொழிலாளர்களும் அனைத்து தொழிற்சங்க கூட்டமைப்பு நடத்திய அப்பேரணியில் பங்கேற்று முழங்கினார்கள்: "மூடிய ஆலையை உடனே திற! தொழிலாளிகளுக்கு உடனடியாக சம்பளப் பாக்கியைக் கொடு!".

சுதந்திர பாரத் மில் மட்டுமல்ல; பிர்லா, சிறீராம் நெசவாலைகள், பூச்சி மருந்து நிறுவனங்கள் உள்ளிட்டு சிறியதும் பெரியதுமான 168 ஆலைகள் டெல்லியில் மூடிக்கிடக்கின்றன. இவற்றில் பணியாற்றிய 30,000-க்கும் மேற்பட்ட தொழிலாளர்கள் வேலையிழந்து, கடந்த டிசம்பர் முதலாக தமது சம்பளப் பாக்கியும் கிடைக்காமல் பரிதவிக்கின்றனர்.

சர்வேஷ் சந்த்; சுதந்திர பாரத் மில்லில் 20 ஆண்டுகளுக்கும் மேலாகப் பணியாற்றி வேலை இழந்த 1800 தொழிலாளிகளில் அவரும் ஒருவர். கடந்த நான்கு மாதங்களாக அவரது குடும்பம் பட்டினியால் வாடியது. லாரிகளைச் சுத்தம் செய்யும் கிளீனராக, தள்ளு வண்டியில் காய்கறி விற்பவராக, நடைபாதையில் கைக்குட்டை விற்பவராக — என எப்படியாவது உழைத்து அவர் வாழ்க்கையை ஓட்டப் பார்த்தார். முடியவில்லை. மாதம் ரூ. 2500 சம்பளம் பெற்ற போதே சிரமப்பட்ட அவரது குடும்பம், இப்போது சம்பளமே இல்லாத நிலையில் எப்படி வாழ முடியும்? எட்டாவது படிக்கும் அவரது மூத்த மகள் தேர்வுக் கட்டணம் செலுத்த முடியாததால் ஆண்டு இறுதித் தேர்வை எழுத முடியவில்லை. நோய் வாய்ப்பட்ட இளைய மகனை மருத்துவமனைக்குக் கூட்டிச் செல்ல பேருந்துச் செலவுக்குக்கூட கையில் காசில்லை. கடன் கொடுப்பாரும் யாருமில்லை.

மேதின ஊர்வலத்தில் பங்கேற்றுவிட்டு இரவு வீடு திரும்பிய சர்வேஷ் சந்த், பட்டினியோடு படுத்துக் கிடந்தார். வாழ்க்கை அவருக்குக் கசந்தது. இனி எப்படி வாழ்வது என்ற வேதனையில் விரக்தியின் விளிம்புக்கே சென்றார். அன்று அவர் மனைவி கடன் வாங்கி வைத்திருந்த மண்ணெண்ணெயை உடலெங்கும் ஊற்றிக் கொண்டு தீயிட்டுக் கொண்டார்.

சர்வேஷ் சந்த் கடுமையான தீக்காயங்களுடன் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு, மூன்றாவது நாளில் மாண்டு போனார். அதே நாளில் அவரது சக தொழிலாளி ஒருவர் தீக்குளித்து தற்போது மருத்துவமனையில் உயிருக்குப் போராடிக் கொண்டிருக்கிறார். கடந்த மே 16-ம் நாளன்று பிர்லா மில்லைச் சேர்ந்த வேலையிழந்த ஒரு தொழிலாளி தீக்குளித்து மாண்டு போனார். இன்னும் எத்தனை தொழிலாளிகள் தற்கொலை செய்து கொள்வார்கள்? தெரியவில்லை.

தலைநகர் டெல்லியில் சுற்றுச் சூழலை நஞ்சாக்கும் ஆலைகள் அனைத்தையும் உடனடியாக மூடுமாறு உச்ச நீதி மன்றம் கடந்த நவம்பரில் உத்திரவிட்டது. இதன்படி, 168 ஆலைகள் இனங்காணப்பட்டு மூடப்பட்டன. "ஆலைகளை டெல்லி புறநகரிலுள்ள தொழிற்பேட்டையில் நிறுவிக் கொள்ளலாம்; புதிய இடத்தில் ஆலை நிறுவப்பட்டதும் தொழிலாளர்களுக்கு தொடர்ந்து வேலை தர வேண்டும். ஆலையை புதிய இடத்தில் நிறுவும் வரை இடைக்காலத்தில் தொழிலாளர்களுக்கு முழுச்சம்பளம் தர வேண்டும். புதிய இடத்திற்கு குடிபெயரும் தொழிலாளர்களுக்கு 8.33% கூடுதல் போனஸ் தர வேண்டும். குடிபெயராமல் வேலையிலிருந்து விலகிக் கொள்ளும் தொழிலாளிக்கு சட்டப்படி நட்ட ஈட்டுத் தொகையைத் தர வேண்டும். இதோடு ஓராண்டு கால சம்பளத் தொகையை கூடுதல் நிவாரணமாக அளிக்க வேண்டும்" என்று உச்ச நீதி மன்றம் உத்திரவிட்டது.

இதன்படி, இந்துஸ்தான் தாவர எண்ணெய் நிறுவனம் (HVOC), இந்துஸ்தான் பூச்சி மருந்து நிறுவனம் (HIL) முதலான அரசுத் துறை நிறுவனங்கள் மட்டுமே தொழிலாளர்களுக்கு நட்ட ஈடு-நிவாரணத் தொகையைக் கொடுத்தன. இதர 164 தனியார் நிறுவனங்கள் அனைத்தும் உச்ச நீதிமன்றத் தீர்ப்புப்படி ஆலைகளை மூடினவே தவிர, சம்பளமோ நிவாரணமோ தராமல் தொழிலாளர்களை வீதியில் வீசி எறிந்தன. ஒருவரல்ல; இருவரல்ல; ஏறத்தாழ 30,000 பேர்.

இழப்பதற்கு ஏதுமில்லாத அத்தொழிலாளர் குடும்பங்கள் எத்தனை நாட்கள் பட்டினியோடு போராட முடியும்? நீதிமன்ற உத்திரவுப்படி சம்பளப் பாக்கியும் நிவாரணத் தொகையும் இன்று வரும், நாளை வரும் என்று எதிர்பார்த்து ஏமாந்து போனார்கள். பிர்லா மில்லில் தனது 17-வது வயதில் வேலைக்குச் சேர்ந்து 33 ஆண்டுகள் தனது ரத்தத்தை விற்ற தொழிலாளி லகாரி சிங், இன்று தனது 50-வது வயதில் பிச்சை எடுக்கும் நிலையில் உள்ளார். பாரத் மில்லைச் சேர்ந்த கோபாத் என்ற மூத்த தொழிலாளி மனநோயாளியாகி தெருவில் அலைகிறார்.

"சம்பளப் பாக்கியைக் கேட்டு நாங்கள் ஆலையின் முன் அமர்ந்து போராடினோம். ஆனாலும் எங்கள் முதலாளியை சந்திக்கவே முடியவில்லை. பின்னர் அவனது பங்களாவின் முன்பு தர்ணா போராட்டம் நடத்தினோம். அவனோ போலீசாரை வைத்து எங்களை விரட்டியடித்தான். தடியடியில் பல தொழிலாளர்களின் மண்டை உடைந்தது தான் மிச்சம்!" என்று, வேதனையோடு குறிப்பிடுகிறார், பாரத் மில்லைச் சேர்ந்த ஒரு தொழிலாளி.

நீதிமன்ற உத்திரவைத் துச்சமாக மதித்து, சம்பளமோ, நிவாரணமோ தராமல் ஏய்ப்பது மட்டுமின்றி, பல ஆலை முதலாளிகள் மூடப்பட்ட தமது ஆலை நிலங்களை வீட்டு மனைகளாக்கி கொள்ளை லாபமீட்டும்

நட்ட ஈடு – நிவாரணமின்றி தொழிலாளர்களை வேலையிலிருந்து விரட்டிய பிர்லா துணியாலை.







படிப்பகம்

www.padippakam.com



மறைந்த தொழிலாளி சர்வேஷ் சந்தின் அஸ்தி கலயத்தை வைத்து அஞ்சலி செலுத்தும் தொழிலாளர்கள்.

மாதிரி கணக்கெடுப்பின்படி, ஆலைத் தொழில் வேலை வாய்ப்பு விகிதம் 1981-91-ல் 1.6% ஆக இருந்தது. அதுவே 1991-95-ல் 0.8% ஆகக் குறைந்துவிட்டது.

பாசிச ராஜீவ் காலத்தில் அறிமுகப்படுத்தப்பட்டு இன்று தீவிரமாக்கப்பட்டுள்ள புதிய பொருளாதாரக் கொள்கையின் கோரமான விளைவுதான் இது. தனியார் மயம்-தாராளமயம்-உலகமயம் என்ற கேடுகெட்ட கொள்கையால் வேலை வாய்ப்பு பெருகவில்லை. தொழிலாளர் வாழ்வில் முன்னேற்றத்தையும் கொண்டு வரவில்லை. மாறாக, வேலையிழப்பும் பட்டினியும் தற்கொலைகளுமே தீவிரமாகியுள்ளன.

தன்னைத்தானே வருத்திக் கொள்ளும் கையாலாகாத காந்தியப் போராட்டங்களில் தொழிலாளர்களை மூழ்கடித்துவிட்ட தொழிற்சங்கத் துரோகத்தனத்தின் விளைவாக, இன்று சர்வேஷ் சந்த்கள் தீக்குளித்து மாண்டு போயிருக்கலாம். ஆனால் தொழிலாளர்கள் புரட்சிகர அமைப்புகளில் அணிதிரளும்போது, அவர்களது வர்க்கப் போராட்டத் தீயில் மக்கள் விரோதக் கொள்கைகள் அனைத்தும் பொசுங்கிப் போகும்.

• குமார்



ஆலை மூடலுக்கு உத்திரவிட்ட நீதிமன்றத் தீர்ப்புக்கு எதிராக உச்சநீதி மன்றம் அருகே ஆர்ப்பாட்டம் செய்யும் தொழிலாளர் குடும்பங்கள்.

முயற்சியிலும் இறங்கியுள்ளனர். டெல்லி புறநகரில் ஆலையை நிறுவ சாத்தியமில்லை என்று அண்டை மாநிலங்களில் ஆலையை நிறுவப் போவதாகவும் அங்கு வந்து பணியாற்றினால்தான் சம்பள பாக்கியைத் தருவோம் என்றும் சில ஆலை நிர்வாகங்கள் அச்சுறுத்துகின்றன. அரசோ, கைகட்டி நின்று வேடிக்கை பார்க்கிறதே தவிர, எந்தவொரு முதலாளியையும் தண்டிக்க முன்வரவில்லை. சம்பளமோ, நிவாரணமோ தராமல் ஏய்க்கும் முதலாளிகளின் சொத்துக்களைப் பறிமுதல் செய்யவோ, முடக்கி வைக்கவோ சட்டரீதியான நடவடிக்கைகளைக்கூட அது மேற்கொள்ளவில்லை. மாறாக, தொழிலாளர்களைத்தான் குடும்பம் குடும்பமாக பட்டினியில் தள்ளி தண்டிக்கிறது.

இந்நிலைமையை எதிர்த்து முறியடிக்கத் திராணியின்றி எல்லா தொழிற்சங்கங்களும் போலிக் கம்யூனிஸ்ட் கட்சிகளும் முடங்கிக் கிடக்கின்றன. நீதி மன்றங்களில் மேல் முறையீடு செய்து கெஞ்சுவதற்கு மேல் அவற்றால் ஒன்றும் செய்ய முடியவில்லை.

டெல்லி மட்டுமல்ல; மும்பை நகரிலும் இதே நிலைமைதான். கடந்த ஏப்ரல் மாதத்தில் கட்டாவ் மில் தொழிலாளர்கள் 6000 பேர் திடீரென ஒருநாள் வேலை நிறுத்தம் செய்தனர். கூலி உயர்வுக்கோ, போனசுக்கோ நடந்த போராட்டம் அல்ல இது. மூன்று மாதங்களாக தமக்குத் தராத சம்பளப் பாக்கியைக் கேட்டுத்தான் தொழிலாளர்கள் இப்போராட்டத்தை நடத்தினர். நாடு முழுவதும் பல்வேறு பெருந்தொழில் நிறுவனங்களில் இந்நிலைமை நீடிப்பதாகவும், ஏறத்தாழ ஒரு லட்சம் தொழிலாளர்களின் எதிர்காலம் கேள்விக் குறியாகி விட்டதாகவும் முதலாளித்துவ பத்திரிகைகளே அங்கலாய்க்கின்றன. தேசிய

## டெல்லி வழியில் தமிழகம்

கழிவுநீரை வெளியேற்றி பவானி ஆற்றை நஞ்சாக்கி வரும் கோவை-சிறுமுகையிலுள்ள சவுத் இந்தியா விஸ்கோஸ் ஆலைக்கெதிராக இப்பகுதிவாழ் மக்கள் நடத்திய நீண்ட நெடிய போராட்டத்திற்குப் பிறகு, கடந்த ஜனவரியில் நச்சுக் கழிவு ஆலையை மூடி விடுமாறு சென்னை உயர்நீதி மன்றம் உத்திரவிட்டது. இதன்படி மரக்கூழ் மற்றும் ரேயான் இழை உற்பத்திப் பிரிவுகளை ஆலை நிர்வாகம் மூடியுள்ளது. இதன் விளைவாக 2500-க்கும் மேற்பட்ட தொழிலாளர்கள் எவ்வித நிவாரணமும் நட்ட ஈடுமின்றி வேலையிலிருந்து விரட்டியடிக்கப்பட்டனர். இக்கொடுமையை எதிர்த்து கோவையிலுள்ள ஆலையின் நிர்வாக அலுவலகம் முன்பு ஆர்ப்பாட்டம் செய்த தொழிலாளர்களை போலீசார் மிருகத்தனமாகத் தாக்கி பலரது மண்டையை உடைத்தனர். நீதிமன்ற உத்திரவுப்படி, வேலையிழந்த தொழிலாளர்களை ஆலையின் இதர பிரிவுகளில் பராமரிப்பு பணியில் "ஷிப்ட்" முறையில் வேலைக்கு அமர்த்திக் கொள்வதாக நிர்வாக இயக்குனர் வாக்குறுதி அளித்த போதிலும், இன்றுவரை நிறைவேற்றவில்லை. உயர்நீதிமன்றத் தீர்ப்பை எதிர்த்து உச்சநீதிமன்றத்தில் மேல் முறையீடு செய்துள்ள நிர்வாகம், வேலையிழந்த தொழிலாளர்களுக்கு இன்று வரை சம்பளமோ, நட்ட ஈடோ தராமல் பட்டினிச் சாவுக்குத் தள்ளியுள்ளது.



படிப்பகம்

www.padippakam.com



## ஷாரியத்துக்கு எதிராக முஸ்லிம் பெண்கள்

"ஷாரியத்" எனும் முஸ்லிம் மத அடிப்படைவாதச் சட்டத்தை எதிர்த்து முஸ்லிம் பெண்களே இப்போது போர்க்கொடி உயர்த்தியுள்ளனர். அதிலும் கேரளாவில் முஸ்லிம்களின் கோட்டையான மலப்புரம் மாவட்டத்திலேயே, ஷாரியத் சட்டத்தால் பாதிக்கப்பட்ட பெண்களே ஒன்றிணைந்து "நிஷா" எனும் அமைப்பைத் தொடங்கியுள்ளனர். ஷாரியத் எனும் முஸ்லிம்களின் தனிச்சட்டத்தில் குறிப்பாக, பலதாரமணமுறை, குழந்தைத் திருமணம், விவாகரத்து, மறுவாழ்வு முதலானவற்றில் மாற்றங்கள் செய்யப்பட வேண்டும்; குடும்ப உறுப்பினர்களைக் கொண்ட கோர்ட்டில்தான் விவாகரத்தை முடிவு செய்ய வேண்டும் என்று அவர்கள் கோரியுள்ளனர்.

முஸ்லிம் மதச்சட்டப்படி மதத்தலைவர் முன்னிலையில் ஒருவன் தனது மனைவியை "தலாக்" என்று கூறி விவாகரத்து செய்துவிட்டு, மறுமணம் செய்து கொள்ள முடியும். ஷாரியத்தின் பெயரால் இத்தகைய ஆணாதிக்க பாலியல் ஒடுக்குமுறையும் சுரண்டலும் அடிமைக் காலத்தைப் போலவே இன்னமும் கேள்வி முறையின்றித் தொடர்கிறது. கணவனால் தலாக் செய்து கைவிடப்பட்ட இப்பெண்கள் நகர்ப்புறங்களில் வீட்டு வேலைகள் செய்து வறுமையில் உழல்கின்றனர். கோழிக்கோட்டில் 15 வயதிலேயே திருமணமாகி 20 வயதில் இரு குழந்தைகளுடன் கணவனால் கைவிடப்பட்ட இவர்கள் தலாக் கொடுமையின் அடையாளங்களாக வீட்டுக்கு வீடு உள்ளனர். பல தலைமுறைகளாக வேதனையில் உழலும் இப்பெண்கள், நாளைய தலைமுறையின் நலன் கருதி ஓர் அமைப்பை உருவாக்கி எதிர்ப்புக் குரலை எழுப்பத் தொடங்கியுள்ளார்கள்.



கணவனால் கைவிடப்பட்ட முஸ்லிம் பெண்கள்: "ஷாரியத்" கொடுமையின் சாட்சிகள்.

ஆனால், இதைச் சகித்துக் கொள்ள முடியாமல் மத அடிப்படைவாதிகளும், ஆணாதிக்க வெறியர்களும் கடுஞ்சொற்களால் கண்டனம் தெரிவித்துள்ளதோடு, இத்தகைய அமைப்பைக் கலைக்கவும் முயற்சித்து வருகின்றனர். "நிஷா" அமைப்பு நிறுவப்பட்ட பிறகு கோழிக்கோட்டில் தேசிய மகளிர் கமிஷனின் மாநாடு நடந்தபோது, கேரள முன்னாள் கல்வியமைச்சரான முகமது பஷீர் தலைமையில் முஸ்லிம் லீக் கட்சியினர், "ஷாரியத் சட்டத்தைத் திருத்த வேண்டும் என்று மாநாட்டில் தீர்மானம் நிறைவேற்றினால் விளைவுகள் விபரீதமாகும்" என்று ஆர்ப்பாட்டம் செய்து எச்சரித்தனர். தேசிய மகளிர் கமிஷன் மாநாடு ஷாரியத் பற்றி வாய் திறக்கவில்லை என்பது வேறுவிஷயம். ஆனால் ஆணாதிக்க வெறி முஸ்லிம்களிடம் எந்த அளவுக்கு வேரூன்றிப் போயுள்ளது என்பதை இது அம்பலப் படுத்திக் காட்டிவிட்டது.

## 'மார்க்சிஸ்டு' முதல்வரின் ஆன்மிகப் 'புரட்சி'

கடந்த ஜூன் மாதத்தில் ஐரோப்பிய நாடுகளில் இருவார சுற்றுப் பயணம் செய்த கேரள போலிக் கம்யூனிஸ்டு முதல்வர் நாயனார், கத்தோலிக்க தலைமைப் பூசாரியான போப் ஜான்பாலைத் தரிசித்துவிட்டு வந்துள்ளார். மின்துறை அமைச்சர் விஜயன், கல்வியமைச்சர் ஜோசப் ஆகியோருடன் வாடிகன் நகருக்குச் சென்ற நாயனார், போப்பைச் சந்தித்து சிறிய மரச்சிற்பத்திலான பாம்புப்படகு ஒன்றை நினைவுப் பரிசாக அளித்துள்ளார். இது தவிர, இந்துக்கள் பூசிக்கும் பகவத் கீதையின் ஆங்கில மொழிபெயர்ப்பு நூலையும் போப்பிடம் நாயனார் கொடுத்தாராம். அகமகிழ்ந்து போன போப், 'புனித ரோசரி'யை நாயனாரிடம் அன்பளிப்பாக அளித்தாராம்!

வாடிகனுக்குச் சென்று நாயனார் ஓர் ஆன்மிகப் புரட்சியைச் செய்துள்ளார் என்று பத்திரிகைகள் இந்தக் கேலிக்கூத்தை சிலாகித்து எழுதுகின்றன. போப்பைச் சந்தித்த முதல் இந்தியக் கம்யூனிஸ்டு என்று பத்திரிகைகளால் பாராட்டப்படும் நாயனார், போப்பைச் சந்தித்ததன் மூலம் கிறித்துவர்களிடமும், அவரிடம் பகவத் கீதையைப் பரிசளித்ததன் மூலம் இந்துக்களிடமும் தனது செல்வாக்கை உயர்த்திக் கொண்டுள்ளார் என்று போலிகள் பெருமைப்பட்டுக் கொள்கின்றனர்.

நீங்கள் போப்பைச் சந்திக்கக் காரணம் என்ன என்று பத்திரிகையாளர்கள் கேட்டதற்கு, "ஒரு குவாரித் தொழிலாளியாக வாழ்க்கையைத் தொடங்கிய அவர் இன்று உலகின் மிகப்பெரிய மதத்தலைவராக உயர்ந்துள்ளதால்தான் சந்தித்தேன்" என்று பதிலளித்துள்ளார் நாயனார். மதத்தலைவர்களில் கூட, தொழிலாளி வர்க்கத்திலிருந்து வந்தவர் என்றால் முற்போக்கு என்பதுதான் நாயனாரின் சித்தாந்தம். நரகலில் நல்லரிசி தேடும் புரட்டல்வாதக் கம்யூனிஸ்டுகளின் ஆன்மிகப் புரட்சி எப்படியிருக்கிறது, பாருங்கள்!

## கிரிமினல் அரசியல் ரவுடிகளுக்கு சிறைச்சாலையும் சொர்க்கம்

பீகார் மாநிலத்தின் தலைநகரான பாட்னா அருகிலுள்ள பெயூர் மத்திய சிறைச்சாலையில், விசாரணைக்கைதிகள் ரேஷன் உணவுகூட கிடைக்காமல் அல்லற்படும் அதேசமயம், கிரிமினல் அரசியல் ரவுடிகளோ சீமைச் சாராயம், வண்ணத் தொலைக்காட்சி, செல்லுலார் தொலைபேசி, விபச்சாரம் என சுகபோகத்தில் மிதக்கின்றனர். கடந்த ஜூன் 17 - ந் தேதியன்று மாநில போலீசு தலைமை இயக்குனர், சிறைத் துறை தலைமை ஆய்வாளர், பாட்னா நகர போலீசு தலைமை ஆணையர் உள்ளிட்ட குழுவினர் பெயூர் சிறைச்சாலையில் திடீர் சோதனை நடத்தியபோது, அது கிரிமினல்களின் சொர்க்கபுரியாக இருப்பது அம்பலமாகியது.

கிரிமினல் குற்றங்களுக்காக இச்சிறையில் அடைக்கப்பட்டுள்ள பாரதீய ஜனதா எம்.எல்.ஏ.வான துருவ்பகத்தின் கொட்டடியில், 2 லட்ச ரூபாய் ரொக்கமும் செல்லுலார் தொலைபேசியும் சீமைச் சாராயமும் வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகளும், திண்டு - மெத்தைகளும் இருந்தன. விசாரணையின்போது, உச்ச நீதிமன்றத்தில் வழக்கு தொடுக்க சேமித்து வைத்திருந்த தொகைதான் இது என்று கூசாமல் புளுகுகிறார் அந்த பாரதீய ஜனதா எம்.எல்.ஏ.



படிப்பகம்

www.padippakam.com



முன்னாளில் கால்நடைத் துறை ஊழியராக இருந்து, லல்லு பிரசாத் யாதவின் தயவால் எம்.எல்.ஏ.வாகி, ஊழல் மோசடிகளில் சிக்கி இப்போது சிறையில் அடைக்கப்பட்டுள்ளார், ஜனதா தள எம்.எல்.ஏ.வான ரவீந்திர குமார் ரானா. அவருடைய கொட்டடியில் செல்லுலார் தொலைபேசிகள், உயர்தர சிகரெட்டுப் பெட்டிகள், சீமைச் சாராயம், பழரச புட்டிகள், திண்டு மெத்தை, வண்ணத் தொலைக்காட்சி, நீலப்பட ஒளி நாடாக்கள், ரொக்கமாக ரூ.4,400 - ஆகியன சிக்கின.

காங்கிரசு எம்.எல்.ஏ.வும் மாநிலப் பொதுக் கணக்குக் கமிட்டியின் தலைவருமான ஜகதீஷ் சர்மாவின் கொட்டடியில் ரொக்கப் பணத்தைத் தவிர, முன் குறிப்பிட்ட அனைத்தும் இருந்தன. இவர்கள் அனைவரது படுக்கைக்கு அடியில் ''ஆக்ஷா'' கத்திகள் இருந்துள்ளன.

இதேபோல, கடந்த ஆண்டு நவம்பர் மாதத்தில் நடந்த திடீர் சோதனையின்போது மாஃபியா குண்டர்கள், கிரிமினல் அரசியல்வாதிகளின் கொட்டடிகளிலிருந்து கத்தை கத்தையாக உள்நாட்டு, வெளிநாட்டு கரன்சி நோட்டுகளும், போதை மருந்து, சீமைச் சாராயம், தொலைக்காட்சி பெட்டிகளுடன் ஆபாச ஒளிநாடாக்கள், நாட்டு வெடிகுண்டுகளும் கைப்பற்றப்பட்டன. ஆனாலும் இக் கிரிமினல்கள் மீதுஎந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. அதே வழியில் இப்போதையை திடீர் சோதனைக்குப் பிறகு நடக்கும் விசாரணைகள் இக்கிரிமினல்களைத் தப்புவிக்கவே செய்யும் என்பதில் சந்தேகமில்லை.



திடீர் சோதனையின்போது கிரிமினல்களின் கொட்டடியில் கைப்பற்றப்பட்ட பொருட்கள்.

அதேசமயம் கடந்த ஜூன் மாத இறுதியில் ஒரு விசாரணைக் கைதி உரிய மருத்துவ சிகிச்சை கிடைக்காமல் இதே சிறையில் மாண்டு போனார். இக்கொடுமையை எதிர்த்து சிறைக் கைதிகள் கலகத்தில் இறங்கியபோது, போலீசார் துப்பாக்கிச் சூடு நடத்தி பலரைப் படுகாயப்படுத்தியுள்ளனர். இந்திய சிறைச்சாலைகள் விசாரணைக் கைதிகளுக்கு நரகமாகவும், கிரிமினல்களுக்கு சொர்க்கமாகவும் உள்ளதற்கு பெயூர் சிறைச்சாலையே எடுப்பான முன்னுதாரணமாகத் திகழ்கிறது.

## அமெரிக்காவின் அத்துமீறல் ஏழைநாடுகளுக்கு அச்சுறுத்தல்

கடந்த ஜூன் மாதம் 17-ஆம் நாளன்று அமெரிக்க உளவுப் படையான சி.ஐ.ஏ. பாகிஸ்தானில் அத்துமீறி நுழைந்து, பஞ்சாப் மாநிலத்தில் டேராகாசிகான் நகரிலுள்ள ஒரு ஓட்டலை துப்பாக்கி முனையில் சூறையாடி மீர் அமால் கான்சி என்பவரைக் கைது செய்து அமெரிக்காவுக்கு இழுத்துச் சென்றுள்ளது.

சி.ஐ.ஏ. வினால் பயங்கரவாதி என்று குற்றம் சாட்டப்பட்டு இழுத்துச் செல்லப்பட்ட மீர் அமால் கான்சி, நாலரை ஆண்டுகளுக்கு முன்பு அமெரிக்காவின் சி.ஐ.ஏ. தலைமையகம் அருகிலேயே இரு சி.ஐ.ஏ. உயர் அதிகாரிகளைச் சுட்டுக் கொன்றவர். இக்கொலையைத் தொடர்ந்து அவர் அமெரிக்க ரகசியப் புலனாய்வுத் துறையினரால் (FBI) தேடப்படும் பயங்கரவாதிகளில் ஒருவராக உள்ளார். அவரது தலைக்கு 20 லட்சம் அமெரிக்க டாலர் விலை குறிக்கப்பட்டிருந்தது.

பாகிஸ்தானின் அண்டை நாடான ஆப்கானிஸ்தானில், பத்தாண்டுகளுக்கு முன்பு ரஷிய ஆதரவு போலிக் கம்யூனிச சர்வாதிகார ஆட்சிக்கெதிராக முஜாஹிதீன்கள் போராடியபோது, அவர்களுக்கு சி.ஐ.ஏ. மூலமாக ரகசியமாக ஆயுத உதவி செய்து அமெரிக்கா ஆதரித்து வந்தது. அப்போது சி.ஐ.ஏ.வின் உள்ளூர் உளவாளிகளாகவும், ஆயுத - போதை மருந்து கடத்தல் வேலைகளிலும் கான்சியின் குடும்பம் ஈடுபட்டிருந்தது. ஆப்கான் எல்லைப்பகுதியில் இருந்த கான்சி குடும்பம் இதன்மூலம் கொடிகட்டிப் பறந்த வேளையில், கான்சியின் தந்தை மர்மமான முறையில் கொல்லப்பட்டார். இதற்கு சி.ஐ.ஏ.தான் காரணம் என்று குற்றம்சாட்டும் கான்சி, பழிவாங்கும் நோக்கத்துடன் இரு சி.ஐ.ஏ. அதிகாரிகளைத் தீர்த்துக் கட்டினார்.

இதனால் ஆத்திரமடைந்த சி.ஐ.ஏ., ஒரு ஏழைநாட்டு எடுபிடி எஜமானனையே எதிர்ப்பதா என்ற வெறியோடு, பாக். உளவு அமைப்பான ஐ.எஸ்.ஐ.யுடன் சேர்ந்து கான்சியைப் பிடிக்க ரகசிய முயற்சிகளில் தீவிரமாக ஈடுபட்டு வந்தது. அவர் டேரா காசிகான் நகரிலுள்ள ஒரு ஓட்டலில் தங்கியுள்ளதை மோப்பம் பிடித்து, அதிரடி நடவடிக்கையில் இறங்கி கைதுசெய்து இழுத்துச் சென்றுள்ளது. இனி அவர் மீதான விசாரணை நாடகத்துக்குப் பின் சுட்டுக் கொல்லப்படுவார்; அல்லது அமெரிக்கச் சிறையில் சாகும்வரை அடைக்கப்படுவார்.

அது வேறு விஷயம். ஆனால் இப்படி ஒரு நாட்டிற்குள் அத்துமீறி நுழைந்து குற்றவாளியைக் கைதுசெய்ய மற்றொரு நாட்டுக்கு சர்வதேச விதிகளின்படி உரிமை கிடையாது. குற்றவாளியைத் தம்மிடம் ஒப்படைக்குமாறு சம்பந்தப்பட்ட நாட்டு அரசிடம் கோரலாம்; அல்லது குற்றவாளிகளைப் பரிமாற்றம் செய்து கொள்ள இருநாடுகளுக்குமிடையே உடன்பாடு இருக்குமானால் அதன்படி குற்றவாளியை ஒப்படைக்கக் கோரலாம். ஆனால் பாகிஸ்தானுக்கும் அமெரிக்காவுக்குமிடையே அப்படி எந்த உடன்பாடும் இல்லை. இருப்பினும், உலகின் எந்த மூலையிலிருந்தும் பயங்கரவாதிகளைக் கைது செய்ய தமது நாட்டுச் சட்டம் அனுமதித்துள்ளதாகக் கூறிக் கொண்டு அமெரிக்கா ஆட்டம் போடுகிறது. முன்பு, பனாமா நாட்டின் போதை மருந்து கடத்தல் மன்னனும், சர்வாதிகாரியுமான நோரிகாவைக் கைது செய்து இழுத்துச் சென்று அமெரிக்கச் சிறையில் அடைத்தது. இப்போது பாகிஸ்தானில் அத்துமீறி நுழைந்து ஒரு குற்றவாளியைக் கைது செய்து இழுத்துச் சென்று கொட்டமடிக்கிறது. இனி எந்தவொரு நாட்டிலும் சி.ஐ.ஏ. அத்துமீறி நுழைந்து, ஒரு ஏகாதிபத்திய எதிர்ப்புப் போராளியைக்கூட சர்வதேச பயங்கரவாதியாகக் குற்றம்சாட்டி கைது செய்யக் கிளம்பிவிடும். நாடுகளின் சுயாதிபத்திய உரிமைக்கு எதிரான அமெரிக்காவின் இத்தகைய அதிக்கிரமத்தை பாகிஸ்தான் உட்பட எந்தநாடும் எதிர்க்கத் துணியவில்லை. அமெரிக்காவின் மேலாதிக்க ரௌடித்தனத்தை முறியடிக்காமல், ஏழை நாடுகள் தமது அரைகுறை சுதந்திரத்தைத் தக்கவைத்துக் கொள்ளவும் வழியில்லை.

## ஊழல் - மோசடிகளில் 'இடதுசாரி' ஆட்சி

கடந்த 20 ஆண்டுகளாக மே. வங்கத்தில் ஊழலற்ற ஆட்சி நடத்துவதாக மார்தட்டிக் கொள்ளும் போலிக் கம்யூனிஸ்டுகளின்



படிப்பகம்

www.padippakam.com



மனற்கோட்டை இற்று விழுந்து, அவர்களின் ஊழலும் யோக்கியதையும் நாடெங்கும் நாறுகிறது. கடந்த ஜூன் மாதத்தில் மைய அரசின் பொதுக் கணக்கு - தணிக்கை அதிகாரி (CAG) மே. வங்க சட்டமன்றத்திடம் அளித்த அறிக்கை 'மார்க்சிஸ்டு' அரசின் பரிசுத்த முகமூடியைக் கிழித்தெறிந்து விட்டது. இதர கட்சிகள் - அரசுகளின் ஊழல்களை எதிர்த்து போராட்டங்களை நடத்தும் போலிக் கம்யூனிஸ்டுகள், இதுவரை அம்பலப்பட்ட ஊழல் - மோசடிகளையே விஞ்சும் வண்ணம் ரூ.2500 கோடிக்கும் மேலாக தமது ஆட்சியில் மோசடி செய்து புதிய 'சாதனை' படைத்துள்ளார்கள்.

அனைத்து மாநில அரசுகளும் ஒவ்வொரு துறையின் அவசரச் செலவுகளுக்காக தனிப் பேரேட்டுக் கணக்கு முறையைப் பின்பற்றுகின்றன. பஞ்சாயத்து, காடு வளர்ப்பு, பொதுப் பணி போன்றதொரு அரசுத் துறையினர் இத்தகைய கணக்கு வைத்துக் கொள்ள மாநில நிதியமைச்சகத்தின் ஒப்புதலுடன் தலைமைக் கணக்காளரின் (AG) உத்திரவாதமும் பெற வேண்டும். கணக்கு தொடங்கும்போது, எவ்வாறு - எந்த வகையில் தொகை செலவிடப்படுகிறது, எந்த நோக்கத்திற்கான செலவு, தொகையைக் கையாளும் அதிகாரி யார் முதலானவற்றை தலைமைக் கணக்காளர், பொதுக் கணக்கு தணிக்கை அதிகாரியிடம் தெரிவிக்க வேண்டும். இக் கணக்கில் ரூ.2,500 ஒதுக்கீடு செய்து கொள்வதற்குக்கூட மாவட்ட ஆட்சியரிடம் ஒப்புதல் பெற்றிருக்க வேண்டும்.




“நீ மட்டும் யோக்கியமா?” என்று போலி கம்யூனிஸ்டுகளின் ஊழலை எதிர்த்து சட்டமன்றத்தில் ஆர்ப்பாட்டம் செய்யும் காங்கிரசு பெருச்சாளிகள்.

ஆனால், போலிகளின் ஆட்சியில் 1991 - லிருந்து தொடங்கப்பட்ட இத்தகைய கணக்குகள், தலைமைக் கணக்காளரின் ஒப்புதல் பெறாமல், உரிய விதிமுறைகளைப் பின்பற்றாமல் சர்வசாதாரணமாக ரூ.20,000 முதல் ரூ.20 லட்சம் வரை அனுமதியின்றி மாவட்டக் கவுன்சில்களும் பஞ்சாயத்துகளும் கருவூலத்திலிருந்து எடுத்து செலவிட்டுள்ளன. செலவுகளுக்கு ஆதாரமான ரசீதுகள்; பற்று சான்று சீட்டுகளும் இக்கணக்கில் இல்லை. மேலும் ஒவ்வொரு தனிப் பேரேட்டுக் கணக்கும் ஆண்டுதோறும் மார்ச் - 31 அன்று செலவுக் கணக்கு விவரங்களுடன், செலவிடப்படாத தொகையை மீண்டும் கருவூலத்தில் சேர்க்க வேண்டும். ஆனால் வங்கத்தில் நூற்றுக்கணக்கான கணக்குகள் பல ஆண்டுகள் முடிக்கப்படவில்லை; தணிக்கை செய்யப்படவில்லை; செலவிடப்படாத தொகையும் ஒப்படைக்கப்படவில்லை.

மாநிலத்தில் 2500-க்கும் மேற்பட்ட இடங்களில் துணைக் கருவூல பணப் பேழைகள் உள்ளன. இவற்றில் 15 இடங்களில் மட்டுமே தணிக்கை அதிகாரிகள் திடீர் சோதனை நடத்தினர். இவற்றில் மட்டும் 50 லட்ச ரூபாய்க்கு முறையான கணக்குகள் இல்லை. பேரேட்டில் உள்ள கணக்கு - பாக்கியுடன், பணப் பெட்டியில் உள்ள தொகை ஒத்துப் போகவில்லை. மேலும், ஜவஹர் வேலை வாய்ப்புத் திட்டம் போன்ற மத்திய திட்டங்களின் நிதியை வங்கியில் சேமிப்புக் கணக்கில் வைக்க வேண்டும்; கிடைக்கும் வட்டியை திட்ட நிதியில் சேர்த்து செலவிட வேண்டும். ஆனால் மே. வங்கத்தில் பல மாவட்ட வளர்ச்சி மன்றங்களும், பஞ்சாயத்துகளும் தொகையை சேமிப்புக் கணக்கில் வைக்காமல், தனிக் கணக்காக தம்மிடமே வைத்துக் கொண்டன. இதன்மூலம் கடந்த ஆண்டில் மட்டும் ஏறத்தாழ 38 லட்ச ரூபாய் வட்டி இழப்பு ஏற்பட்டுள்ளது. இப்படி பல மோசடிகள் மூலம் அதிகாரிகளும் - இடதுசாரி ஆட்சியாளர்களும் கூட்டுச் சேர்ந்து கடந்த பத்தாண்டுகளில் ரூ.2500 கோடிக்கும் மேலாக ஏப்பம் விட்டுள்ளனர் என்று பொதுக் கணக்கு தணிக்கை அதிகாரியின் அறிக்கை பகிரங்கமாகவே குற்றம் சாட்டுகிறது.

ஆனால், மே. வங்க நிதியமைச்சர் அசிம்தாஸ் குப்தா, ''மோசடி எதுவும் நடக்கவில்லை; தனிப் பேரேட்டுக் கணக்கு முறை எல்லா மாநிலங்களிலும் உள்ள நடைமுறைதான்'' என்று பூசி மெழுகுகிறார். எதிர்க்கட்சியான காங்கிரசோ, சட்டமன்றத்தில் ஆர்ப்பாட்டம் செய்துள்ளதோடு மாநிலம் தழுவிய கடையடைப்புப் போராட்டம் நடத்தி சி.பி.ஐ. விசாரணையைக் கோரி வருகிறது. ஊழல் கறைபடியாதவர்கள் என்று நாட்டு மக்களிடம் ஏற்படுத்தியிருந்த மாயையும் இப்போது தகர்ந்துவிட்ட நிலையில், போலிக் கம்யூனிஸ்டுகள் தேள் கொட்டிய திருடனாக விழிபிதுங்கி நிற்கின்றனர்.

## பன்னாட்டுப் படைகளின் இனவெறி ரவுடித்தனம்

நான்காண்டுகளுக்கு முன்பு, சோமாலியாவில் அமைதியை நிலைநாட்டுவது என்ற பெயரில் அந்நாட்டை ஆக்கிரமித்த பன்னாட்டுப் படைகள் நடத்திய இனவெறி கொலை வெறியாட்ட அட்டூழியங்கள், இப்போது மெதுவாகக் கசிந்து உலகையே அதிர்ச்சிக்குள்ளாக்கி உள்ளது. ஒரு சோமாலிய சிவிலியனை நிர்வாணமாக வீதியில் கிடத்தி அவனது பிறப்புறுப்பில் ஒரு இத்தாலி சிப்பாய் மின்சாரத்தைப் பாய்ச்சுகிறான். மற்ற சிப்பாய்கள் சுற்றிநின்று இதை எக்காளமிட்டு ரசிக்கின்றனர். ஒரு சோமாலியக் குழந்தை மீது ஒரு பெல்ஜிய சிப்பாய் சிறுநீர் கழிக்கிறான். இரு பெல்ஜிய சிப்பாய்கள் ஒரு சிறுவனின் கைகளையும் கால்களையும் பிடித்துக் கொண்டு நெருப்பில் போட்டு வாட்டுகின்றனர். ஒரு சோமாலிய முஸ்லிம் சிறுவனுக்குப் பன்றிக் கறியையும் உப்பு நீரையும் கட்டாயமாக வாயில் திணித்து உண்ணவைத்து, அவன் வாந்தி எடுத்ததைத் தின்னுமாறு சித்திரவதை செய்கிறான் ஒரு பெல்ஜிய ராணுவ அதிகாரி.

கடந்த ஜூன் மாத மத்தியில் இத்தாலியைச் சேர்ந்த ''பனோரமா'' என்ற செய்திப் பத்திரிகையிலும், அதைத் தொடர்ந்து லண்டனின் ''தி அப்சர்வர்'' நாளேட்டிலும் அமைதிப் படைகளின் இனவெறி அட்டூழியங்களைப் பற்றிய புகைப்படங்கள் வெளிவந்து, நாகரீக மேற்குலகின் காட்டுமிராண்டித்தனம் அம்பலமாகி உலகெங்கும் நாறுகிறது. இப்புகைப்படங்கள் அமைதிப் படையில் பங்கேற்ற சிப்பாய்களால் எடுக்கப்பட்டவையாகும். இப்படங்களுடன் அமைதிப்படை வீரர்களிடம் பேட்டி கண்டு அப்பத்திரிகைகள் செய்தி வெளியிட்டுள்ளன. பல படங்களில் இளம் பெண்களை ராணுவ வீரர்கள் மானபங்கப் படுத்துகின்றனர். பெண்கள் - குழந்தைகள் மீது கண்டபடி துப்பாக்கிச் சூடு நடத்தி பீதியூட்டி அவர்கள் சிதறியோடுவதை ரசிக்கின்றனர். சோமாலிய சிவிலியன்களை இத்தாலிய சிப்பாய்கள் சூழ்ந்து கொண்டு காற்பந்து போல் எட்டி உதைத்து விளையாடுகின்றனர். துப்பாக்கிச் சுடும் பயிற்சியின் போது வேடிக்கை பார்த்த சிறுவர்களை சுட்டுக் கொன்றதாக ஒரு இத்தாலிய சிப்பாய் பேட்டியளித்துள்ளான். வரைமுறையின்றி கும்பல் கற்பழிப்பில் ஈடுபட்டதாக மற்றொரு சிப்பாய் ஒப்புக் கொண்டுள்ளான். எல்லாவற்றுக்கும் மேலாக, உணவைத்



படிப்பகம்

www.padippakam.com



திருடிய குற்றத்திற்காக ஒரு சிறுவனை இரும்புப் பெட்டியில் அடைத்து தண்ணீர் கூட கொடுக்காமல் சுட்டெரிக்கும் வெயிலில் போட்டு வைத்து பெல்ஜிய அமைதிப் படையினர் தண்டித்துள்ளனர். இந்த சித்திரவதையால் அச்சிறுவன் இரு நாட்களில் இறந்து போயுள்ளான்.

உலகையே அதிர்ச்சியில் உறைய வைக்கும் இத்தகைய இன வெறிக் கொடூரங்கள் அம்பலமானதைத் தொடர்ந்து இத்தாலி, பெல்ஜியம், கனடா ஆகிய நாடுகள் விசாரணைக் கமிஷன்களை நிறுவியுள்ளன. அதேசமயம், பெல்ஜிய ராணுவக் கோர்ட்டில் நடந்த விசாரணையில், ''சோமாலிய சிறுவனை சித்திரவதை செய்ததற்கான ஆதாரம் இல்லை; இது வன்முறையற்ற வேடிக்கை விளையாட்டு'' என்று சோமாலிய சிறுவனை நெருப்பில் வாட்டி எடுத்த வழக்கில் தீர்ப்பு கூறப்பட்டு, சம்பந்தப்பட்ட பெல்ஜிய அமைதிப்படை வீரர்கள் விடுதலை செய்யப்பட்டுள்ளனர். இந்த லட்சணத்தில் விசாரணைக் கமிஷன்களின் தீர்ப்பு எப்படியிருக்கும் என்று சொல்லத் தேவையில்லை. இதிலே மனித உரிமைகளை மதித்து நடக்கும் முன்னோடியான நாடு என்று கனடா பெருமைப் பட்டுக் கொள்கிறது. ஆனால் அதன் அமைதிப் படையினரோ சோமாலியாவில் இனவெறியோடு மனித உரிமை மீறல் அட்டூழியங்களில் ஈடுபட்டுள்ளனர். இந்நாடுகள் ஒரு புறமிருக்க, அமெரிக்கா மற்றும் பாகிஸ்தானின் அமைதிப் படையினர் நடத்திய அட்டூழியங்கள் நான்காண்டுகளுக்கு முன்பே அம்பலமாகியது. இத்தனைக்குப் பிறகும், மேற்கத்திய மனித உரிமை அமைப்புகள் எதுவும் இன்றுவரை இக் கொடூரங்களுக்கு எதிராக வாயே திறக்கவில்லை. ஆதிக்க வெறியும் இனவெறியும் கொண்ட இந்த ஏகாதிபத்திய நாடுகள்தான், ஏழைநாடுகள் மனித உரிமையை மதித்து நடப்பதில்லை என்று கூப்பாடு போட்டு பொருளாதார - வர்த்தகத் தடைகளை விதிக்கின்றன. ஆனால் சோமாலியாவைத் தொடர்ந்து போஸ்னியா, கம்போடியா, ஜயர், அல்பேனியா என பல நாடுகளில் பன்னாட்டு அமைதிப் படைகள் நடத்தும் அட்டூழியங்களால் அதன் நாகரீக - மனித உரிமை முகமூடி கிழிந்து கந்தலாகித் தொங்குகிறது.



அம்பேத்கர் சிலை அவமதிப்புக்கு எதிராக ஆர்ப்பாட்டம் செய்தபோது, போலீசாரால் சுட்டுக் கொல்லப்பட்ட தாழ்த்தப்பட்டோர்.

## அவமதிப்பு - அடக்குமுறை தாழ்த்தப்பட்டோர் ஆவேசம்

மும்பை நகரில் அம்பேத்கர் சிலை அவமதிக்கப்பட்டதைத் தொடர்ந்து மகாராஷ்டிர மாநிலம் முழுவதும் தாழ்த்தப்பட்ட மக்கள் போர்க்கோலம் பூண்டுள்ளனர். கடந்த ஜூலை 11 அன்று கோட்காபூர் பகுதியிலுள்ள மாதா ராம்பாய் காலனியில் உள்ள அம்பேத்கர் சிலைக்கு சிவசேனா குண்டர்கள் செருப்பு மாலை போட்டிருப்பதைக் கண்டு ஆத்திரமடைந்த தாழ்த்தப்பட்ட மக்கள் உடனடியாக சாலை மறியலில் இறங்கினர். இச்செய்தி மும்பை பெருநகர் முழுவதும் காட்டுத்தீயாகப் பரவி, தாழ்த்தப்பட்ட மக்கள் ஆங்காங்கே ஆர்ப்பாட்டங்களைத் தொடர்ந்தனர். மறியல் - ஆர்ப்பாட்டத்தைக் கலைக்க வந்த போலீசார் துப்பாக்கிச்சூடு நடத்தியதில் 11 பேர் மாண்டு போயினர். இத்துப்பாக்கிச் சூட்டுக்கு மாவட்ட நீதிபதியிடம் முன் அனுமதி பெறாமலும், முழங்காலுக்குக் கீழே சுடாமல் நெஞ்சைக் குறிவைத்து சுட்டும் போலீசு கும்பல் வெறியாட்டம் போட்டுள்ளது.

இக்கொலைவெறியாட்டத்தைக் கண்டித்து மறுநாள் எதிர்க் கட்சிகளின் ஆதரவோடு நடந்த கடையடைப்புப் போராட்டத்தின் போதும், வன்முறையில் ஈடுபட்டதாகக் கூறி போலீசார் துப்பாக்கிச் சூடு நடத்தி இரு தாழ்த்தப்பட்டோரின் உயிரைக் குடித்தனர். பாசிச சிவசேனா குண்டர்களோ எதிர்க் கட்சியினர் மற்றும் தாழ்த்தப்பட்டோரின் வீடுகளைச் சூறையாடி வெறியாட்டம் போட்டனர். பாபர் மசூதி இடிப்பைத் தொடர்ந்து நடந்த பம்பாய் கலவரத்திற்குப் பிறகு நடக்கும் மிகப்பெரிய கலவரம் இதுதான் என்று பத்திரிகைகள் குறிப்பிடுமளவுக்கு, தாழ்த்தப்பட்டோர் மீது போலீசும், சிவசேனா குண்டர்களும் கொலை வெறித் தாக்குதலை நடத்தியுள்ளனர்.

மகாராஷ்டிரத்தில் அம்பேத்கர் சிலைக்கு அவமதிப்பு என்பது இப்போது முதன்முறையாக நடப்பது அல்ல. இந்துவெறி பாரதீய ஜனதா - சிவசேனா கும்பல் ஆட்சிக்கு வந்த பிறகு கடந்த ஈராண்டுகளில் 10-க்கும் மேலாக சம்பவங்கள் இதுபோல நடந்துள்ளன. கடந்த மூன்று மாதங்களில் மட்டும் இம்மாதிரியான சிலை அவமதிப்பு நடப்பது ஐந்தாவது முறையாகும். அம்பேத்கர் சிலை மட்டுமின்றி, புத்தர் சிலையும் கூட அவமதிக்கப்பட்டுள்ளது.

இதுதவிர, இந்து வெறி ஆட்சியாளர்கள் மரத்வாடா பல்கலைக் கழகத்திற்கு அம்பேத்கர் பெயரைச் சூட்டுவதற்கு எதிர்ப்பு தெரிவித்து, இதற்காகப் போராடிய தாழ்த்தப்பட்டோர் மீது அடக்குமுறையை ஏவினர். அம்பேத்கரின் ''இந்துயிசத்தின் மோசடிகள்'' என்று நூலுக்குத் தடை விதித்தனர். இவ்வாறு தொடரும் அடக்குமுறை - அவமதிப்புகளால் குமுறிக் கொண்டிருந்த தாழ்த்தப்பட்டோரின் எதிர்ப்புணர்வை சிலை அவமதிப்புச் சம்பவம் பற்றி எரியச் செய்தது. தன்னெழுச்சியாகத் திரண்ட தாழ்த்தப்பட்ட மக்களின் போராட்டம் மகாராஷ்டிரா மட்டுமின்றி குஜராத், வட கர்நாடகம் வரை எதிரொலித்தது.

அதே சமயம், தாழ்த்தப்பட்டோரின் உரிமைக்கும் விடுதலைக்கும் ஒன்றுபட்ட தலைமையும், தெளிவான இலக்கும் இல்லாததை இப்போராட்டம் நிரூபித்துள்ளது. குடியரசுக் கட்சி பல கூறுகளாகப் பிரிந்து இந்துவெறிக் கூட்டணிக்கும், பாசிச காங்கிரசுக்கும், சமாஜ்வாடி கட்சிக்கும் வால்பிடித்துச் சென்று துரோகமிழைப்பதை இனியும் சகிக்க முடியாமல், இப்போராட்டத்தின் போது தாழ்த்தப்பட்ட இளைஞர்கள் தமது கட்சியின் அதவாலே முதலான தலைவர்களையே உதைத்து ஒற்றுமையை வலியுறுத்தியுள்ளனர். பிழைப்புவாதிகளாகச் சீரழிந்துவிட்ட இத்துரோகத் தலைவர்களை உதைப்பதோடு நின்றுவிடாமல், புதிய-புரட்சிகர தலைமையின் கீழ் தாழ்த்தப்பட்ட மக்களை அணிதிரட்ட உணர்வுள்ள இளைஞர்கள் முன் வர வேண்டும்.

www.padippakam.com

## புதிய ரேசன் திட்டம்:

# மக்களை ஏய்க்கும் மாபெரும் மோசடி

வறுமைக் கோட்டின் கீழ் வாழும் குடும்பங்களுக்கு ரேசன் கடையில் பாதி விலையில் 10 கிலோ உணவு தானியங்கள் ஒவ்வொரு மாதமும் வழங்கப்படும் என 1997 பிப்ரவரி 24-இல் அன்றைய பிரதமர் அறிவித்தார்.

ஏழைகள் மேல் எவ்வளவு அக்கறை என யாரும் ஏமாந்துவிட வேண்டாம். தற்போது தமிழக அரசு ரேசன் அட்டை ஒன்றுக்கு 20 கிலோ அரிசி தருகிறது. சன்ன ரக அரிசி கிலோ ரூ.3.50 தான். ஆனால் மத்திய அரசோ வறுமைக் கோட்டின்கீழ் வாழ்வோருக்கு மாதம் 10 கிலோ மட்டுமே தரச் சொல்கிறது. அந்த அரிசி பாதி சலுகை விலை கிலோ ரூ.4.00 ரூபாய். மோசடி இதில் மட்டுமில்லை. இந்தத் திட்டமே மோசடித் திட்டம்.

உலக வங்கி ரேசன் கடைகளை இழுத்து மூட உத்தரவிட்டுள்ளது. இதை மத்திய அரசு நடைமுறைப்படுத்த போட்ட திட்டமே ஏழைகளுக்கு பாதி சலுகை விலையில் உணவு தானியங்கள் திட்டம்.

இதை எதிர்க்கத் துணிவற்ற தமிழக அரசு, மறைமுகமாக நடைமுறைப்படுத்துகிறது. போலி ரேசன் அட்டைகள் பெருகி விட்டன. அவற்றைக் கண்டுபிடித்து ஒழித்துக் கட்ட புதிய ரேசன் அட்டை என முழங்கியது. இதன்மூலம் மூன்று அட்டைகளை வழங்கப் போவதாகக் கூறுகிறது. வறுமைக் கோட்டின் கீழ் வாழ்வோருக்கு ஒரு வண்ண அட்டை, நடுத்தர குடும்பத்தினருக்கு ஒரு வண்ணம், மேட்டுக் குடிக்கு ஒரு வண்ணம் என மூன்றாகப் பிரிக்கிறது.

ஆனால் வறுமைக்கோட்டின் கீழ் வாழ்வோர் பற்றிய கணக்கெடுப்பிலேயே மத்திய அரசின் மோசடி தொடங்குகிறது.

**வறுமைக் கோட்டின் கீழ் வாழும் மக்கள் தொகை பற்றிய மோசடி:**

புள்ளி விவரங்கள் அடிப்படையில் வறுமைக் கோட்டின் கீழ் வாழ்வோரை இல்லாதொழிக்கும் வேலையை அதிகார வர்க்கமும், காங்கிரசும் நடைமுறைப்படுத்தி வந்தன. 1993 - 94-இல் மைய அரசு புதிய பொருளாதாரக் கொள்கையால் நாடு முன்னேறி விட்டது என தண்டோரா போட்டது. மன்மோகன் சிங்கிற்கு 'மந்திரக்கோல்' கிடைத்து விட்டது. வறுமைக் கோட்டின்கீழ் வாழ்வோர் எண்ணிக்கை அதிசயிக்க வைக்கும் வகையில் 16.82 சதவீதமாக குறைந்து. அதாவது 14.98 கோடிப் பேர்தான் வறுமைக்கோட்டின் கீழ் உள்ளனர் என அறிவிக்கப்பட்டது.

ஆனால் ஐக்கிய முன்னணி அரசின் திட்டக் கமிஷனின் வல்லுனர் குழு பேராசிரியர் லக்டவாலா தலைமையில் ஆய்வு செய்தது. பேராசிரியர் லக்டவாலா குழுவின் புள்ளி விவர அடிப்படையில் வறுமைக்கோட்டின் கீழ் வாழ்வோர் எண்ணிக்கை 35.97 சதவீதம் என உயர்ந்தது. அதாவது வறுமைக்கோட்டின் கீழ் வாழ்வோர் தொகை 32.03 கோடி பேர் என இரு மடங்கிற்கும் மேலானது.

அட ஐக்கிய முன்னணி அரசு பரவாயில்லையே! வறுமைக்கோட்டின் கீழ் வாழும் ஏழைகள் மீது அக்கறைப்படுகிறதே! என அவசரப்பட்டு ஏமாற வேண்டாம். ரேசனில் சலுகை விலையில் தரப்படும் பொருட்கள் லக்டவாலா குழுவின் விவரப்படி அல்ல; மாறாக 1993 - 94 புள்ளி விவரப்படி 14.98 கோடிப் பேருக்குத்தான் ரேசன் வழங்கப்படும் என ஒரே போடாகப் போட்டுவிட்டது. ஐ.மு. அரசு.

ஒவ்வொரு மாநில அரசும் தமது மாநிலத்தில் வறுமைக்கோட்டின் கீழ் வாழ்வோர் பற்றி புள்ளி விவரம் சேகரிக்க வேண்டும். 1997 மே 31-க்குள் வேலைகளை முடித்து புதிய ரேசன் அட்டைகள் வழங்கியிருக்க வேண்டும். நமது மாநிலத்தில் வேலை முடியவில்லை. அரியானா, திரிபுரா மாநிலங்கள் தவிர இதேநிலைதான் பிற எல்லா மாநிலங்களிலும்.

மகாராட்டிர மாநிலத்தில் புள்ளி விவரக் கணக்கெடுத்தபோது கிராமப் புறங்களில் மட்டும் 77 லட்சம் குடும்பங்கள் வறுமைக்கோட்டின் கீழ் வசிக்கின்றனர் என்ற உண்மையைக் கண்டறிந்தனர். ஆனால் லக்டவாலா குழுவோ அம்மாநிலத்தில் மொத்தம் 60.5 லட்சம் குடும்பங்கள்தான் வறுமைக்கோட்டின் கீழ் வசிப்பதாகக் கூறுகிறது.

ஆந்திராவில் 112 லட்சம் குடும்பத்தினருக்கு ஏற்கனவே சலுகை விலையில் அரிசி வழங்கப்படுகிறது. மத்திய அரசோ 32.65 லட்சம் குடும்பத்தினருக்கு மட்டுமே சலுகை தர வேண்டும் என்கிறது.

இதேபோன்ற குளறுபடி நிலைதான் எல்லா மாநிலங்களிலும் உள்ளது.

**ஏழைகளுக்குச் சலுகை என்ற மோசடி**

மைய அரசு ஏற்றுக் கொண்டபடி 32 கோடிப் பேர் வறுமைக்கோட்டின் கீழ் வாழ்கின்றனர். இதில் 24.5 கோடிப் பேர் பெரியவர்கள் எனவும், 7.5 கோடிப் பேர் சிறுவர் எனவும் எடுத்துக் கொள்வோம். வறுமைக் கோட்டின் கீழ் வசிப்பவராதலால் பால், முட்டை, காய்கறிகள், கறி என பெரிய அளவு செலவழிக்க முடியாத இவர்கள் பெரும்பாலும் கோதுமை, அரிசி என உணவு தானியங்களையே சார்ந்துள்ளனர்.

பெரியவர் ஒரு நாளைக்கு 500 கிராம் தானியம் உணவாகக் கொள்கிறார் என்றால் வருடத்திற்கு அவருக்கு தேவை 182.5 கிலோ. சிறுவருக்கு இதில் 40% தேவை எனில் ஆண்டுக்கு 73 கிலோ தர வேண்டும். இக்கணக்குப்படி ஏழைகளுக்கு வேண்டியது 5 கோடி டன் உணவு தானியம்.

வறுமைக்கோட்டின் கீழ் வாழ்வோரிலும்கூட 14.98 கோடிப் பேருக்கு மட்டும் தான் ரேசன் வழங்குவேன் என மைய அரசு கூறியபடியே கூட, அவர்களுக்கு வழங்க வேண்டியது 2.34 கோடி டன் உணவு தானியம்.

ஆனால் தற்போது ரேசன் மூலம் அனைவருக்கும் வழங்கப்படும் உணவு தானிய

புதிய ரேசன் அட்டை வழங்கும் விழா: சலுகை என்ற முகமூடி தரித்து அரங்கேறும் மோசடி.




படிப்பகம்

www.padippakam.com

அளவைப் பாருங்கள்.

1993-94 இல் வழங்கியது 1.52 கோடி டன்.
1994-95 இல் வழங்கியது 1.31 கோடி டன்.
1995-96 இல் வழங்கியது 1.58 கோடி டன்.

நாடு முழுவதுமுள்ள மொத்த மக்கள் தொகைக்கு வழங்கியது சுமார் ஒன்றரை கோடி டன் உணவு தானியங்கள்தான். வறுமைக்கோட்டின் கீழ் வசிப்போருக்கு குறைந்த பட்சம் வழங்க வேண்டியது 5 கோடி டன். சுமார் 3 மடங்கிற்கும் அதிகம்.

ஆனால் மைய அரசோ ஒரு குடும்பத்திற்கு ஒரு மாதத்திற்கு 10 கிலோ உணவுதானியம்தான் வழங்குவேன் என்கிறது. இதன்படி சராசரி ஒரு நபருக்கு ஒரு நாளைக்கு 61 கிராம் உணவு தானியம்தான் சலுகை விலையில் கிடைக்கும். மீதி 440 கிராம் தானியத்தை அவர் வெளிச் சந்தையில்தான் வாங்க வேண்டும். இதில் வறுமைக்கோட்டின் கீழ் வாழும் ஏழைக்கு என்ன உதவி இருக்கிறது? இத்திட்டம் யாரை ஏய்ப்பதற்கு?

சுருக்கமாகச் சொன்னால், உலக வங்கியின் உத்தரவுப்படி ரேசன் கடைகளை இழுத்து மூட வேண்டும். நேரடியாக ரேசன் கிடையாது என்றால் ஓட்டுப் பொறுக்கிகளுக்கு செருப்படிதான் விழும். அதற்காக வறுமைக்கோட்டின்கீழ் வாழ்வோருக்குப் பாதிச் சலுகையில் ரேசனில் உணவு தானியங்கள் எனக் கவர்ச்சிகரமாக அறிவித்துள்ளார்கள்.

வறுமைக்கோட்டிற்கு மேலே வசிப்போருக்கு வழங்கும் ரேசன் உணவு தானிய விலையை படிப்படியாக உயர்த்தி, அதை வெளிச்சந்தை விலைக்குக் கொண்டு வந்துவிடுவதுதான் இத்திட்டத்தின் இலக்கு. அதாவது, இனி இவர்களுக்கு ரேசனில் பொருட்கள் வழங்கப்பட மாட்டாது என்பதுதான் உண்மை. வெய்யிலில் வரிசையாக நின்று அடித்துப் பிடித்து சந்தை விலையில் புழுத்துப் போன அரிசியை வாங்கி மாரடிப்பதற்குப் பதில் கடையிலேயே நல்ல அரிசி வாங்கி விடலாம் என்ற நிலைமைக்கு மக்கள் தள்ளப்பட இருக்கிறார்கள்.

இத்திட்டத்தை எதிர்த்து மேற்கு வங்க மாநில 'கூர்க்காலாந்து' பகுதியில் ஒருநாள் வேலை நிறுத்தம் வெற்றிகரமாக நடந்துள்ளது. மகாராட்டிர மாநிலத்தில் எதிர்ப்புக் குரல் எழுந்துள்ளது. ஆனால் போலிக் கம்யூனிஸ்ட் சி.பி.எம். ஆளும் திரிபுராவில் முதலில் முழுமையாக நடைமுறைப்படுத்தியுள்ளனர்.

இந்தத் திட்டத்தைப் பற்றித்தான் போலிக் கம்யூனிஸ்ட் கட்சிகளான சி.பி.ஐ.யின் பொதுச் செயலாளர் ஏ.பி. பரதனும், சி.பி.எம். மின் பொதுச் செயலாளர் சுர்ஜீத்தும் 'ஏழைகளுக்கு உதவும் திட்டம்' என முழு நீளத்திற்குப் பாராட்டியுள்ளனர். இதற்குத்தான் இடதுசாரி கட்சிகள் போராடி வந்தன என்றுவேறு சுர்ஜீத் மார்தட்டிக் கொள்கிறார். எந்த ஓட்டுக் கட்சியும் இத் திட்டம் பற்றி வாய் திறக்கவில்லை.

உண்மைதான். இந்த மண் குதிரைகளை நம்பினால் உலக வங்கிக்காரன்தான் இனி நேரடியாக நம்மை ஆள்வான்.

• சுப்பு

## இராணுவத்துக்கு வெண்ணெய் மக்களுக்குச் சுண்ணாம்பு

நாட்டின் வரவு செலவுத் திட்டத்தில் துண்டு விழும் பற்றாக்குறையைக் குறைப்பது என ஐ.மு. அரசின் குறைந்தபட்ச திட்டம் கூறுகிறது. புதிய ரேசன் முறையை நடைமுறைப்படுத்தினால் ரேசனுக்கான மானியம் ரூ.9000 கோடியாகி விடும் என வயிறெரிகிறார் திட்டக் கமிசன் உறுப்பினரான டாக்டர் எஸ்.ஆர். ஹாசிம்.

வறுமைக் கோட்டிற்கு வெளியே வாழும் மக்கள் வாங்கும் ரேசன் பொருள்கள் விலையை உயர்த்தியே ஆக வேண்டும் என திட்டக் கமிசன் துணைத் தலைவர் மது தண்டவதே கூறுகிறார்.

அதே நேரம் பட்ஜெட்டில் 1997 - 98க்கான இராணுவச் செலவு ரூ.29,468 கோடியிலிருந்து ரூ.35,620 கோடியாக உயர்த்தப்படுகிறது. அதாவது 21% உயர்த்தியுள்ளனர். துணை இராணுவப் படை, பிற இராணுவ செலவுகளைக் கணக்கிட்டால் மொத்த செலவு ரூ.42,135 கோடி. அதாவது மொத்த வரவு செலவு திட்டத்தில் 18 சதவீதம். கடலோர பாதுகாப்புப் படை, இராணுவக் கடனுக்கான வட்டி, சில அணு ஆய்வுத் திட்டங்கள் என்ற செலவினங்களையும் சேர்த்தால் இன்னும் அதிகமாகும்.

இப்படி சொந்த மக்கள் பட்டினியால் சாக, அதைப்போக்க திட்டமிட்டுச் செலவிடத் தயாரில்லாத அரசு, அம்மக்களைப் பாதுகாக்கிறோம் என்ற பெயரில் இராணுவத்திற்கு பல்லாயிரம் கோடி ரூபாயை வாரியிறைக்கிறது. இது வரவு செலவுத் திட்டத்தில் பற்றாக்குறையை ஏற்படுத்தாது என நம்பச் சொல்கிறார்கள்.

## "தீண்டாமை ஒழிப்புச் சட்டத்தை நீக்கு"

### — கவுண்டர்களின் சாதிவெறிக் கூச்சல்

தென் மாவட்டங்களில் மதுரை வீரன் கதை காலம் தொட்டே தாழ்த்தப்பட்ட மக்கள் தம்மீதான சாதி ஆதிக்கத்தை எதிர்த்துப் போராடியுள்ளனர். முதுகுளத்தூரிலிருந்து நமக்குத் தெரிந்த சாதி ஆதிக்க எதிர்ப்பு வரலாறு உள்ளது.

ஆனால் கொங்கு மண்டலம் எனப்படும் கோவை, ஈரோடு பகுதிகளில் அந்த எதிர்ப்பைக் கூடத் தெரிவிக்க இயலாத அளவுக்கு மிகக் கொடூரமாக தாழ்த்தப்பட்ட மக்கள் இன்றுவரை ஒடுக்கப்பட்டு வருகின்றனர். அரசியல், பொருளாதார, சமூக ரீதியாக தலை நிமிர்ந்து நிற்கக் கூட இயலாதவாறு அவ்வளவு சாதி ஆதிக்கம் கொடி கட்டிப் பறக்கிறது.

இப்பகுதிகளில் கொங்கு வேளாளக் கவுண்டர்கள், நாயுடு என சாதி ஆதிக்கவாதிகள் வைத்ததுதான் சட்டம். ஆனால் எவ்வளவு நாளைக்குதான் அடிமைத் தளையில் வைக்க முடியும்? தற்போது தீண்டாமைக் கொடுமைக்கு எதிராக ஆங்காங்கே சட்ட ரீதியாக ஒரு சில நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன.

ஆனால் இதைக் கூட பொறுத்துக் கொள்ள இயலாத கொங்கு வேளாளக் கவுண்டர்கள் பேரவை என்ற சாதி சங்கம், கடந்த 25.06.97 அன்று தீண்டாமை ஒழிப்புச் சட்டத்தை நீக்கக்கோரி கோவை மாவட்ட ஆட்சியர் அலுவலகம் முன்பு கண்டன ஆர்ப்பாட்டம் நடத்தியது. கடந்த 25.6.'97 தேதியன்று.

இதற்கு போலீசும் அனுமதி அளித்துள்ளது தான் இன்னும் கொடுமையானது.

இந்த கவுண்டர் சாதி வெறி சங்கம் சாதிச் சண்டை தவிர்க்க ஒரு தீர்மானம் நிறைவேற்றியுள்ளது.

"எழுதாத சட்டங்கள் எனப்படும் நடைமுறைச் சம்பிரதாயங்கள் எழுதப்படும் சட்டங்களால் அவமதிப்பிற்குள்ளாகும் போது பூசல்கள் தோன்றி அமைதிக்கு ஆபத்து ஏற்பட்டு விடுகிறது. "சாதிச் சண்டைகளும் இதன் அடிப்படையில்தான் தோன்றுகின்றன. இதனைப் போக்க ஒவ்வொரு பகுதியிலும் அனைத்துச் சாதியினரையும் கொண்ட அமைதிக் குழுக்கள் ஏற்படுத்த வேண்டும்" என்கிறது சாதிச் சங்கம்.

உண்மைதான், அடிமை அடிமையாகத்தான் இருக்க வேண்டும். சுதந்திரம் கேட்பதே வன்முறை. இதுதான் ஆண்டைகளின் சட்டம். அதை நடைமுறைப்படுத்த வேண்டும் எனக் கண்டன ஆர்ப்பாட்டம் செய்யக் கிளம்பியுள்ளனர் கவுண்டர் சாதி வெறியர்கள். இதை அமைதியான முறையில், சட்ட ரீதியாகத் தீர்க்க முடியாது. ஆயுதம் ஏந்தாமல் அடிமைச் சங்கிலியை, தீண்டாமையை உடைத்தெறிய முடியாது.


படிப்பகம்

www.padippakam.com

# கம்போடியா அவலம்: துரோகங்களும் அதிகாரப் போர்களும்

"கம்போடியாவின் புரட்சிகரப் போராளி இயக்கமான கேமர் ரூஜ் பிளவுபட்டு, அவ்வியக்கத்தின் தலைவரான போல்பாட் கலகப் படையினரால் சுட்டுக் கொல்லப்பட்டார்." "இல்லையில்லை, கைது செய்யப்பட்டு தளப் பகுதியிலேயே கலகப் படையினரின் காவலில் வைக்கப்பட்டுள்ளார்" - இப்படி செய்திகள் வெளியானதைத் தொடர்ந்து ஏகாதிபத்தியவாதிகளும் அவர்களின் எடுபிடிகளும் எக்காளமிட்டுக் குதூகலிக்கின்றனர். "கொலைகார கேமர் ரூஜ் இயக்கத்தை ஒழித்துக் கட்ட வேண்டும்; போல்பாட்டைக் கைது செய்து இழுத்து வந்து சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தில் விசாரித்து தண்டிக்க வேண்டும்" என்று கூப்பாடு போடுகின்றனர். இப்படி வெறியோடு தாக்குமளவுக்கு கேமர் ரூஜ் இயக்கமும் போல்பாட்டும் என்ன குற்றம் செய்தார்கள்?

'70-களில் அமெரிக்க ஆக்கிரமிப்பாளர்களுக்கு எதிராக ஆயுதமேந்திய தேச விடுதலை யுத்தத்தை தலைமையேற்று வழிநடத்தியதுதான் கேமர்ரூஜ் இயக்கமாகும். வியட்நாம், லாவோசுடன் சேர்ந்து 1975-ல் கம்போடியா விடுதலை அடைந்தபோது, கேமர்ரூஜ் இயக்கத்தின் தலைவரான போல்பாட் அந்நாட்டின் அதிபரானார். வியட்நாமும், லாவோசும் அன்றைய ரசிய சமூக ஏகாதிபத்தியத்தின் தொங்கு சதை நாடுகளாக விரைவிலேயே சீரழிந்த போது, கம்போடியா மட்டுமே ரசிய சமூக ஏகாதிபத்தியத்தை எதிர்த்து மாவோவின் சுயசார்பு பொருளாதாரக் கொள்கையைப் பின்பற்றியது. வியட்நாமை பிராந்திய வல்லரசாக்கி, தென் கிழக்காசிய நாடுகளை தமது ஆதிக்கத்தின் கீழ் கொண்டு வரும் ரசியாவின் கேடு கெட்ட நோக்கங்களுக்கு எதிராக போல்பாட் அரசு உறுதியாக நின்றது. இதனால் ஆத்திரமடைந்த ரசிய சமூக ஏகாதிபத்தியவாதிகள், வியட்நாமைக் கொம்பு சீவி விட்டனர். கம்போடியாவில் போல்பாட் ஆட்சியில் கிராமப்புறத்திற்கும் நகர்ப்புறத்திற்கும் உள்ள முரண்பாட்டைத் தீர்ப்பதில் ஏற்பட்ட பாதிப்புகளை பூதாகரமாகக் காட்டியும், செயற்கையாக எல்லைப் பிரச்சினையை உருவாக்கியும் 1979-ல் வியட்நாம் கம்போடியாவை ஆக்கிரமித்து, துரோகி ஹெங்சாமரின் தலைமையில் பொம்மையாட்சியை நிறுவியது.

கேமர்ரூஜ் இயக்கத் தலைவர் போல்பாட்.



பின்வாங்கிய கேமர் ரூஜ், தாய்லாந்து எல்லையை ஒட்டிய வடபகுதியில் தளப் பிரதேசத்தை நிறுவி, வியட்நாமிய ஆக்கிரமிப்பாளர்களின் சர்வாதிகார பொம்மையாட்சிக்கு எதிராக ஆயுதமேந்திப் போராடி வந்தது. கேமர் ரூஜ் தவிர, முன்னாள் இளவரசர் சிகானுக் தலைமையிலான தேசியவாதிகளும், சில குட்டி முதலாளித்துவ அமைப்புகளும், புத்தமதத்தில் ஒரு பிரிவினரும் இச்சர்வாதிகாரிகளுக்கு எதிராக ஆயுதமேந்திப் போராடி வந்தனர்.

'90-களின் தொடக்கத்தில் ரசியா மற்றும் கிழக்கு ஐரோப்பிய நாடுகளில் ஏற்பட்ட மாற்றங்களுக்குப் பிறகு, கம்போடியாவில் அமைதியையும் ஜனநாயகத்தையும் நிலைநாட்டுவது என்ற பெயரில் ஏகாதிபத்தியங்கள் தலையிடத் தொடங்கின. நான்காண்டுகளுக்கு முன்பு பன்னாட்டுப் படைகளின் மேற்பார்வையில் மோசடித் தேர்தல் திணிக்கப்பட்டது. கேமர் ரூஜ் இத்தேர்தலைப் புறக்கணித்து ஆயுதப் போராட்டப் பாதையில் முன்னேறியது. ஹெங்சாமரினுக்குப் பிறகு பதவிக்கு வந்த ஹூன்சேன் தலைமையிலான துரோகிகளின் கட்சியும், முன்னாள் இளவரசர் சிகானுக்கின் மகன் ரணாதீர்த் தலைமையிலான தேசியவாதிகளின் கட்சியும், இதர குட்டி முதலாளித்துவ கட்சிகளும் இத்தேர்தலில் போட்டியிட்ட போதிலும் யாரும் அறுதிப் பெரும்பான்மை பெறவில்லை. எனவே, அதிக வாக்குகளைப் பெற்ற ஹூன்சேன் கட்சியும், ரணாதீர்த் கட்சியும் அதிகாரத்தைப் பங்கிட்டுக் கொள்வதென ஏற்பாடாகியது. இதன்படி, ரணாதீர்த் பிரதமராகவும், ஹூன்சேன் இணைப் பிரதமராகவும் பதவியில் நீடித்த போதிலும் இருதரப்புக்குமிடையே அதிகாரத்துக்கான நாய்ச் சண்டை ஓயாமல் நீடித்து வந்தது.

வருமாண்டில் கம்போடியாவில் மீண்டும் பொதுத் தேர்தல் நடைபெற உள்ளதால், இரு தரப்புமே தமது பலத்தைப் பெருக்கிக் கொண்டு அதிகாரத்தை முழுமையாகக் கைப்பற்றும் நோக்கத்துடன் கேமர் ரூஜ் இயக்கத்திலுள்ள சில குழுக்களை 'தேசிய நீரோட்டத்தில்' இழுக்க ரகசிய பேரங்கள் - பேச்சு வார்த்தைகளை நடத்தி வந்தன. அதன்படி, சில மாதங்களுக்கு முன்பு கேமர் ரூஜில் அங்கம் வகித்த இயங்சாரி தலைமையிலான ஒரு சிறு குழு துரோகமிழைத்து ஆளும் ஹூன்சேன் கும்பலுடன் சேர்ந்து கொண்டது. அதைத் தொடர்ந்து இப்போது மேலும் சில குழுக்கள் துரோகமிழைத்து ஆளும் கும்பலுடன் சேர்ந்து 'தேசிய நீரோட்டத்தில்' கலக்க முயலுகின்றன. இத்துரோகக் குழுக்களே இப்போது போல்பாட்டைக் கைது செய்து காவலில் வைத்துள்ளன.

முன்பு கேமர்ரூஜ் அரசின் பாதுகாப்பு அமைச்சராக இருந்த சோன்சென் தலைமையிலான குழுவினர், இப்போது துராகமிழைத்து துணைப் பிரதமர் ஹூன்சேனின் கைக்கூலிகளாகச் செயல்பட்டனர். இதனால் போல்பாட் தலைமையிலான படையினர் ஜூன் மாத தொடக்கத்தில் சோன் சென்னையும் அவரது குடும்பத்தினரையும் சுட்டுக் கொன்றனர். இதைத் தொடர்ந்து இவ்விரு குழுக்களுக்கிடையே முரண்பாடும் ஆயுத மோதல்களும் நடந்தன. இதே நேரத்தில், முன்பு கேமர்ரூஜின் படைத் தளபதியாக இருந்த கியூசம்பன் தலைமையிலான குழுவினர், பிரதமர் ரணாதீர்த் கும்பலுடன் ரகசிய பேச்சு வார்த்தைகள் நடத்தி 'தேசிய நீரோட்டத்தில்' இணைய தீர்மானித்தனர். இப்படி துரோகத்தனத்தில் பெரும்பாலான குழுக்கள் வெளிப்படையாக இறங்கியதும், போல்பாட் கைது செய்யப்பட்டு, அவரது படையினர் நிராயுதபாணிகளாக்கப்பட்டு துரோகக் குழுக்களின் காவலில் வைக்கப்பட்டுள்ளனர்.

கேமர் ரூஜ் இயக்கம் என்பது ஆக்கிரமிப்பாளர்களுக்கு எதிரான மார்க்சிய - லெனினிய புரட்சியாளர்கள், குட்டி முதலாளித்துவ புரட்சியாளர்கள், தேசியவாதிகளைக் கொண்ட ஓர் ஐக்கிய முன்னணியாகும். எனவே, இம் முன்னணியிலுள்ள குழுக்களுக்கிடையே தேச விடுதலை லட்சியத்தில் ஒற்றுமையும், திசை விலகல்களுக்கு எதிராக குழுக்களிடையே போராட்டமும் நீடிக்கவே செய்யும். இன்று சில குட்டி முதலாளித்துவ குழுக்கள் துரோகமிழைத்துச் செல்வதை வைத்து கேமர்ரூஜ் இயக்கத்துக்குத் தலைமை தாங்கிய மார்க்சிய - லெனினியப் புரட்சியாளர்க

நேற்றுவரை பங்காளிகள்; இன்று பகையாளிகள்: பிரதமர் ரணாதீர்த்துடன் இணை பிரதமர் ஹூன்சென் (வலப்புறம்).





படிப்பகம்

www.padippakam.com



துப்பாக்கியால் துளைக்கப்படும் போலி ஜன நாயகம்: உயிருக்கு அஞ்சி தலைநகரை விட்டுத் தப்பியோடும் குடும்பம்.

ளின் லட்சியமே தோல்வி அடைந்து விட்டதாகக் கருத முடியாது. தேசியவாதிகளும் குட்டி முதலாளித்துவ புரட்சியாளர்களும் தமது ஊசலாட்டத் தன்மை காரணமாக துரோகமிழைத்துச் செல்வதை தேச விடுதலைப் போராட்ட வரலாறு முழுவதிலும் காண முடியும். அதேசமயம் கம்யூனிசப் புரட்சியாளர்கள் தமது முன்முயற்சியின் மூலம் ஊசலாட்ட சக்திகளைக் கூட தம்பக்கம் வென்றெடுத்து எதிரியைத் தனிமைப்படுத்திய நேர்மறை அனுபவங்களும் அவ்வரலாற்றில் உண்டு.

அந்த வகையில், கேமர் ரூஜ் இயக்கத்திற்குத் தலைமை தாங்கும் கம்யூனிசப் புரட்சியாளர்களான போல்பாட் குழுவினர், முன்முயற்சியுடன் செயல்பட்டு ஊசலாட்ட சக்திகளை எதிரிக்கு எதிராக வென்றெடுக்கத் தவறியுள்ளனர். வலது சந்தர்ப்பவாத துரோகத்தனத்திற்கு எதிராக ஆரோக்கியமான சித்தாந்தப் போராட்டம் நடத்தி, கேமர் ரூஜ் இயக்கத்தை அரசியல் - சித்தாந்த ரீதியாக வளர்த்து உறுதிப்படுத்த உரிய முக்கியத்துவம் தராமல் இருந்துள்ளனர். தளப் பிரதேசத்திற்கு அப்பால், கம்போடியாவின் இதர பகுதிகளில் அரசியல் பிரச்சாரம், அரசியல் போராட்டங்களைக் கட்டியமைத்து மக்களை அணிதிரட்டத் தவறியுள்ளனர். இக்காரணங்களாலேயே கேமர்ரூஜ் இயக்கத்தின் பெரும்பான்மை இன்று துரோகிகளாகச் சீரழிந்து, பிளவும் பின்னடைவும் ஏற்பட்டுள்ளது.


மறுபுறம், கேமர்ரூஜ் இயக்கம் அழிந்து விட்டதாக எக்காளமிடும் ஆளுங் கும்பல்களுக்கு இடையே பிளவும் மோதலும் தீவிரமாகி, இணைப் பிரதமர் ஹுன்சேனின் படைகள் ஓர் அதிரடி ஆட்சிக் கவிழ்ப்பை அண்மையில் நடத்தியுள்ளன. பிரதமர் ரணாதீர்த் வெளிநாடு சென்ற நேரத்தில், ஹுன்சேனின் படைகள் ரணாதீர்த் ஆதரவுப் படைகள் மீது தாக்குதல் நடத்தி அதனைத் தனது கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வந்துள்ளது. கேமர் ரூஜ் குழுக்களின் ஆதரவுடன் பிரதமர் ரணாதீர்த் ஆட்சிக் கவிழ்ப்பு முயற்சியில் இறங்கினார் என்று குற்றம்சாட்டி, ஹுன்சேன் கும்பல் அதிகாரத்தைக் கைப்பற்றிக் கொண்டு ஆட்டம் போடுகிறது. தலைநகர் நாம்பென்னிலுள்ள சர்வதேச விமான நிலையம் மூடப்பட்டு நாட்டின் தொலைபேசி இணைப்புகள் துண்டிக்கப்பட்ட நிலையில் ஹுன்சேன் படைகள் நாட்டைச் சூறையாடுகின்றன. நாடெங்கும் அவசரநிலை பிறப்பிக்கப்பட்டு, ஏகாதிபத்தியங்களால் திணிக்கப்பட்ட கம்போடியாவின் போலி ஜனநாயகம் இன்று துப்பாக்கித் தோட்டாக்களால் சல்லடையாகத் துளைக்கப்படுகிறது. அதிகாரத்தை இழந்துவிட்ட பிரதமர் ரணாதீர்த் ஏகாதிபத்தியங்களிடம் ஒப்பாரி வைத்து முறையிட்டுள்ளார். ஹுன்சேனின் இந்த ஆட்சிக் கவிழ்ப்பு நடவடிக்கையைக் கண்டித்துள்ள ஏகாதிபத்தியங்கள், கம்போடியாவில் அமைதியையும் ஜனநாயகத்தையும் நிலைநாட்டுவது என்ற பெயரில் மீண்டும் தலையிடத் தொடங்கி விட்டன. ஏகாதிபத்தியங்களால் அவர்களின் நலன்களுக்காகத் திணிக்கப்படும் எந்தவொரு போலி ஜனநாயகமும் - சமரச ஏற்பாடும் பேரழிவையே கொண்டுவரும் என்பதை மீண்டும் நிரூபித்துவிட்டு, கம்போடியா குருதிச் சேற்றில் மூழ்கிக் கொண்டிருக்கிறது.

• மனோகரன்.

## கேமர்ரூஜ் கொலைகாரப் படையா? போல்பாட் சர்வாதிகாரியா?

"மக்கள் எனும் கடலில் நீந்தும் மீன்களைப் போன்றவர்கள் கம்யூனிஸ்டுகள்" என்றார் தோழர் மாவோ. '70-களில் கம்போடியாவை அடிமைப்படுத்தியிருந்த அமெரிக்க ஏகாதிபத்தியம், கம்யூனிஸ்டுகளாகிய மீன்களைப் பிடிக்க மக்கள் எனும் கடலையே வற்றிப் போகச் செய்யும் கொடிய உத்தியைக் கையாண்டது. இதன்படி, கிராமப்புறங்களும் விவசாய உற்பத்தியும் முற்றாகப் புறக்கணிக்கப்பட்டு நாசமாக்கப்பட்டன. பிழைக்க வழியின்றி மக்கள் நகரங்களை நோக்கி ஓடினர். நகர்ப்புறங்களோ ஏகாதியத்திய சீரழிவுக் கலாச்சாரத்தின் கோட்டையாக விளங்கியது. சோம்பேறிகள், பொறுக்கிகள், சுகவாசிகளின் உல்லாச கேளிக்கை விடுதியாகத் திகழ்ந்தது.

1975-ல் கேமர் ரூஜ் படைகள் நாட்டை விடுதலை செய்த போது, மொத்த மக்கட் தொகையில் பாதிக்கும் மேற்பட்டோர் நகர்ப்புறங்களில் குடியிருந்தனர். சுய சார்புடன் நின்று வறுமையைப் போக்கி உற்பத்தியைப் பெருக்க வேண்டுமானால், இம்மக்களைக் கிராமப் புறங்களுக்கு அனுப்புவதைத் தவிர வேறு வழியில்லை. ஆனால் ஏகாதிபத்திய சீரழிவுக் கலாச்சாரத்தில் மூழ்கிக் கிடந்த சோம்பேறிகளும், பொறுக்கிகளும் எதிர்ப் புரட்சியாளர்களும் நாட்டுப் புறங்களுக்குச் சென்று உழைக்க மறுத்தனர். எனவே போல்பாட் தலைமையிலான புரட்சி அரசு, நகரங்களில் தேவைக்கு அதிகமாக மிதமிஞ்சி குடியேறிவிட்ட மக்களைக் கிராமப் புறங்களுக்கு அனுப்புவதைக் கட்டாயமாக்கியது.



சோம்பேறிகளும் பொறுக்கி வர்க்கமும் இதை எதிர்த்து கலகம் செய்த போது, அவர்கள் சிறையிடப்பட்டனர். தாம் கைது செய்யப்படலாம் என்று அஞ்சிய பொறுக்கி வர்க்கம் காட்டுப் பகுதிகளுக்குத் தப்பியோடி தலைமறைவாகியது. இதே நேரத்தில், முந்தைய ஏகாதிபத்திய அரசின் நாணய முறை செல்லாது என அறிவித்த போல்பாட் அரசு, புதிய நாணய முறையைக் கொண்டு வந்தது. பெருஞ்செல்வத்துடன் தலைமறைவாகிய பொறுக்கி வர்க்கமும், கைக்கூலிகளும் இதனால் செயல்படமுடியாமல் தவித்தனர். பீதியில் பலர் தற்கொலை செய்து கொண்டனர்; பலர் பட்டினியால் மாண்டனர். உணவுக்காகவும் செல்வங்களுக்காகவும் இப்பொறுக்கி கும்பல்கள் ஒன்றையொன்று தாக்கிக் கொண்டதில் பலர் கொல்லப்பட்டனர்.

இப்படி ஆயிரக் கணக்கில் செத்து மடிந்த பொறுக்கிகள், சோம்பேறிகள், கைக்கூலிகளின் எலும்புகளையும் மண்டையோடுகளையும் சேகரித்து அடுக்கி வைத்து காட்சிப் பொருளாக்கி "ஐயோ, சர்வாதிகாரி போல்பாட் நடத்தும் கொலைகளைப் பாருங்கள்!" என்று அமெரிக்கா ஒப்பாரி வைத்து அவதூறு பிரச்சாரத்தில் இறங்கியது. இருப்பினும் ரசிய சமூக ஏகாதிபத்தியவாதிகளும், ரசிய ஆதரவு போலிக் கம்யூனிஸ்டுகளும் அமெரிக்காவின் பொய்ப் பிரச்சாரத்தை அப்போது ஏற்க மறுத்தனர். ஆனால், 1979-ல் ரசிய ஆதரவு நாடான வியட்நாம், கம்போடியாவை ஆக்கிரமித்து போல்பாட் ஆட்சியைக் கவிழ்த்து பொம்மையாட்சியை நிறுவிய பிறகு, 'அவர்களும் அமெரிக்காவோடு சேர்ந்து கொண்டு போல்பாட்டைக் கொலைகாரனாகச் சித்தரித்து அவதூறுப் பிரச்சாரத்தில் இறங்கினர்.

தோழர் ஸ்டாலின், மாவோ என உலகிலுள்ள அனைத்து கம்யூனிசப் புரட்சியாளர்கள் மீதும், ஏகாதிபத்திய எதிர்ப்புப் போராளிகள் மீதும் இப்படி அவதூறு செய்வதை அமெரிக்கா தலைமையிலான ஏகாதிபத்தியங்கள் தமது முக்கிய கொள்கையாகக் கொண்டுள்ளன. ஆனால் பொய்கள் - சதிகள் - அவதூறுகளால் புதைக்கப்படும் உண்மைகள், ஒருநாள் பூதமாகக் கிளம்பவே செய்யும்.



படிப்பகம்

www.padippakam.com

## ஸ்டெர்லைட் விஷவாயு கசிவு:

# எதிர்ப்பை மீறி ஆலையை அனுமதித்த ஜெயா – மு.க. குற்றவாளிகளே!

தூத்துக்குடியில் 1300 கோடி ரூபாயில் நிறுவப்பட்ட மிகப் பெரிய தாமிர உற்பத்தி ஆலை ஸ்டெர்லைட். இந்த தொழிற்சாலையை மகாராட்டிர மாநிலத்தில் நிறுவ முதல்வர் சரத் பவார் அனுமதியளித்தார். ஆனால் இந்த ஆலையால் மக்கள்தான் செத்து மடிவர் எனப் புரிந்து கொண்ட மக்கள் இத்னை விரட்டியடித்தனர்.

தனக்கு ஆலை நிறுவ அனுமதியும் பாதுகாப்பும் யார் தருவார்கள் என பணப்பெட்டியுடன் அலைந்த மார்வாரி முதலாளிகளுக்கு 'நிரந்தர முதல்வர்' 'அம்மா'வின் அருட்பார்வை கிட்டியது. 1994-ல். பெட்டி கைமாறியது. ஆலை அமைந்தது.

அதன் கட்டுமான வேலைகளுக்கு ஆட்களை அனுப்பும் ஒப்பந்த வேலை செய்தது இன்றைய தூத்துக்குடி தி.மு.க. எம்.எல்.ஏ. பெரியசாமி. தி.மு.க. நிச்சயம் ஆட்சியமைக்கும் என்ற நிலையில் ஸ்டெர்லைட் ஆலையின் வாகனங்களும், பணமும் பெரியசாமியின் தேர்தல் பிரச்சாரத்திற்கு உதவின.

'ஜெ'யின் ஆட்சியிலும் ஆலைக்கு பாதுகாப்பு; இன்று தி.மு.க. ஆட்சியிலும் பாதுகாப்பு. அன்றிலிருந்து இன்று வரை மீனவர்களும், ஜனநாயக சக்திகளும் ஆலையை இழுத்து மூடக் கோரி போராடி வருகின்றனர். ஆட்சியாளர்கள் காந்தி குரங்குகளாக இருந்தனர்.

5.7.97-இல் ஆலையிலிருந்து வெளிப்பட்ட விஷ வாயு தாக்கப்பட்டு அருகிலிருந்த 'ரமேஷ் ஃப்ளவர்ஸ்' என்ற 'உலர் பூ' தயாரிக்கும் ஆலையில் வேலை செய்த சுமார் 90 பெண்கள் மயங்கி விழுந்தனர். கண் எரிச்சல்,' தொண்டை எரிச்சல், தொடர்ச்சியான இருமல், இரத்த வாந்தி என பாதிப்பு கடுமையாக இருந்தது. மயங்கி விழுந்தவர்கள் தவிர பிற ஊழியர்கள் குளிரூட்டப்பட்ட அறையில் புகுந்ததால் பாதிப்பிலிருந்து தப்பினர்.

'உலர் பூ' தயாரிப்பு ஆலையிலிருந்து ஸ்டெர்லைட்டுடன் தொலைபேசியில் தொடர்பு கொண்ட போது பலனில்லை. எனவே முதலாளி நேரில் ஸ்டெர்லைட் சென்று புகார் செய்த பின்பே விஷ வாயு வருவது நிறுத்தப்பட்டது.

ஏற்கனவே ஜனவரியில் ஸ்டெர்லைட்டில் 7 சிலிண்டர்கள் வெடித்து, உற்பத்தி நிறுத்தப்பட்டது. அதன் பின் உற்பத்தி தொடர்ந்தாலும், அவ்வப்போது சிறிய அளவில் 'ரமேஷ் ஃப்ளவர்ஸ்' தொழிலாளிகளுக்கு பாதிப்பு இருந்துள்ளது.

ஸ்டெர்லைட் ஆலையிலும் இரவில் தான் இப்படிப்பட்ட விஷ வாயுவை வெளியேற்றுவார்களாம். ஆனால் 5-ம் தேதி மதியம் 1.30 மணியளவிலேயே விஷ வாயு வெளியேறியதால் விபரீதம் பளிச்செனத் தெரிந்து விட்டது.

இவ்வாலைக் கழிவால் சுற்றுச் சூழல் மாசுபட்டு, அமில மழை பொழியும். கழிவு கடலில் கலந்தால் மீன்கள் பூண்டோடற்றுப் போகும். நிலத்தில் கழிவு நீரை விட்டால் நிலத்தடி நீரே விசமாகி விவசாயம் அழியும். குடிநீர் இல்லாதொழியும்.

இவ்வளவு பாதிப்புக்கும் எதிராகத்தான் போராடி வருகின்றனர் ஸ்டெர்லைட் எதிர்ப்பியக்கத்தினரும், மாணவர்களும். பா.ம.க.வும் ம.தி.மு.க.வும் போராடி வருகின்றன, அரசியல் ஆதாயம் கருதி. ம.தி.மு.க.வும் தேர்தலுக்கு ஸ்டெர்லைட்டிடமிருந்து பணம் பெற்றுள்ளது.

அன்று, அடிக்கல் நாட்டு விழாவிற்கு ஆரவாரித்த அன்றைய எம்.எல்.ஏ. ஹென்றி, இன்று ஆலை மூடலுக்கு மறியல் செய்கிறார். பணப்பெட்டி வாங்கிய ஜெயாவோ ஸ்டெர்லைட் ஆலையை எடுத்தவுடனே மூடிவிடுவது நல்லதில்லை என விசுவாசமாக அறிக்கை விட்டுள்ளார். ஒப்பந்த வேலையில் லாபம் கண்ட பெரியசாமி இன்று, ஆபத்து என்றால் தலைவர் ஆலையை மூடுவார் என்று சவடால் அடிக்கிறார்.

'புரட்சி'த் தலைவியும் 'புரட்சிப் புயலு'ம் (வை.கோ) கூட்டு. இந்த ஓட்டுப் பொறுக்கிகளை நம்பினால் தூத்துக்குடி மக்களின் கதி அதோ கதிதான்.

இந்த ஓட்டுப் பொறுக்கிகள் கொடுக்கும் தைரியத்தில் தான் 'ஆலையிலிருந்து விஷ வாயு வெளியேறவில்லை 'ரமேஷ் ஃப்ளவர்ஸ்' ஆலையில் பயன்படுத்திய ரசாயனத்தால்தான் விபத்து நடந்துள்ளது. எமது ஆலை மீது அவதூறு பரப்பிய அந்த ஆலை மீது மான நஷ்ட வழக்குத் தொடுப்பேன்' என ஸ்டெர்லைட் ஆலை எதிர் தாக்குதல் தொடுக்கிறது.

ஸ்டெர்லைட் விஷ வாயு கசிவால் பாதிக்கப்பட்ட "ரமேஷ் ஃப்ளவர்ஸ்" பெண் தொழிலாளர்கள்.



'நாடு மீண்டும் காலனியாவதைத் தடுப்போம்' என்ற அரசியல் முழக்கத்தின் அடிப்படையில் மக்கள் கலை இலக்கியக் கழகமும் தொழிலாளர் பிரச்சாரக் குழுவும் கோவை மாவட்டத்தில் தொடர் பிரச்சார இயக்கங்களை நடத்தி வருகின்றன.

இதன் ஒரு பகுதியாக 24.4.'97-இல் கணபதியில் தொழிலாளர் பிரச்சாரக் குழுவின் (தொ.பி.கு) பொதுக் கூட்டம் சிறப்பாக நடந்தது. ஆயிரத்துக்கும் மேற்பட்ட மக்கள் கூடியிருந்து இறுதிவரை ஆதரவளித்தனர்.

ஜூலை 5-ஆம் தேதி சூலூரில் ம.க.இ.க. வின் சார்பாக பொதுக்கூட்டம் நடந்தது. ம.க.இ.க. உறுப்பினர் தோழர் சம்புகன் தலைமை உரையாற்றினார். ஆபாசத் திரைப்படங்களும் பத்திரிக்கைகளும் இளைய தலைமுறையைச் சீரழிப்பதையும் அதற்கு துணை போகும் அரசையும் தோழர் சூர்யா அம்பலப்படுத்தினார்.

கோடிக்கணக்கான இந்திய மக்களின் வாழ்வை புதிய பொருளாதாரக் கொள்கை எனும் குண்டை வீசிச் சீரழித்ததை ம.க.இ.க மாநில இணைச் செயலர் தோழர் காளியப்பன் சாடினார். புரட்சிகர கலை நிகழ்ச்சி மக்களுக்கு எழுச்சி ஊட்டியது.

கூட்டத்தில் பகுதிப் பிரச்சினை பற்றி தோழர் மணி வண்ணன் பேசினார். பெரியநாயக்கன் பாளையம் அருகில் உள்ள மத்தம்பாளையம் கிராமத்தில் ஆதிக்க சாதியினரால் துளசியம்மாள் என்ற பெண் பாலியல் வன்முறைக்கு ஆளாகி கொலை செய்யப்பட்டதைக் கண்டித்தார். அதோடு ஏழை மக்களுக்கு இலவசமாக எழுதி வைத்த தனது தந்தையின் உயிலைப் புறக்கணித்து அந்த நிலத்தை ஆக்கிரமிப்பு செய்ய முயலும் 'பிரிகால்' முதலாளியின் அயோக்கியத்தனத்தை அம்பலப்படுத்தினார். இது தொடர்பாக 7.7.'97-இல் பெரியநாயக்கன்பாளையம் ஊராட்சி ஒன்றிய அலுவலகம் முன் நடைபெற இருந்த ஆர்ப்பாட்டம் தொடர்பாக பகுதி தோழர் சந்திரனின் முன்னெச்சரிக்கை கைதைக் கண்டித்து, தடையை மீறி ஆர்ப்பாட்டம் நடந்தே தீரும் எனப் பிரகடனப்படுத்தினார்.

தகவல்: ம.க.இ.க., கோவை

www.padippakam.com

# சிவந்த கண்கள் கவனிக்கட்டும்

★ பட்டாபிராம் காவல் நிலையத்திலுள்ள சீனிவாசன், ராசு என்ற இரண்டு காவலர்கள் தற்காலிக பணி நீக்கம் செய்யப்பட்டனர். காரணம் கள்ளச் சாராயத்தை ஒழிக்க வேண்டிய இவர்களே கள்ளச் சாராயம் விற்று கையும் களவுமாக பிடிபட்டு விட்டனர். வேலியே பயிரை மேயும் இப்படிப்பட்ட சம்பவங்கள் நாளாந்த நிகழ்வுகளாகப் பெருகி வருகின்றன.

★ பிரேசில் நாட்டில் இரண்டு லட்சத்திற்கும் அதிகமான சிறுவர்கள் அனாதைகளாக தெருக்களில் திரிகின்றனர். இவர்கள் வளர்ந்து பெரியவர்களானால் கிரிமினல் குற்றங்கள் அதிகரிக்கும் என அங்குள்ள தொழிலதிபர்கள் முடிவு செய்து, தினமும் இச்சிறுவர்களைக் கொலை செய்கின்றனர். ஐக்கிய நாடுகள் சபையின் மனித மேம்பாட்டு அறிக்கையின்படி முதலாளிகளால் இப்படி தினசரி நான்கு சிறுவர்கள் கொல்லப்படுகின்றனர். முதலாளிகளின் 'சமூக நலனை'யும் 'அக்கறை'யையும் என்னவென்பது?

★ "சிறுநீரக விற்பனையை ஒழிக்கப் போகிறோம்; அது பற்றி கடுமையான சட்டங்கள் போட்டு விட்டோம்'' என ஆட்சியாளர்கள் பீற்றிக் கொண்டார்கள். அதே பெங்களூரில் நெருங்கிய உறவினர் என்ற பெயரில் சிறுநீரக விற்பனை அமோகமாக நடக்கி ...து. இதில் இடைத்தரகர்களும் மருத்துவர்களும் பகாசுரக் கொள் ...ளையடிப்பதை 'டைம்ஸ் ஆஃப் இந்தியா' பத்திரிக்கை நிருபர் ...தாரத்துடனும் தரகனின் முகவரியுடனும் அம்பலப்படுத்தியுள் ...ளார். இதுவரை நடவடிக்கை ஏதுமில்லை.

அப்பட்டமான முதலாளித்துவ நாடாக ரசியா சீரழிந்த ... அங்கு குழந்தைகள் மிகக் கொடூரமாக பாதிக்கப்படுகின்றனர். ...ாட்னயா' என்ற ரசிய பத்தி ...க 'தமது உணவிற்கும் கடனை ...ப்பதற்கும் பெற்றோர்களே ... குழந்தைகளை விபச்சாரச் சந் ...ல் விற்கும் கொடூரத்தை' அம்ப ...படுத்தியுள்ளது. குழந்தை விபச் ...ம் மிக லாபகரமான தொழிலாக ...றியுள்ளது. அங்கு சிறுமி என்றால் ...லிருந்து இருநூறு டாலரும், சிறுவன் என்றால் 150-லிருந்து 300 டாலரும் வசூலிக்கிறான். பின்லாந்து நாட்டில் ரசிய பாலியல் சுற்றுலா வழிகாட்டி நூல் கிடைக்கிறது. முதலாளிகளின் 'உல்லாசபுரி'க்கு இதுதான் முன்னேற்றம் போலும்.




★ தாழ்த்தப்பட்டவர்களுக்கான ஆட்சி என மாயாவதி அரசு வாய்கிழியப் பேசுகிறது. மக்கள் தொகைக்கு ஏற்ப கிராம பஞ்சாயத்தில் தாழ்த்தப்பட்ட மக்கள் பிரதிநிதிகள் இருப்பார்கள் என உ.பி.யின் 73-வது சட்ட திருத்தம் சொல்கிறது. உத்தர்காண்ட் பகுதியில் மொத்த தாழ்த்தப்பட்ட மக்கள் தொகை 21 சதவீதம். ஆனால் பஞ்சாயத்து உறுப்பினர்கள் 5 சதவீதம்பேர் தான் உள்ளனர். உத்தர்காசி பஞ்சாயத்தில் தாழ்த்தப்பட்டவர்கள் 22 சதவீதம் உள்ளனர். பஞ்சாயத்து தேர்தலில் வென்றவர்களோ 6.4 சதவீதம் பேர் மட்டுமே. இதே போன்ற நிலைமைகள் தான் சாமௌலி, பாவ்ரி, பிதோராகர், அல்மோரா என எல்லா பஞ்சாயத்திலுமுள்ளது. இது பற்றி உத்தர்காண்ட் தாழ்த்தப்பட்டவர்கள் அமைப்பு ஜனாதிபதிக்கு ஒரு புகார் அனுப்பியுள்ளது. இம்மலைப்பகுதியில் பிராமணர்களும் தாக்கூர்களுமே ஆதிக்கம் செலுத்துவதாக கூறியுள்ளனர். உத்தர்காண்ட் மாநிலம் அமைய பா.ஜ.க. ஏன் போராடி வருகிறது என இதிலிருந்து புரிந்து கொள்ளலாம்.

★ சமீபத்தில் ஓய்வு பெற்ற உச்ச நீதிமன்ற நீதிபதி குல்தீப் சிங் சுற்றுச் சூழல் பற்றி நேர்மையான சில தீர்ப்புகள் வழங்கியவர். இவர் சமீபத்தில் கல்கத்தா சென்ற போது அங்குள்ள சில அரசு மருத்துவமனைகளை பார்வையிடச் சென்றார். அவற்றைக் கண்டு அதிர்ச்சியடைந்த அவர் "அவை சுகாதார நிலையங்களாக இல்லை. மாறாக பிண அறைகளை நினைவூட்டின. அருவெறுத்து ஒதுக்கத்தக்க அவை மருத்துவமனைகள் என்றிருப்பதை விவரிக்க வேறு பொருத்தமான வார்த்தைகள் இல்லை'' என்றார். இருபது ஆண்டுகளாக மே.வங்கத்தை ஆண்டு வரும் போலிகளின் 'சாதனை'ப் பட்டியலில் இதுவும் ஒன்று.

★ சங்கர் குகா நியோகி என்ற தொழிற்சங்கத் தலைவரை முதலாளிகளே முன்னின்று கொலை செய்தனர் என்பதை பு.ஜ.வில் ஏற்கனவே எழுதியிருந்தோம். இக்கொலை வழக்கில் 5 ஆண்டுகளுக்குப் பின் ஜூன் 97-ல் தீர்ப்பு வந்தது. கொலை செய்த கூலிப்படை அடியாள் ஒருவனுக்கு மரண தண்டனையும், இரு முதலாளிகள் உட்பட 5 பேருக்கு ஆயுள் தண்டனையும், மற்ற மூவருக்கு விடுதலையும் வழங்கப்பட்டுள்ளது. நேரடியாக தொழிலாளிகளே பெயர்களைக் குறிப்பிட்டு இவர்கள்தான் கொலைகாரர்கள் என ஆதாரங்கள் தந்து கடுமையாக தண்டிக்கக் கோரி போராடியதால் வேறு வழியின்றி இத்தீர்ப்பு வந்துள்ளது.

★ குஜராத் மாநில அகமதாபாத் மாவட்டம், தண்டுகா வட்டத்திலுள்ள கிராமம் அனியாலி. மேல் சாதி ராஜபுத்திரர்கள் அதிகமாகவும், ஆதிக்கமாகவும் உள்ள ஊர். தாழ்த்தப்பட்டவர் ஒருவருக்கும் மேல்சாதிக்காரர் ஒருவருக்கும் வாடகை சைக்கிள் எடுத்ததில் பிரச்சினை ஏற்பட்டு தாழ்த்தப்பட்டவரை அடித்து நொறுக்கி விட்டனர் ராஜபுத்திரர்கள். ராஜபுத்திரர் மீது வழக்குக் கொடுத்த போது காவல் நிலையத்தில் வழக்குப் பதிய மறுத்துவிட்டனர். அதன் பின் தொடர்ந்த மோதலில் தாழ்த்தப்பட்டவர்கள் 70 குடும்பத்தினரும் தமது வீடுகள், உடைமைகள், உயிருக்கு உத்தரவாதமற்ற நிலையில் அக்கிராமத்தையே காலி செய்து வேறு நகர்ப்புறம் சென்று விட்டனர். இலவசமாக அக்கிராமத்தில் விவசாய நிலம் தருவதாக அரசு உறுதி கூறிய பின்னும் அவர்கள் பயந்து, வர மறுத்து விட்டனர்.

குறிப்பாக தண்டுகா வட்டத்தில் நிலவும் கொடூரமான கட்டாய உழைப்பு, பாலியல் வன்முறைகள், சாதியக் கொடூரங்களால் 20 ஆண்டுகளுக்கு முன் 26 சதவீதமாயிருந்த தாழ்த்தப்பட்டவர்கள் தொகை இன்று 11 சதவீதமாக குறைந்துள்ளது.

Published and Owned by R. SHANMUGARAJ, 25 Arunachalam St., Jothiramalinga Nagar, Chennai - 600 083.
Printed by him at EZHIL PRINTS, 110, II Floor, 63, Arcot Rd., Chennai - 600 024. Editor: R. SHANMUGA RAJ

படிப்பகம்

www.padippakam.com

PUTHIYA JANANAYAGAM R.N. 42648/85 Regd. No. TN/MS(S) 622/97

# இதுதான் இன்றைய இந்தியா



இதோ இந்தப் படத்தில் பச்சிளம் குழந்தையுடன் குடும்பமே செங்கல் சூளையில் வேலை செய்கிறது.

உளுந்தூர்பேட்டையைச் சேர்ந்த 35 வயது காளிமுத்து வாங்கிய கடன் 5000 ரூபாய். இதற்கு 1 லட்சம் செங்கற்கள் அறுத்துத் தர வேண்டும். தனி நபராகச் செய்ய முடியாது. எனவே குடும்பமே சேர்ந்து வேலை செய்கிறது. 9 வயது மகள் களிமண்ணைச் சுமந்து தர, பெற்றோர் செங்கல் அறுக்கின்றனர். 13 வயது மகன் அதைச் சமப்படுத்தி சீர் செய்கிறான்.

இவர்கள் அதிகாலை 3 மணிக்கு எழுந்து வேலையைத் தொடங்குகின்றனர். செங்கல் அறுக்க மதியத்திற்கு மேலாகிவிடும். அது காய வேண்டுமே அந்த நேரம் தான் சாப்பாடு. காலை உணவு அவர்களுக்கு மறந்தே போனது. அதன் பின் காய்ந்த செங்கலை அடுக்கி வைப்பது, சூளை வேலைகள். மாலையில் சாப்பாடு தயாரிப்பது.

இரவில் ஒண்டுக் குடிசையில் நெருக்கியடித்துப் படுத்தால் 4 மணி நேரம்தான் அதிகபட்ச தூக்கம். திரும்ப அதிகாலை 3 மணியில் இருந்து வேலை...

காளிமுத்துவின் குடும்பம் இப்படி கொத்தடிமையாக உழல்வது தமிழகத்தின் எங்கோ ஒரு மூலையில் அல்ல. அரசு இயந்திரமும் அதிகாரிகள் பட்டாளமும் குவிந்து கிடக்கும் சென்னைக்கு அருகேயுள்ள பூந்தமல்லியில் தான். இங்குள்ள 350 செங்கல் சூளைகளில் ஆயிரக்கணக்கான தொழிலாளர்கள் குடும்பம், குடும்பமாக உழைத்துத் ஓடாய்த் தேய்ந்து வருகின்றனர். எவ்வளவு விரைவாகக் கடன் தீர்கிறதோ, அத்துணை விரைவில் இத்தொழிலாளர்கள் 'சுதந்திர' காற்றை சுவாசிக்கலாம்.

ஆனால், கடனை அடைப்பது அவ்வளவு எளிதானதல்ல. இராஜபாளையத்தை சேர்ந்த 41 வயது அருளப்பன் ஒரு வ கட்ட ரூ. 30,000/- கடன் வாங்கின அதை அடைக்க குடும்பத்தோடு மூன் டிய ஓய்வு ஒழிச்சலின்றி உழைத்தார். அடைத்து ஊர் திரும்பியவர் மகன் ணத்திற்கு ரூ. 10,000/- கடன் வ மருமகளுடன் உழைத்துக் கடனை வந்து விட்டார். இது முடிந்தால் அ மகள் திருமணம். இப்படி புதை சே குள் சிக்கிப் போனது இவர்கள் வாழ்

இதோ இந்தப் பட அடித்துக் கொள்வது தமிழ் பட நடிகர்கள். நடிகர் சங்கத் வர் ராதாரவி கோஷ்டியும், சி ஆர்ட்டிஸ்ட் யூனியன் விஜயகுமார் கோஷ்டியும் மோதிக் கொள்கின்றனர். நடிகர் சங்கத்தை யார் கைப்பற்றுவது என்பதே போட்டி.

இச் சங்கத்திற்கு 2.35 கோடி ரூபாய் கடன் உள்ளது. கோடி கோடியாகச் சம்பாதிக்கும் நடிகர்களுக்கு இது அற்பம்தான். ஆனால் கருணாநிதி அரசு 35 லட்ச ரூபாய் கடனைத் தள்ளுபடி செய்தது. 1 கோடி ரூபாய் மான்யமாகக் கொடுத்து, 1 கோடி ரூபாய் வட்டியில்லாக் கடனாகக் கொடுத்துள்ளது.

ஒருபுறம், ஆபாச வக்கிரங்களையும் வன்முறைகளையும் படமாக்கி இளைய தலைமுறையைச் சீரழிக்கும் நடிகர் சங்கத்திற்கு கோடிக்கணக்கில் மான்யம், கடன் தள்ளுபடி. மறுபுறம், குழந்தையைப் பள்ளிக்குக் கூட அனுப்ப இயலாமல் வாங்கிய கடனை அடைக்க குடும்பத்துடன் ஓய்வு ஒழிவின்றி உழைத்து ஓடாய்த் தேயும் உழைப்பாளி மக்கள். இந்த அவலநிலை இனியும் நீடிக்க அனுமதிக்கலாமா?



படிப்பகம்